வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
வார மலர்

Email : news@eelanadu.lk | மலர் : 06 | 12.01.2025 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 12 | பக்கங்கள் : 16



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# எல்லையை தாண்டி மீன்பிடிப்பதை தமிழக முதல்வர் தடுக்கவேண்டும்!

## யாழ். கடற்றொழிலாளர் சங்கங்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜனவரி 12

**இந்திய மீனவர்களை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யுமாறு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கோருவதனை ஏற்றுக்கொள்ள முடியாது என யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.**

**தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபடுவதை தமிழக முதல்வர் தடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.**

யாழ்ப்பாணத்திலுள்ள அந்த சம்மேளனத்தின் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர்கள் இதனைக் குறிப்பிட்டனர்.

இந்திய மீனவர்கள் எங்களது வளங்களை சூறையாடுவதுடன், வாழ்வாதாரம், மனிதாபிமானம் என்று தொடர்ச்சியாக பொய்களை கூறி, இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கின்றனர்.

எனவே இந்திய கடற்படையினை கொண்டு அவர்களை எல்லை மீறி மீன்பிடியில் ஈடுபடுவதைக் கட்டுப்படுத்துவதற்கு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர். (அ)

## அநுரகுமாரவின் சீனப் பயணத்தை அவதானிக்கும் இந்திய ஊடகங்கள்

பீஜிங், ஜன. 12



இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் சீன விஜயத்தை, இந்திய இந்திய ஊடகங்கள் உன்னிப்பாக உற்றுநோக்குவது அவர்களின் பதற்றத்தை வெளிப்படுத்துகின்றது என சீனாவின் குளோபல் ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கின் அழைப்பின் பேரில், இலங்கை ஜனாதி பதி அநுரகுமார திஸாநாயக்க எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை, சீனாவுக்கு விஜயம் செய்ய வுள்ளார் என சீனாவின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஹ வா சுன் யிங் கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

அநுரகுமார திஸாநாயக்க, ஜனாதி பதியாக பதவியேற்ற பின்னர் சீனாவுக்கு மேற்கொள்கின்ற முதலாவது விஜயம் இதுவாகும்.

இந்த விஜயம், சீனா - இலங்கை

15

## கட்டுநாயக்க விமான நிலையத்தில் தடுத்துநிறுத்தப்பட்ட சிறீதரன் எம்.பி.

கொழும்பு, ஜன. 12

சென்னையில் இன்று நடைபெறவுள்ள தமிழ்நாடு அரசின் அயலக தமிழர் தின விழாவில் பங்கேற்பதற்காக நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து புறப்பட முயன்ற பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தடுத்து நிறுத்தப்பட்டார்.

தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் நடைபெறும் விழாவில் சிறீதரன் சிறப்பு விருந்தினராக பங்கேற்கிறார். இந் நிலையில், குற்றப்புலனாய்வுத் துறையின் மூலம், சிறீதரனுக்கு பயணத் தடை விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

சிறீதரனின் பழைய கடவுச்சீட்டில் பிழை இருப்பதாகக் கூறி, குடிவரவு குடியகல்வு அதிகாரிகள், அவரின் பயணத்தை தடுத்து நிறுத்த முயன்றதாகக் கூறப்படுகிறது.

15

## கிளிநொச்சி துயிலும் இல்லத்தை நிர்வகிப்பது தொடர்பில் சர்ச்சை

கிளிநொச்சி, ஜன. 12

கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தை நிர்வகிப்பது யார் என்ற சர்ச்சையில் அமைதியின்மை எழுந்த நிலையில் பொலிஸார் தலையீடு செய்து அமைதியை ஏற்படுத்தினர். கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்பதற்காக மாவீரர்

15



## இனி அரிசி இறக்குமதி செய்யப்படமாட்டாது!

கொழும்பு, ஜன.12

அரிசி இறக்குமதி செய்வதற்கு இனி எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட மாட்டாது என்று வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஆர்.எம். ஜயவர்தன தெரிவித்தார்.

நேற்று லுனுகம்வெஹெர, பன்னேகமுவ பிரதேசத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே பிரதி அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், நாட்டுக்கு அரிசி இறக்குமதி செய்வது தொடர்பான சுற்றறிக்கை மேலும் நீட்டிக்கப்படாது என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

15

## தற்போது அநுரகுமாரவின் அரசு பதற்றமடைய ஆரம்பித்துள்ளது!

### பொதுஜன பெரமுன சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 12

தேசிய மக்கள் சக்தி அரசு தற்போது பதற்றமடைய ஆரம்பித்திருப்பதாகவும் அவர்கள் ஊடகங்களை கையாளும் விதத்தில் இது தெளிவாகின்றது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் குறிப்பிடுகையில்-

அண்மைக் காலமாக அரசின் பிரதிநிதிகள் சிலர் ஊடகங்களுடன் முரண்பட்டு வருகின்றனர்.

குறிப்பாக ஊடகத்துறை அமைச்சர் நளிந்த

15

## உள்ளூராட்சித் தேர்தலுக்காக கூட்டணி அமைப்பு மும்முரம்!

கொழும்பு, ஜன. 12

உள்ளூராட்சிச்சபைத் தேர்தலுக்காக கூட்டணி அமைத்து களமிறங்குவதற்கான பேச்சு தெற்கு அரசியல் களத்தில் முழு வீச்சுடன் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தி, திசைக்காட்டி சின்னத்தில் களமிறங்கும் நிலையில், பாரிய கூட்டணிக்குரிய முயற்சியில் எதிரணிகளே ஈடுபட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பவற்றை ஒன்றிணைக்கும் முயற்சி இடம்பெற்று வருகின்றது.

அத்துடன், இடதுசாரி கட்சிகளை

15

## தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒற்றுமை மிகவும் அவசியம்!

### சித்தார்த்தன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜன, 12

"தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள அனைவரும் ஒற்றுமைப்பட வேண்டியது மிகவும் அவசியம். அவ்வாறு ஒற்றுமைப்படுவதே தமிழினத்துக்குப் பெரும் பலமாக இருக்கும்."

- இவ்வாறு புளொட் கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

ஒற்றுமையின் ஊடாக ஏற்படுகின்ற பலத்தைக்

15

## வாகனங்களின் விலை 50வீதம் வரை உயரும்!

கொழும்பு, ஜன. 12

இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் விலை எதிர்காலத்தில் 50 சதவீதம் வரை அதிகரிக்கக்கூடும் என இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் இந்திக சம்பத் மெரெஞ்சிகே சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐந்து ஆண்டுகளாக இடைநிறுத்தப்பட்டிருந்த வாகன இறக்குமதியை மீண்டும் ஆரம்பித்த பின்னர் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் இறக்குமதி செய்யப்படும் அனைத்து வாகனங்களுக்கான

15

## நாட்டின் நிதி நிலவரத்தை பகிரங்கப்படுத்தவேண்டும்

### சம்பிக்க ரணவக்க அரசிடம் கோரிக்கை

கொழும்பு, ஜன. 12

2025 ஆம் ஆண்டு 4500 பில்லியன் ரூபா வரையில் அரச வருவாயை திரட்டிக் கொள்ள வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்துக்கு அறிவுறுத்தியுள்ளது. வரி அதிகரிப்பை தவிர்த்து அரசவரு வாய் அதிகரிப்புக்கு அரசாங்கத்திடம் எவ்வித திட்டங்களும் கிடையாது. நாட்டின் நிதி நிலைவரத்தை அரசாங்கம் பகிரங்கப் படுத்த வேண்டும் என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், முன்னாள்

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் ஹெரோயினுடன் இளைஞன் ஒருவர் கைது



யாழ்ப்பாணம், ஜன.12

யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் பெருந்தொகை ஹெரோயின் போதைப்பொருளுடன் இளைஞன் ஒருவர் நேற்றுச் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த 27 வயது இளைஞனே யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் இருந்து 60 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டது. யாழில் நீண்ட காலத்தின் பின்னர் கைப்பற்றப்பட்ட பெருந்தொகை ஹெரோயினாக இது கருதப்படுகிறது.

சந்தேக நபரை தடுத்து வைத்து விசாரிக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (எ)

## யாழில் பட்டாசு கொளுத்திய இருவர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், ஜன.12

நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் விதத்தில் பட்டாசு கொளுத்திய இருவர் யாழ். பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளிக்கிழமை பருத்தித்துறை பகுதியில இடம் பெற்ற மரணச் சடங்கு ஒன்றின் போது பருத்தித்துறை துறைமுகத்துக்கு அருகாமையில் அதிக சத்தமாக பட்டாசுகள் வெடிக்கவிடப்பட்டன.

இந்த சத்தம் காரணமாக பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குகளை கொண்டு நடத்த முடியாமல் இருந்ததனால் முற்பகல் 11:50 மணிக்கு நீதிமன்ற நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டு நீதிமன்ற பொலிஸார் ஊடாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து விரைந்து செயல்பட்ட பொலிஸார் பட்டாசு கொளுத்திய இருவரை கைது செய்தனர். இதனால் 25 நிமிடங்களின் பின்னர் நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்ந்தன.

கைது செய்யப்பட்ட இருவரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இது தொடர்பான வழக்கு எதிர்வரும் 15 ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படும் போது இரு வரும் ஆஜர்படுத்தப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)



## ஹரி ஆனந்தசங்கரியுடன் தமிழரசு எம். பிகள் சந்திப்பு

வவுனியா, ஜன.12

கனடா அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரியை இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளடங்கிய குழுவினர் சந்தித்து கலந்துரையாடினர்.

தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் ப. சத்தியலிங்கம், சி சிறிநேசன், எஸ். சிறீநாத், க. குகதாசன் மற்றும் து. ரவிகரன் ஆகியோர் சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது, இலங்கையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னரான தமிழ் மக்களின் நிலை, தற்போதைய ஆட்சியாளர்களின் அரசியல் போக்கு மற்றும் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பில் கனடா அரசாங்கத்திடம் தமிழர்களுடைய எதிர்பார்ப்பு என்பன தொடர்பிலும் ஆழமாக ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-10)

# வினாத்தாளில் பிழைகள் விரைவில் தீர்வு வேண்டும்

### பிரதமரிடம் சத்தியலிங்கம் எம். பி. கோரிக்கை

வவுனியா, ஜன.12

வவுனியா பல்கலைக்கழகத்தின் தேவைகள் மற்றும் உயர்தர உயிரியல் பாட வினாத்தாளில் காணப்படும் பிழைகள் தொடர்பிலும் பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரியவிடம் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் ப. சத்தியலிங்கம் சுட்டிக்காட்டியுள்ளதுடன் விரைவில் தீர்வைப் பெற்றுத் தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் பிரதமருடன் இடம்பெற்ற தனிப்பட்ட சந்திப்பின் போது அவர் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் சத்தியலிங்கம் மேலும் தெரிவிக்கையில்,

"வவுனியா பல்கலைக்கழகத்தின் வசதியீனங்கள், பணியாளர்கள் எதிர்நோக்கும் விடயங்கள், பல்கலைக்கழகத்துக்குத் தேவையான கட்டுமானங்கள் மற்றும் மாணவர்கள் எதிர்நோக்கும் விடுதியின்மை தொடர்பான பிரச்னைகள் தொடர்பிலும் இந்தச் சந்திப்பின்போது கல்வி அமைச்சர் என்ற முறையில் பிரதமரிடம் எடுத்துக்கூறியிருந்தேன்.

மாணவர்களின் விடுதிப் பிரச்னைக்கு உடனடி தீர்வாக பல்கலைக்கழகத்துக்கு முன்பாக இருந்த இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் வெளியேறியிருப்பதன் காரணமாக அங்கு காணப்படும் பெரும் கட்டடங்களில் மாணவர் விடுதியை தற்காலிகமாக இயக்குவதற்கான இயலுமைகள் தொடர்பிலும் குறித்த இடத்தை வனவளத் திணைக்களத்திடமிருந்து விடுவிப்பது தொடர்பிலும் பிரதமரோடு கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை, உயர்தரப் பரீட்சையில் உயிரியல் பாட வினாத்தாளில் தொடர்ந்தும் அதிகமான பிழைகள் காணப்படுகின்றமை தொடர்பிலும் சுட்டிக்காட்டியதோடு இது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் கோரிக்கை விடுத்துள்ளேன்"- என்றார். (எ-10)

## கோப் குழுவை புறக்கணிக்க எதிர்க்கட்சியினர் தீர்மானம்

### அஜித் பி. பெரேரா தகவல்

கொழும்பு, ஜன.12

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவை கோப் குழுவை புறக்கணிக்க எதிர்க்கட்சியினர் தீர்மானித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற குழுவுக்கு உறுப்பினர்களை நியமிப்பதில் பாரம்பரிய நடைமுறைகள் மீறப்பட்டதால் இந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

கோப் குழுத் தலைவர் பதவிக்கு ஒருமனதாக நியமனம் செய்யப்பட்டதாகக் கூறப்பட்டாலும், அது ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்கேற்புடன் மட்டுமே செய்யப்பட்டதாக அவர் கூறினார்.

தற்போதைய சூழ்நிலையில் ஏனைய பாராளுமன்றக் குழுக்களில் பங்கேற்கப் போவதில்லை என்ற நிலைப்பாட்டில் எதிர்க்கட்சி இருப்பதாகவும் அவர் கூறினார். (எ)

## வவுனியாவில் இசை நிகழ்வு

வவுனியா, ஜன.12

வவுனியா அற்புத ஐயனார் ஆலய வருடாந்த திருவிழாவை முன்னிட்டு மாபெரும் இசை நிகழ்வு நடைபெறவுள்ளது.

குறித்த இசை நிகழ்ச்சி ஐயனார் விளையாட்டுக்கழகம் மற்றும் வர்த்தகர்களின் ஏற்பாட்டில் எதிர்வரும் 17 ஆம் திகதி கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. (எ-10)

# யாழ். பல்கலைக்கழகத்தில் நினைவேந்தல் நிகழ்வுகள்






யாழ்ப்பாணம், ஜன.12

மலையக தியாகிகள் தினம் மற்றும் உலகத் தமிழாராச்சி மாநாட்டு படுகொலை 51 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றன.

தேயிலைச் செடிகளின் நடுவே உழைப்புச் சுரண்டல்களுக்கும் அடிப்படை உரிமை மீறல்களுக்கும் உள்ளாக்கி அடிமைப்படுத்தப்பட்ட மலையகத் தமிழ் மக்களுடைய உரிமை அரசியல் விடுதலைக்கான பயணத்தில் தம்முயிர் தந்த எம்மவர்களை நினைவேந்தும் மலையக தியாகிகள் தினமும், 1974 ஆம் ஆண்டு நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் பொலிஸாரால் அரங்கேற்றப்பட்ட படுகொலைகளால் தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்ட கொடூரம் நிகழ்ந்து 2025 ஆம் ஆண்டுடன் 51ஆண்டுகள் ஆகின்றன. இன்றுவரையில் படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கான நீதி என்பது மறுக்கப்பட்டதொன்றாகவே நீள்கின்றது. இந்த நிலையில், மலையக தியாகிகள் தினம் மற்றும் 4ஆவது உலகத் தமிழாராச்சி மாநாட்டு படுகொலை நினைவேந்தல்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் பல்கலைக்கழக பொதுத் தூபியில் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி விபத்துகளில் சிக்கிய 12ஆயிரம் பேர் உயிரிழப்பு

## ஜனாதிபதி செயலணி அவசியம்

கொழும்பு, ஜன.12

**2024ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரை கடந்த ஐந்து ஆண்டுகளில் நாட்டில் ஓர் இலட்சத்து 18 ஆயிரத்து 240 வீதி விபத்துகள் இடம்பெற்றதோடு, இந்த விபத்துகளில் சிக்கிய 12,140 உயிரிழந்தனர். இந்த நிலையில் வீதி விபத்துகளை தடுக்க ஜனாதிபதி செயலணி உருவாக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.**

வருடாந்தம் வீதி விபத்துகளால் உயிரிழப்புகள் பெருமளவில் அதிகரித்து வருவது கவலையளிப்பதாக கராபிட்டிய மருத்துவமனையின் சட்ட வைத்தியத்துறையின் சிரேஷ்ட பேராசிரியர் யூ.சி.பி. பெரேரா தெரிவித்தார்.

2020ஆம் ஆண்டு இடம்பெற்ற 23,704 விபத்துகளில் 2,363 பேர் உயிரிழந்தனர்.

2021ஆம் ஆண்டில் இடம்பெற்ற 22,847 விபத்துகளில் 2,557 பேர் உயிரிழந்தனர்.

2022ஆம் ஆண்டு இடம்பெற்ற 21,953 விபத்துகளில் 2,540 பேர் உயிரிழந்தனர்.

2023ஆம் ஆண்டு இடம்பெற்ற 24,877 வீதி விபத்துகளில் 2,321 பேர் உயிரிழந்தனர்.

2024ஆம் ஆண்டு இடம்பெற்ற 24,859 வீதி விபத்துகளில் 2,359 பேர் உயிரிழந்தனர்.

பல்வேறு வகையான வீதி பாதுகாப்புத் திட்டங்கள் இருந்தபோதிலும் வீதி விபத்துகள் மற்றும் இறப்பு விகிதம் அதிகரித்து வருவது கவலையளிக்கிறது.

மேலும், வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. 2020ஆம் ஆண்டில் பதிவாகியுள்ள விபத்துகளின் விகிதத்தை 50 வீதம் குறைக்கும் இலக்குடன் ஐக்கிய நாடுகள் சபை வழிகாட்டுதல்களை வகுத்துள்ளது. இருப்பினும், விபத்துகள் 100 வீதம் அதிகரித்துள்ளது.

சனத்தொகை மற்றும் நிலப் பரப்பின் விகிதத்தின் அடிப்படையில், தெற்காசியாவில் விபத்துகள் இடம்பெறும் வீதம் அதிகரித்துக் காணப்படும் நாடாக இலங்கை விளங்குகிறது.

நாட்டைப் பாதிக்கும் இந்தப் பாரிய பிரச்னையைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி செயலணியொன்று உருவாக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானது. இல்லையெனில், அது கடுமையான சமூக நெருக்கடியைத் தூண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (எ)

# தனஞ்சயவின் சகோதரன் மீது கொலைவெறித் தாக்குதல்

கொழும்பு, ஜன.12

இலங்கை கிரிக்கெட் வீரர் தனஞ்சய டி சில்வாவின் சகோதரன் சாவித்ர சில்வா மீது கூர்மையான ஆயுதத்தால் கொலைவெறித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 7. 30 மணியளவில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலை, பாதாள உலகக் குழுவுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் ரத்மலானே சுத்தா என்று அழைக்கப்படும் இந்திக சுரங்க சொய்சா மேலும் சிலருடன் இணைந்து மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலில் காயமடைந்த சாவித்ர சில்வா, மொறட்டுவை லுனாவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் கல்கிஸை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(எ)

# கம்பஹா நகர சபையின் முன்னாள் உறுப்பினர் கைது

கொழும்பு, ஜன.12

செசி இலக்கம் மற்றும் இயந்திரம் என்பனவற்றை மாற்றி சட்டவிரோதமாக ஒன்று சேர்க்கப்பட்ட 400இற்கும் மேற்பட்ட வாகனங்களை விற்பனை செய்த வலையமைப்பு ஒன்றுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வலான மத்திய ஊழல் ஒழிப்புப் பிரிவினரால் மீரிகம பகுதியில் வைத்து இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் கம்பஹா நகர சபையின் முன்னாள் உறுப்பினர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)



# பசறையில் பஸ் விபத்து பயணிகள் 12 பேர் காயம்

பதுளை, ஜன.12

கொழும்பிலிருந்து பசறை நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்று பசறையில் உள்ள 15ஆவது தூண் பகுதியில் விபத்துக்குள்ளானது. சாரதி தூங்கியதால் இந்த விபத்து ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

பேருந்து வீதியை விட்டு விலகி முன்பக்க பகுதி பள்ளத்தை நோக்கி வழுக்கிச் சென்று நின்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த 13 பேர் பசறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து நேற்றுக் காலை 6. 30 மணியளவில் இடம்பெற்றது. (எ)

# எந்தவொரு கட்சிக்கும் ஆதரவு வழங்கத்தயார்

## நாமல் ராஜபக்ஷ அறிவிப்பு

கொழும்பு, ஜன.12

நீண்டகாலமாகத் தீர்க்கப்பட முடியாமல் தொடரும் மலையக மக்களின் அடிப்படைச் சம்பளப் பிரச்னைகள் தொடர்பில் எந்தவொரு கட்சியும் முன்னெடுக்கும் ஆக்கபூர்வமான தீர்மானங்களுக்கு சிறீலங்கா பொதுஜன பெரமுன தனது முழு ஆதரவையும் வழங்குமென பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

எமது ஆட்சிக் காலத்தில் நாம் மலையக மக்களைக் கைவிடவில்லை. அன்றைய பொழுதில் அம்மக்களுக்குத் தேவையான சம்பள உயர்வை முடிந்தளவு பெற்றுக் கொடுத்தோம்.

ஆனால், இன்றைய ஆட்சியாளர்களினால் அம்மக்களின் அடிப்படைச் சம்பளப் பிரச்னையைத் தீர்ப்பதற்கான எந்த வித நகர்வையும் மேற்கொள்ள முடியவில்லை.

இருந்தபோதிலும், இச்சம்பளப் பிரச்னை தொடர்பில் எந்தக் கட்சியேனும் ஆக்கபூர்வமான முன்னகர்வைக் கொண்டுவந்தால் அதற்கான முழு ஒத்துழைப்பையும் வழங்க நாம் தயாராக இருக்கின்றோம்

அடிப்படைச் சம்பளத்தை அதிகரிப்பதற்குரிய இலகு நிலையை கம்பனிகளுக்கும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இலங்கைத் தேயிலைக்கான சந்தை வாய்ப்பை உலகளாவிய ரீதியில் அதிகரிப்பதற்கான சூழ் நிலையை கம்பனிகளுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதனூடாக இங்குள்ள தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த முடியும்.

எனவே, இந்த விடயம் தொடர்பிலும் அரசாங்கம் கூடிய கவனம் செலுத்தவேண்டும் - என்றார். (எ)

# வடக்கில் நிலவும் வெற்றிடங்களுக்கு வேறு மாகாணத்தவர்கள் நியமனம்!

வடமராட்சி ஜன11

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மாணவர்கள் சில துறைகளை உயர்கல்விக்காக தெரிவு செய்யாதமையால் இங்குள்ள வெற்றிடங்களுக்கு வேறு மாகாணத்தைச் சேர்ந்தவர்களை நியமிக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது என வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ். கல்விக் கண்காட்சி - 2025 திறப்பு விழா நேற்றுச் சனிக்கிழமை காலை தனியார் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

இதில், உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

முன்னைய காலத்தில் இலங்கையின் அரச பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகும் குறிப்பிட்ட தொகையானவர்களுக்கு மாத்திரமே உயர்கல்விக்கான வாய்ப்பு இருந்தது. ஆனால், இன்று அந்த நிலைமை மாறியுள்ளது. தற்போது அரச பல்கலைக்கழக வாய்ப்பு கிடைக்காத மாணவர்களும் உயர்கல்வியைக் கற்பதற்கான வாய்ப்பு பரந்தளவில் கிடைக்கிறது. அதனைச் சரிவரப் பயன்படுத்த வேண்டும். எமது முயற்சி மற்றும் தேடலில்தான் உயர்கல்வித் தெரிவு இருக்கின்றது .

பொருத்தமான துறைகளை தெரிவு செய்வதன் ஊடாக வேலை வாய்ப்பை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

வடக்கு மாகாணத்தின் முக்கிய சொத்து கல்வியே. இவ்வாறான கல்விக் கண்காட்சிகள் எமது மாகாண மாணவர்களின் எதிர்காலத்துக்கு சிறப்பானவை என்றும் இவை தொடர வேண்டும் எனவும் ஆளுநர் வலியுறுத்தினார். (எ- 02)

# காரைதீவு - மாவடிப்பள்ளி பிரதான வீதி இருளில் மூழ்குவதால் மக்கள் சிரமம்!

காரைதீவு, ஜன.12

காரைதீவு பிரதேச சபைக்குட்பட்ட அம்பாறை - மாவடிப்பள்ளி பிரதான வீதியில் பொருத்தப்பட்டுள்ள மின் விளக்குகள் பல நாட்களாக ஒளிராமையால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் தற்போது அடைமழை ஆரம்பித்துள்ள நிலையில் இப்பகுதி இருளில் முழ்குவதால் வீதியில் பயணிக்கும் வாகனங்களின் சாரதிகள் உட்பட பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். மேலும், காரைதீவு - மாவடிப்பள்ளி பிரதான வீதியில் கடந்த வருட இறுதியில் ஏற்பட்ட பெரு வெள்ளம் காரணமாக 6 மாணவர்கள் உட்பட எட்டுப் பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

இதுதவிர இப்பகுதியில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதால் மாவடிப்பள்ளி பெரிய பாலம் முதல் காரைதீவு முச்சந்தி வரையிலுள்ள பகுதியில் பயணிக்கும் மக்கள் பெரும் அவலங்களை எதிர்கொள்வதாக கூறினர்.

அத்தோடு, பெரிய பாலம் தொடக்கம் மாவடிப்பள்ளி சியாரம் வரையில் பொருத்தப்பட்ட மின்விளக்குகள் இரண்டு மணித்தியாலங்கள் தொடர்ந்து ஒளிந்த பின் மீண்டும் இணைப்பு துண்டிக்கப்பட்டு ஒளிராமல் பல சிரமங்கள் ஏற்படுகின்றன.

மழை அதிகரிக்கும் போது வீதிக்கு மேல் வெள்ள நீர் பெருக்கெடுத்து ஓடுவதனால் பாம்பு, முதலைகள் போன்றவைகளின் அச்சுறுத்தலும் ஏற்படுகின்றன.

எனவே, இவ்வீதியின் மின்விளக்குகள் தொடர்ந்தும் ஒளிர்வதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# ரஷ்ய சுற்றுலாப் பயணி கடலில் மூழ்கி உயிரிழப்பு

மட்டக்களப்பு, ஜன.12

மட்டக்களப்பு, பாசிக்குடா கடலில் நீராடச் சென்ற ரஷ்ய நாட்டு சுற்றுலாப் பயணி கடல் அலையில் இழுத்துச் செல்லப்பட்டு நீரில் மூழ்கி உயிரிழந்தார் என கல்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

ரஷ்ய நாட்டைச் சேர்ந்த 65 வயது கரிசன் ஓ என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இலங்கைக்கு சுற்றுலாப் பயணம் மேற்கொண்ட குறித்த நபர் பாசிக்குடா கடலில் தத்தளித்துக் கொண்டிருந்ததை அவதானித்த அங்கிருந்த கடற்படையினர் உடனடியாக செயல்பட்டு அவரை மீட்டு கரைக்கு கொண்டு வந்தனர்.

இருப்பினும், அவர் உயிரிழந்தார். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருளை ஒழிக்க பொலிஸார் புதிய தீர்மானம்

கொழும்பு, ஜன.12

**போதைப்பொருள் தொடர்பான வழக்குகளின்போது அரச பகுப்பாய்வாளர்களின் விரைவான சேவைகளைப் பெற்றுக்கொள்ள பொலிஸார் திட்டமிட்டுள்ளனர்.**

அரசாங்க பகுப்பாய்வாளர் சந்தியா குமுதுனி ராஜபக்ஷ மற்றும் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு பொலிஸ் தலைமையகத்தில் நடைபெற்றது.

இதன்போது, போதைப் பொருள் தொடர்பான மற்றும் பல்வேறு வழக்கு விசாரணைகளின் போது பொலிஸார், அரசு பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் சேவைகளை பெற்றுக் கொள்ள திட்டமிட்டுள்ளனர்.

மேலும், சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள், அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் பல்வேறு பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் உயர் அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர். (எ)

# தேசிய ஒலிம்பிக் குழு பொது செயலர் நீக்கம்



கொழும்பு, ஜன.12

தேசிய ஒலிம்பிக் குழுவின் பொதுச் செயலாளர் மெக்ஸ்வெல் சில்வா, உடன் அமுலாகும் வகையில் அந்தப் பதவியிலிருந்து விளையாட்டுத்துறை அமைச்சால் பணி இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

தேசிய ஒலிம்பிக் குழுவின் தலைவர் சுரேஷ் சுப்பிரமணியம் இந்த விடயத்தை உறுதிப்படுத்தியுள்ளார்.

மெக்ஸ்வெல் சில்வாவுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் விசாரணை ஒன்றுக்கு அமைய, அவர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# நீர்த்தேக்கத்தில் பெரும் உடைப்பு

## 30 குடும்பங்கள் வெளியேற்றம்

அநுராதபுரம்,ஜன.12

அநுராதபுரம் மாவட்டத்தின் கலேன்பிந்துனு வெவ பகுதியில் உள்ள அளுத்திவுல்வெவ குளத்தின் கரை சேதமடைந்துள்ளதால், அப்பகுதியிலிருந்து 30 குடும்பங்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாகப் பெய்து வரும் கனமழை காரணமாக, அளுத்திவுல்வேவ நீர்த்தேக்கம் நிரம்பி வழிந்ததால், நீர்த்தேக்கத்தின் மதகு அருகே மண்சரிவு ஏற்பட்டது.

நேற்றுக் காலை முதல் நீர் கசிவு ஏற்பட்டு, தற்போது பெரிய நீர்நிலையாக மாறியுள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

தற்போதைய சூழ்நிலையில், திவுல்வெவ மகா வித்தியாலயத்தை மூடவும், லென்பிந்துனுவெவவிலிருந்து துட்டுவெவ யக்கல்ல வரையிலான பிரதான வீதியில் போக்குவரத்தை நிறுத்தவும் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இருப்பினும், இதனால் ஏற்படும் சேதத்தைக் குறைக்க பொலிஸார், இராணுவம் மற்றும் அப்பகுதி மக்கள் இணைந்து நேற்றுக் காலை முதல் மணல் மூடைகளை அடுக்கி வைத்த போதிலும் வெளியேறும் நீரை நிறுத்த அவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. (எ)

# ஊடகவியலாளர்மீது தாக்குதல் உரிய விசாரணை வேண்டும்

## பத்திரிகையாளர்களை பாதுகாக்கும் குழு

வாஷிங்டன், ஜன.12

ஊடகவியலாளர் முருகையா தமிழ்ச்செல்வன் தாக்கப்பட்டு கடத்த முற்பட்ட சம்பவம் தொடர்பில் இலங்கை அதிகாரிகள் பாரபட்சமற்ற விரைவான விசாரணை நடத்த வேண்டுமென அமெரிக்காவின் நியூயோர்க்கை தளமாக கொண்டு இயங்கும் பத்திரிகையாளர்களை பாதுகாக்கும் குழுவின் திட்ட இயக்குநர் கார்லோஸ் மார்டினெஸ் டி லாசெர்னா அறிக்கை ஒன்றின் மூலம் கோரிக்கை விடுத்துள் ளார்.

ஊடகவியலாளர் தமிழ்ச்செல்வன் கடந்த டிசெம்பர் 26 ஆம் திகதி கிளிநொச்சி நகரில் வைத்து தாக்கப்பட்டு கடத்த முயற்சிக்கப்பட்டுள்ளார். இருப்பினும், அவர் அதிலிருந்து தப்பியிருக்கிறார்.

இது தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சரத் சமரவிக்கிரசிங்கவை தொடர்பு கொண்டு வினவிய போது அவர் உடனடியாக பதில் கூற முடியாது என தெரிவித்துவிட்டார்.

போதைப்பொருள் மற்றும் சட்டவிரோத மணல் அகழ்வுகள் தொடர்பில் தொடர்ச்சியாக எழுதி வருவதன் காரணமாக தான் தாக்கப்பட்டிருக்கலாம் என எம்மிடம் தமிழ்ச்செல்வன் சந்தேகம் தெரிவித்துள்ளார். இலங்கையில் தமிழ் பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல்களுக்கு தண்டனைகள் கிடைக்காமை தொடர்பில் சி. பி. ஜே. ஆவணப்படுத்தி இருக்கிறது.1983 தொடக்கம் 2009 வரையானகாலப் பகுதியில் உள்நாட்டுப் போர் காரணமாக கொல்லப் பட்ட அதிகளவான பத்திரிகையாளர்கள் தமிழர்கள்.

எனவே, புதிதாக பொறுப்பேற்ற அநுர அரசாங்கம், தமிழ் பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல், துன்புறுத்தல்கள் மற்றும் தண்டனை விலக்களிப்பு என்பனவற்றை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் எனவும் பத்திரிகையாளர்களை பாதுகாக்கின்ற குழுவின் சி. பி. ஜே. திட்ட இயக்குநர் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார்.(எ)

# வாகன அனுமதிப்பத்திரங்களை தயாரித்த மூன்று பேர் சிக்கினர்

பொலநறுவை, ஜன.12

பொலநறுவை மனம்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில், போலி சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் ஏனைய வாகன அனுமதிப் பத்திரங்களை தயாரித்து பணம் பெற்ற சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலநறுவை குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், அவரிடம் இருந்து 19 போலி சாரதி அனுமதிப்பத்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதுடன், அவர் சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் வாகனப் பதிவுப் புத்த கங்களை தயாரித்தமை தொடர் பான தகவல்களும் வெளியாகின.

அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட தகவலின் பேரில், வேரஹெரவிலுள்ள மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்துக்கு அருகில் உள்ள வாகன சாரதிகளுக்கான பயிற்சி நிலையமொன்றின் நடத்துநர் மற்றும் நாரஹேன்பிட்டியிலுள்ள மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்துக்கு அருகில் போலி அனுமதிப்பத்திரம் தயாரித்தவரும் கைது செய்யப்பட்டுள்ளார். (எ)

# உதயங்கவுக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஜன.12

மிரிஹான பிரதேசத்தில், அயல் வீட்டாரை தாக்கிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவுக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, உதயங்க வீரதுங்கவை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நுகேகொட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (எ)

# மதுபானங்கள் மீதான வரி 6 வீதம் அதிகரிப்பு

கொழும்பு, ஜன.12

அனைத்து வகையான மதுபானங்கள் மீதான வரியை 6 வீதத்தால் அதிகரிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

நள்ளிரவு முதல் இந்த வரி அதிகரிப்பு அமுலுக்கு வந்துள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது. (எ)

# நான்கு பிரிவுகளின் கீழ் சிகரெட் விலை உயர்வு!

கொழும்பு, ஜன.12

கலால் வரி அதிகரிப்புடன், ஜனவரி 11 ஆம் திகதி முதல் நான்கு பிரிவுகளின் கீழ் சிகரெட் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய சிகரெட் விலை 5 ரூபாய் முதல் 10 ரூபாய் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. (எ)

# குற்றச்செயல்களுடன் தொடர்பு காத்தான்குடியில் 97 பேர் கைது

மட்டக்களப்பு, ஜன.12

குற்றச்செயல்களுடன் தொடர்புபட்ட 97 பேர் காத்தான்குடி பொலிஸார் நடத்திய திடீர் சுத்திவளைப்பு தேடுதல் நடவடிக்கைகளின் போது கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் வழிகாட்டலில் காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர். எம். ரத்நாயக்கவின் பணிப்புரையின் பேரில் காத்தான்குடி குற்றத்தடுப்புப் பொலிஸார் மற்றும் போதை ஒழிப்புப் பிரிவினர் குறித்த தேடுதல் நடவடிக்கைகளை காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல பிரதேசங்களில் மேற்கொண்டிருந்தனர்.

காத்தான்குடி, புதிய காத்தான்குடி, நாவற்குடா, கல்லடி, புதுக்குடியிருப்பு, தாளங்குடா, ஆரையம்பதி உட்பட பல இடங்களில் இவ்வாற தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது, கேரள கஞ்சா மற்றும் ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்த 10 பேரும், கசிப்பு விற்பனை மற்றும் தயாரிப்பில் ஈடுபட்ட 60 பேரும், அதிவேகமாக வாகனம் செலுத்தியமை உட்பட வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்ட 27 பேருமாக மொத்தம் 97 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

# துறைமுகத்தில் ஒரு நாளைக்கு ரூ.5 கோடி இழப்பு

கொழும்பு, ஜன.12

இலங்கை சுங்கத் திணைக்களத்தில் பொருட்க ளை அகற்றுவதில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக துறை முகத்தில் கொள்கலன் போக்கு வரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், துறைமுகத்துக்கு நாளொன்றுக்கு சுமார் ஐந்து கோடி ரூபாய் இழப்பு ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துறைமுகத்துக்கு வெளியே ஒரே உரிமையின் கீழ் உள்ள மூன்று நிறுவனங்களால் சரக்கு கொள்கலன்களின் சுங்க ஆய்வுகள் தற்போது மேற் கொள்ளப்படுவதாகவும், இதன் விளைவாக பொருட்களை அகற்றுவதில் தாமதம் ஏற்படு வதாகவும் சுங்கத் திணைக்களத் தலைவர் கூறினார். (எ)

# பொங்கலை முன்னிட்டு விசேட ரயில் சேவைகள்

கொழும்பு, ஜன.12

தைப்பொங்கலுடன் இணைந்த வார இறுதி விடுமுறையை கருத்தில் கொண்டு போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக விசேட ரயில் சேவைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதென புகையித சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, கொழும்பு கோட்டையில் இருந்து காங்கேசன்துறை வரையிலும், கொழும்பு கோட்டையில் இருந்து பதுளை வரையிலும் விசேட ரயில் சேவைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, கொழும்பு கோட்டையில் இருந்து பதுளை வரை 12, 14, 17, 19, 24, 26 மற்றும் 31 ஆம் திகதிகளிலும் விசேட ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பெப்ரவரி மாதம் 02 ஆம் மற்றும் 04 ஆம் திகதிகளில் இரவு 7.30மணிக்கு கொழும்பு கோட்டையிலிருந்து விசேட ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்த நிலையில், பதுளையிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கி 12, 14, 17, 19, 24, 26 மற்றும் 31 ஆம் திகதிகளில் இரவு 7.40மணிக்கு ரயில் சேவையை முன்னெடுக்கவுள்ளதாக புகையிரத திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
12.01.2025 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், மார்கழி 28

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## நலிந்து போகும் தமிழர் அரசியல்

தமிழரின் உரிமைசார் அரசியலை தீவிரப்படுத்திய முக்கிய திருப்பு முனை சம்பவமான, தமிழாராய்ச்சி மகாநாடு இடம்பெற்று 51ஆவது ஆண்டுகளாகின்றன. மகாநாட்டின் போது இடம்பெற்ற உயிரிழப்புக்கள் நினைவு கொள்ளப்படுகின்றது. கடந்த பதினைந்து வருடங்களாக படுகொலைகளை நினைவு கொள்வதும் அதனை அலசுவதாகவுமே தமிழர் அரசியல் நகர்ந்திருக்கின்றது.

ஆயுத வழிமுறையின் மூலமான விடுதலையை எதிர்பார்த்த பின்புலத்தில் சிறிலங்கா இராணுவத்தால் நிகழ்த்தப்பட்ட படுகொலைகள் ஒருபுறம் என்றால் மறுபுறமாக ஆயுதங்கள் மூலம் மக்களுக்கு விடுதலையை வழங்கப் புறப்பட்ட ஆயுத விடுதலை இயங்கங்கள் தங்களுக்குள் மோதுண்டு, மக்களுக்கான துப்பாக்கிகளை தங்களுக்குள் நீட்டியதன் விளைவாக இடம்பெற்ற கொலைகள் இன்னொரு புறமாகவும், தமிழர் அரசியலிலிருந்து கொலைகளை பிரிக்க முடியாதளவிற்கு நிலைமைகள் தலைகீழானதே வரலாறு.

இன்று இராணுவத்தால் நிகழ்த்தப்பட்ட கொலைகள் மற்றும் அத்துமீறல்கள் நினைவுகொள்ளப்படுவது போன்று, இயக்கங்களின் கொலைகளும் நினைவுகொள்ளப்படுமாக இருந்தால், ஒவ்வொரு மாதமும் கொலைகள் பற்றிய நினைவுகளுடன்தான் தமிழரின் அரசியல் நகர நேரிடும். நல்ல வேளையாக அவைகள் பற்றி இப்போது உரையாடுவதற்கு எவரும் இல்லை.

தமிழாராய்ச்சி மகாநாடு இடம்பெற்று 51 வருடங்கள் முடிந்துவிட்டது. இந்த நிலையில் இங்கிருந்து எங்கு செல்வது என்னும் கேள்வி எழுகின்றது - அல்லது, எதைப் பேசுவது - பேசுவதற்கு எதுவுமேயில்லையே என்னும் நிலையில் இந்தக் கேள்வி எழலாம். உண்மையில் தமிழ் மக்கள் இப்போதிருக்கும் இடத்திலிருந்து எங்கு செல்ல முடியும்? முதலில் இப்போதைய தமிழர் நிலை என்ன என்பது பற்றிய புரிதல் தமிழ் அரசியலாளர்கள் என்போரிடம் இருக்கின்றதா?

இன்றைய தமிழர் அரசியல் என்பது, நோய்வாய்ப்பட்டு, நலிவுற்று, நடக்க முடியாமல், தள்ளாடிக் கொண்டிருக்கும் ஒன்று. இந்த இடத்திலிருந்து எங்குமே செல்ல முடியாது. ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு நகர வேண்டுமாயின் முதலில் இருக்கும் இடம் தெரிந்தால் மட்டும்தான், போகும் இடத்தைப் பற்றி சிந்திக்க முடியும்.

தமிழ் மக்களின் பெயரால் முன்னெடுக்கப்பட்ட உரிமைசார் அரசியல் என்பது இறுதியில் மக்களை அதலபாதாளத்தை நோக்கித் தள்ளுவதிலேயே முடிந்திருக்கின்றது. இதற்கு யார் காரணம் என்றால் கடந்த 75 வருடங்களாக இந்த அரசியலை நகர்த்திய அனைவருக்கும் இதில் பொறுப்புண்டு. இந்தப் பயணத்தில் பலர் தங்களை இழந்துவிட்டனர். எஞ்சியிருப்பவர்கள் இந்த வரலாற்றிலிருந்து எதையும் கற்றுக்கொள்ளாமல் - சுயவிமர்சனத்திற்கான துணிவும் இல்லாமலும் தாங்களும் அரசியலில் இருப்பதாக கூறிக்கொண்டிருப்பவர்கள். உண்மையில் இவர்களால் இங்கிருந்து எங்கும் செல்ல முடியாது.

இன்று தமிழ்த் தேசியம் என்பது ஆண்டுகள் தோறும் இடம்பெறும் சில நினைவு தினங்களை அடிப்படையாகக் கொண்டதே தவிர, அதற்கு மேல், தமிழ்த் தேசியம் என்பதற்கு எவ்வித செயற் பெறுமதியும் இல்லை. இந்த நிலையில் தமிழ் மக்களை தொடர்ந்தும் ஏமாற்றும் செயலை இனியும் செய்யக் கூடாது என்னும் நேர்மையிலிருந்துதான் ஓர் உண்மையான அரசியலை முன்னெடுக்க முடியும். தற்போதுள்ள அரசியலாளர்கள் என்போர் அதற்கான ஆற்றலுடனும் அர்ப்பணிப்புடனும் இருக்கின்றனரா என்பதை, அவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்குள் கேட்டுக்கொள்ள வேண்டும்.

# கனிமொழியுடன் சென்னையில் சாணக்கியன், சுமந்திரன் பேச்சு!

சென்னை, ஜன. 12

இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான இரா. சாணக்கியன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் இந்திய பாராளுமன்றத்தின் திராவிட முன்னேற்றக் கழகம் சார் பான தலைவர் கனிமொழியை சந்தித்துள்ளனர்.

2025 ஆம் ஆண்டின் நான்காவது உலகத் தமிழ் புலம்பெயர்ந்தோர் நாள் நேற்றும் இன்றும் தமிழ்நாட்டின் சென்னை வர்த்தக மையத்தில் இடம்பெறுகிறது.

"எத்திசையும் தமிழணங்கே!" என்ற தலைப்பில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில், 60 நாடுகளிலிருந்தும் 17 மாநிலங்களில் இருந்தும் பங்கேற்பாளர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

இவ் நிகழ்வில் விசேட அழைப்பின் பெயரில் இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ .சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

இதன்போதே இவர்கள் இந்திய பாராளுமன்றத்தின் திராவிட முன்னேற்றக் கழகம் சார்பான தலைவர் கனிமொழியை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். இதன்போது, ஈழத் தமிழ் மக்கள் எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகள் மற்றும் மத்திய அரசிடம் தமிழ் நாட்டின் குரலை தமிழர்களுக்காக தொடர்ந்தும் எழுப்பவேண்டும் எனவும் இந்த கலந்துரையாடலின்போது வலியுறுத்தப்பட்டுள்ளது.(அ)

# இந்தியா - இலங்கை நட்புறவு; வட்டமேசை கலந்துரையாடல்

கொழும்பு, ஜன. 12

இந்தியா - இலங்கை நட்புறவு பற்றிய உயர்மட்ட வட்டமேசை கலந்துரையாடல் கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்தால் நேற்று ஐ.ரி.சி ரத்னதீபவில் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்திய தூதுவர் சந்தோஷ் ஜாவின் வரவேற்பு உரையுடன் இந்த கலந்துரையாடல் ஆரம்பமானது.

இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் இருதரப்பு உறவின் முக்கிய அம்சங்களைப் பற்றி விவாதிப்பதற்கும் இரு நாடுகளுக்கு இடையே மேம்பட்ட ஒத்துழைப்பிற்கான வழிகளை முன்மொழிவதற்கும் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் சந்தோஷ் ஜா, சிறந்த பொருளாதார வல்லுநரும் வர்த்தக நிபுணருமான கனேஷ் விக்னராஜா, உள்ளூர் சிந்தனைக் குழுக்கள் மற்றும் கருத்துத் தலைவர்களின் பிரதிநிதிகள் மற்றும் தூதரகத்துடன் தொடர்புடைய பிரிவுகளை வழிநடத்தும் அதிகாரிகள் போன்றோர் கலந்து கொண்டனர்.

## பருத்தித்துறை சந்தையில் உள்ள மரக்கறி வியாபாரிகள் அதிருப்தி

யாழ்ப்பாணம், ஜன. 12

வடமராட்சி பருத்தித்துறை சந்தை மரக்கறி வியாபாரிகள், புதிய மரக்கறி சந்தை தொடர்பில் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். புதிதாக அமைக்கப்பட்ட சந்தையில், போதிய இட வசதி இல்லை எனவும், பஸ் தரிப்பிடத்தில் இருந்து தொலைவில் இருப்பதாகவும், வியாபாரிகள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

அத்துடன், தற்போது பயன்படுத்தி வரும் சந்தையை, மேல் மாடியில் இருந்து கீழ்த் தளத்திற்கு மாற்றித் தருமாறும், வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பதிய சந்தையானது, நேற்று முன் தினம் வடக்கு மாகாண ஆளுநரால் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# யாழ்ப்பாணத்தில் மனைவியின் காதை வெட்டியவருக்கு விளக்கமறியல் உத்தரவு

யாழ்ப்பாணம், ஜன. 12

சண்டிலிப்பாய் பகுதியில் மனைவியின் காதை வெட்டியவரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்று உத்தரவிட்டது.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பெண் ஒருவர் தனது கணவனின் சித்திரவதை தாங்காது சண்டிலிப்பாயில் உள்ள உறவினரின் வீட்டில் வசித்து வருகின்றார். இந் நிலையில் அங்கு சென்ற கணவன் கடந்த 07 ஆம் திகதி மனைவியின் காதை வெட்டிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண், வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய பின்னர் இச்சம்பவம் குறித்து கடந்த 10 ஆம் திகதி மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

குறித்த சந்தேகநபருக்கு எதிராக வேறு சில முறைப்பாடுகள் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திலும் காணப்படுகின்றன. இந் நிலையில் குறித்த சந்தேக நபர் நேற்று முன் தினம் வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

குறித்த சந்தேக நபர் இதற்கு முன்னரும் மனைவியின் தலை மற்றும் காலை உடைத்து, பல்வேறு சித்திரவதைகளை புரிந்தவர் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேகநபரை நேற்று மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை அவரை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-05)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரியான திசையில் பயணம்!

முனைவர் என். பத்ரி

சென்னைப் பல்கலைக்கழக ஆய்வு ஒன்று குற்றவாளிகள் தண்டனையைப் பெறுவது எந்த வகையிலும் அவர்களைத் தவறு செய்வதிலிருந்து தடுப்பதில்லை என்று கூறுகிறது. இதே பல்கலைக்கழகத்தின் மூலம் நடத்தப்பட்ட மற்றொரு ஆய்வு, தற்சமயம் தொடர் குற்றவாளிகளாக இருப்பவர்கள், சிறார்களாக அல்லது இளைஞர்களாக இருக்கும்போது குற்றங்களைச் செய்யத் தொடங்கினர் என்றும், பின்னர் குற்றங்களைத் தொடர்ந்து செய்து வந்திருக்கிறார்கள் என்றும் கண்டறிந்துள்ளது.

முதல்முறையாக சிறைக்குச் சென்று வரும்போது இருக்கும் மனவருத்தம், அவர்களுக்கு அடிக்கடி சிறைசெல்லும் போது இருப்பதில்லை. ஆதரவற்ற பலர் அதை ஒரு பாதுகாப்பான இடமாகவே கருதுகிறார்கள். மேலும், வேலை எதுவுமில்லாமல் இருக்கும் அவர்களுக்கு குற்றச் செயல்களில் ஈடுபடும்போது பணம் எளிதாக கிடைக்கிறது. வசதியாக வாழ சரியான வழி இதுதான் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

பொய் சொல்வதைத் தொடக்கமாக கொள்ளும் இளம் குற்றவாளிகள், முறையாகக் கண்காணிக்கப்படாதபோது தடம் மாறுகிறார்கள். இந்நிலையில் தான், அவர்கள் மனம் போன போக்கில் வாழ முனைகிறார்கள். கவலையை மறக்க போதைப் பொருள்களைப் பயன்படுத்தும் இவர்கள், போதையின் பாதையில் செல்லும்போது, என்ன செய்கிறார்கள் என்று அவர்களுக்கே தெரிவதில்லை. அதனால் திருட்டு, வழிப்பறிக் கொள்ளை, வாகனக் கொள்ளை, ஏடிஎம் கொள்ளை, முதியோர்களைக் குறிவைத்து பொருளாதாரக் குற்றங்களில் ஈடுபடுவது, கைப்பேசி திருட்டு போன்ற தனக்கு சாத்தியமான அத்தனை குற்றங்களிலும் இவர்கள் ஈடுபடுகிறார்கள். இது வளமான சமுதாயத்திற்கு உரம் ஊட்டுவதாக அமையாது.



மேலும், இது போன்ற சிறார்கள்தான் ரவுடிகளின் கையில் சிக்கிக் கொள்கிறார்கள். அவர்கள் சிறார்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து, அவர்களைக் குற்றச் செயல்களில் தொடர்ந்து ஈடுபடுத்துகிறார்கள். விசாரணைக் கைதிகளாகும் இவர்களுக்கு நாள் முழுவதும் செய்வதற்கு என்று வேலைகள் எதுவும் கிடையாது. எனவே முழு நாளும் அவர்களைச் சுற்றி இருப்பவர்களுடன் எந்த வருத்தமுமின்றி பொழுதைக் கழிக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலோருக்கு குடும்பமோ, வீடோ இருப்பதில்லை. சிறையில் தேவையான உணவும், பாதுகாப்பான இடமும் கிடைத்து விடுகிறது. எனவே, எத்தனை முறை சிறையிலிருந்து வெளியே வந்தாலும், மீண்டும் உள்ளே செல்வதற்கான வழியைத் தேடுகிறார்கள்.

பொதுவாக, ஆதரவற்ற சிறுவர்கள், சிக்கலான உறவுகளைக் கொண்ட பெற்றோர்களின் பிள்ளைகள் ஆகியோரே மீண்டும், மீண்டும் குற்றங்களைச் செய்வதாக கூறப்படுகிறது. சிறையில் ஏற்படும் நட்பு சிறையிலிருந்து வெளியே வந்த பின்னரும் தொடர்கிறது. பின்னர் கூட்டாக குற்றச் செயல்களில் ஈடுபடுகிறார்கள். காவல் துறையின் கவனத்திற்கு வரும் வரை இதை அவர்களால் எந்த விதச் சிக்கலுமின்றி தொடர முடிகிறது.

இவர்களைத் திருத்துவதற்காக பல் வேறு பகுதிகளில் சிறுவர் நன்னடத்தை இல்லங்கள் உள்ளன. அங்கு இவர்களின் மறுவாழ்வுக்கான தேவையான திறமை கள் அளிக்கப்படுகின்றன. இடையில் நின்ற படிப்பைத் தொடரவும் வாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன. ஆனால் இவற்றை முறையாக இவர்கள் பயன்படுத்திக் கொள்வதில்லை என்பதுதான் உண்மை. இவ்வாறான நிகழ்வுகள் நமது இளைஞர்களின் அளவில்லாத ஆக்க சக்தி அழிவு சக்தியாக மாறியுள்ளதை நன்கு வெளிப்படுத்துகின்றன. இதைப் பற்றி சமூக அக்கறை உள்ள எவரும் கவலைப்படாமல் இருக்க முடியாது.

மனித வாழ்வில் வாலிபப் பருவம் என்பது மன உறுதி, உடல் உறுதி, நல்ல திறமை போன்றவற்றைக் கொண்டது. இன்றைய இளைஞர்கள்தான் நாட்டின் எதிர்காலத் தலைவர்கள். இவர்களுடைய அறிவும், திறமையும் நாட்டு வளத்திற்காகவும் வீட்டு வளத்திற்காகவும் அவர்களுடைய நலத்திற்காகவும் பயன்பட வேண்டும்.

முதல் முறை தவறு செய்யும் இளைஞர்கள், தொடர் குற்றங்களைச் செய்யும் நபர்களாக மாறுவதிலிருந்து அவர்களைத் தடுக்கச் சிறைத்துறையும், தன்னார்வ அமைப்புகளும் இணைந்து செயல்படுவது நல்லது. அவர்கள் அனைவரையும் பிற குற்றவாளிகளிடமிருந்து பிரித்து வைக்க வேண்டும். சாதாரணக் குற்றம் செய்து, முதல் முறையாக சிறைக்கு வருபவரிடம் இனி குற்றம் செய்து பிழைப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று கூறி, அடுத்தடுத்து குற்றங்களைச் செய்வதற்கு சிறைக்கு உள்ளேயே, 'ஆள் சேர்ப்பு' நடப்பது கூடாது. முதல்முறையாகச் சிறைக்கு வரும் குற்றவாளிகளை சிறையில் ஏற்கெனவே உள்ள பழைய குற்றவாளிகளிடம் இருந்து பிரித்து வைப்பதே அவர்கள் திருந்துவதற்கு உதவும்.

சமூகப்பணியாளர்கள், மனநல ஆலோசகர்கள் அவர்களைச் சந்தித்து ஆலோசனை வழங்குவதில் இன்னும் தீவிர கவனம் செலுத்துவது நல்ல சமுதாயத்தை உருவாக்க உதவும். அவர்கள் வெளியே வந்த பிறகும் தீய நட்புகளின் ஈர்ப்பு இல்லாமல் இருப்பதில் குடும்ப உறுப்பினர்கள் கவனம் செலுத்த வேண்டும். அவர்களிடம் குற்ற உணர்வு இல்லாமல் பார்த்துக் கொள்வதோடு, சமுதாயம் அவர்களைக் கண்ணியமாக நடத்த வேண்டும்.

தற்போதைய இளைஞர்களுக்கு தம்முடைய தொழில்நுட்ப அறிவை ஆக்க சக்தியாக மாற்றக் கூடிய வாய்ப்பை அளிக்க வேண்டியது நமது கடமையாகும். அவர்களுக்கு ஏற்ற ஒரு பணியை வழங்குவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தும் முயற்சியில் அரசு இறங்க வேண்டும்.

## இந்தவார ராசிபலன் 12.01.2025 - 19.01.2025

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - மார்கழி 28

நல்ல நேரம்: 09.33 - 11.03 ராகு காலம் : 05.03 - 06.33 திதி : திரயோதசி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் அரசு வகை ஆதாயம் ஏற்படும். உங்கள் திறமை மிக்க செயல்களால் வெற்றிகளும், பாராட்டுதல்களும் குவியும். தங்கள் வாழ்க்கையில் வளர்ச்சி மற்றும் நல்ல முன்னேற்றத்துக்காக கடுமையாக உழைக்க வேண்டிய காலம் இது. சிலருக்கு இடமாற்றங்கள் ஏற்படலாம். இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, தாமதப்பட்ட மங்கல காரியங்கள் ஈடேறும். மாணவர்களுக்கு படிப்பில் தேர்ச்சி ஏற்பட்டு, அறிவுச் சுடரொளி வீசும். மனைவியுடன் உறவு மகிழ்ச்சிகரமானதாக இருக்கும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் நெடுநாட்களாக பெண் தேடி அலைந்தவர்களுக்குத் திருமணம் உறுதியாகி, அதன் காரணமாக மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதப்பார்கள். நீண்ட நாள் கனவுகள் நனவாகும். வாலிபர்கள் தோழர், தோழிகளுடன் பொதுச்சேவைகளில் ஈடுபடுவர். புதிய வாகனத்தை வாங்கும் முயற்சிகளைத் தள்ளிப் போடுவது நல்லது. நீங்கள் காட்டும் உண்மையான அன்பு கண்டு உறவுகள் மகிழ்ச்சி கொள்வார். வீட்டில் ஏற்படும் சிறு சச்சரவுகளை சமாளிக்க முடியாமல் போகலாம்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் நீண்ட நாட்களுக்குப் பிறகு, பணவரவு அதிகரிப்பதால், மனதில் மகிழ்ச்சி பொங்கும். சிலருக்குப், பேரின்பம் பெறும் விதமாக மனைவிக்கு குழந்தை பேறு உண்டாகி இருக்கும் சேதி கேட்டு மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதப்பீர்கள். எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு கை செலவுகளைக் குறைத்து சேமிப்புகளை அதிகரிப்பது நல்லது. அரசு மூலம் அரசுப் பணியாளர்களுக்கு வரவேண்டிய அனைத்து பண நிலுவைகளும் கிடைத்துவிடும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் சிலருக்கு ஆன்மிகப் பெரியவர்கள் அறிவுரைகள் கிடைத்து, வாழ்க்கைக்கான வழிகாட்டுதல்களும் கிடைக்கும். சுற்றமும் நட்பும் சூழ சொகுசு வாகனத்தில் உல்லாச சுற்றுலா பயணங்கள் சென்றது கனவு போல் தோன்றும். வீட்டில் பொருட்களை பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுங்கள். குடும்பத்தினரிடையே கருத்து வேறுபாடுகளை தவிர்க்க, அனுசரித்துச் செல்வது நல்லது. வங்கியில் வாங்கிய கடனை திரும்பச் செலுத்த வேண்டிய நிர்பந்தம் எழும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் மனோதைரியம் ஓங்கும். பல வழிகளிலும் தனவரவு அதிகரிக்கும், சிலருக்கு நல்ல குரு வாய்க்கப்பெற்று ஆன்மீக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும். தந்தையின் உறவுகள் மூலம் வேண்டிய உதவிகள் கிடைக்கும். விளையாட்டுத் தனங்களை ஒதுக்கி விவேகத்துடன் நடப்பது நல்லது. சிலருக்குப் பணியில், விரும்பிய இடத்திற்கு இடமாற்றங்கள் ஏற்படலாம். சிலருக்கு அரசாங்க விருதுகள் கிடைக்கும். வாக்குவன்மை ஓங்கும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் உங்களுக்கு நீண்ட நாட்களுக்குப் பிறகு, ஓரளவு பண வரவு ஏற்படும். வெளியூர் பயணங்களை ஒத்திப் போடுங்கள். வீட்டில் தாமதப்பட்ட சுபகாரியங்கள் ஏற்பட்டு, செலவுகள் அதிகரிக்கும். அதிக உழைப்பிற்குப் பிறகு எடுத்த காரியங்கள் ஈடேறும். அதன் மூலம் பணவரவு மற்றும் இலாபங்கள் பெருகும். பிறர் மேல் இரக்கம் ஏற்பட்டு தான தருமங்கள் செய்வார்கள். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. சில மாணவர்கள் கடின உழைப்பால், கல்வியில் உயர்நிலை எய்துவர். உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். உடலில் கவனம் தேவை.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் குடும்பத்தில் சுகமும் ஆரோக்கியமும் பெருகும். கல்வியில் தேர்ச்சி, தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். சிலருக்குத் தங்கள் விருப்பம் போல் உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். பிரபலமானவர்களின் ஆறுதலும், அன்பும் கிடைக்கும். தந்தைக்கு நன்மைகள் ஏற்படும். அரசுப் பணியாளர்களுக்கு உயர் பதவிகள் கிடைக்கும். பல புண்ணியத் தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்புகள் தள்ளிப் போகலாம். இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் அனைத்து வசதிகளும் அதிகரித்து ஆனந்தம் பெருகும். வீட்டில் ஏற்படும் புதிய வசதிகள் ஏற்பட்டு மனம் மகிழும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமான டிசைன்களில் வாங்குவீர்கள். ஆரவாரம் மிக்க சூழலில், கேளிக்கை விருந்து கள் மற்றும் பெண்களின் அருகாமை ஆனந்தமளிக்கும். நல்ல பணியாளர்களின் தொடர்புகள் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றங்களை தரும். எப்போதும் மனதில் ஏற்படும் தெய்வ சிந்தனையால் மனநிம்மதி கூடும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் பக்தி சொற்பொழிவுகள், பாடல்கள் கேட்பதில் ஆர்வம் எழும். எதிர்பாராத தனவரவு. புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவை ஏற்படும். தொழிலில் புதிய விரிவாக்கங்கள் செய்வதால் எதிர்பாராத அளவுக்கு அசாத்திய வளர்ச்சி ஏற்படும். மேலதிகாரிகளின் உதவி மற்றும் அனுகூல தால் உயர் பதவிகளுக்கான சிபாரிசுகள் மேற்கொள்ளப்படும். புண்ணியத் தல யாத்திரைகள் ஏற்படும். நிலையான பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் உங்கள் சம்பாதிக்கும் திறன் மேம்படும். கடினமான வேலைகளையும் தன்னம்பிக்கை காரணமாக சிறப்பாக செய்து முடிப்பீர்கள். அரசு வேலைக்கு மனு செய்தவர்கள் அனுகூலமான செய்தி வரும். வாழ்க்கையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். ஓய்வடுக்கும் விதமாக நமக்கு எல்லா நாட்களும் ஞாயிறாக இருப்பதில்லை. அதேபோல் இன்பமும் துன்பமும் கலந்தது தான் வாழ்க்கை. இந்த வாரம் செலவுகள் அதிகரிப்பு காரணமாகப் பணமுடை ஏற்பட வாய்ப்பு உண்டு.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் அனைத்து முக்கிய காரியங்களிலும் எறும்பை ஒத்த சுறுசுறுப்புடன் செயல்படுவீர்கள். புதுத்தெம்பு, உற்சாகமும் கூடும். புதிய வாகன வசதிகள் மேம்படும். சிலருக்கு அதிகாரப் பதவியும், அமைச்சர் போன்ற பதவிகளும் கிடைக்கும் வாய்ப்பு ஏற்படும். பக்தி மார்க்கத்தில் தீவிர ஈடுபாடு உண்டாகும். சுபகாரிய நிகழ்ச்சிகள் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். புதிய வசதி வாய்ப்புகள் உருவாகும். சிலருக்கு வெளிநாட்டுப் பயணத்தால் அதிக இலாபம் கிடைக்கும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வார எதிர்பார்ப்புக்கு மேல் தாராளமான தனவரவு ஏற்படும். தத்துவ உபதேசங்கள், பக்திச் சொற்பொழிவு கேட்பதில் ஆர்வம் ஏற்படும். அதன் காரணமாக மனதில் மிகுந்த உற்சாகம் அமைதியும் பெருகும். நவநாகரீக ஆடைகள், ருசியான உணவு வகைகள் ஆகியவை கிட்டும். தொட்டில் ஆட்டிக் கொஞ்சி மகிழ, புத்திர பாக்கியம் ஏற்படும். சினத்தை அடக்கினால் சிக்கல்கள் தீரும். செலவுகள் அதிகமாக புதிய கடன்களை வாங்க வேண்டிய சூழ்நிலை எழும். தீய குணம் உள்ள நபர்களின் பழக்கம் ஏற்படும். எனவே, அத்தகைய நபர்களிடம் இருந்து விலகி இருப்பதே நல்லது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புவிசார் அரசியல் சிக்கல்களுக்கு மேலாக கயிற்றில் நடக்க வேண்டிய நிலையில் ஜனாதிபதி அநுர குமார!



வீரகத்தி தனபாலசிங்கம்

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தனது முதலாவது உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயமாக இந்தியாவுக்கு சென்று சரியாக ஒருமாதம் கடக்கும் நிலையில் இவ்வாரம் சீனாவுக்கு விஜயம் செய்கிறார். வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் போக்குவரத்து அமைச்சர் பிமால் இரத்நாயக்க சகிதம் செல்லும் அவர் சீன ஜனாதிபதி சி ஜின் பிங்கையும் பிரதமர் லீ கியாங்கையும் எதிர்வரும் புதன்கிழமை சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தவிருப்பதாகவும் அவரது விஜயத்தின்போது பல்வேறு துறைகள் தொடர்பில் சுமார் பத்து புரிந்துணர்வு உடன்படிக்கைகள் பெய்ஜிங்கில் கைச்சாத்திடப்படவிருப்பதாகவும் அறிவிக்கப் பட்டிருக்கிறது.

இலங்கை ஜனாதிபதிகள் பதவியேற்ற பிறகு முதலாவது உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயத்தை இந்தியாவுக்கு மேற்கொள்வதை ஒரு சம்பிரதாயமாக கடைப்பிடித்து வந்திருக்கிறார்கள். அதே போன்றே ஜனாதிபதி திசாநாயக்கவும் கடந்த மாதம் புதுடில்லி சென்று இந்திய தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தினார்.

ஜனாதிபதி டிசம்பர் நடுப்பகுதியில் இந்தியாவுக்கு செல்வதற்கு முன்னதாகவே ஜனவரியில் சீனாவுக்கு விஜயம் செய்வார் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டது. இது கடந்த செப்டெம்பரில் அதிகாரத்துக்கு வந்த பிறகு திசாநாயக்க முன்னெடுக்கும் முக்கியமான இரண்டாவது சர்வதேச இரு தரப்பு ஊடாட்டமாகும்.

ஜனாதிபதியின் சீன விஜயத்துக்கு முன்னதாக கடந்த வாரம் கொழும்பில் இடம்பெற்ற இரு நிகழ்வுகளைப் பற்றி முதலில் குறிப்பிட வேண்டியிருக்கிறது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் "ஒரு சீனக் கொள்கை" மீதான அதன் பற்றுறுதியை மீளவும் உறுதிசெய்துகொண்டு மக்கள் சீனக் குடியரசே சீனாவின் சட்டபூர்வமான அரசாங்கம் என்று அங்கீகரிப்பதாகவும் தாய்வானை சீனாவின் ஒரு மாகாணமாக கருதுவதாகவும் அறிவித்தது. இது தொடர்பில் வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் சமர்ப்பித்த யோசனையை அமைச்சரவை அங்கீகரித்ததாக அமைச்சரவை பேச்சாளர் நாளிந்த ஹேரத் கடந்த செவ்வாய்க்கிழமை செய்தியாளர்கள் மகாநாட்டில் அறிவித்தார்.

அண்மைய தசாப்தங்களில் இலங்கையின் எந்தவொரு ஜனாதிபதியும் சீனாவுக்கு முதன் முதலாக விஜயம் செய்வதற்கு முன்னதாக "ஒரு சீனக் கொள்கையை" மீண்டும் அங்கீகரிப்பதாக அறிவித்ததாக நாம் அறியவில்லை.

மாவோ சேதுங் தலைமையிலான வெற்றிகரமான புரட்சியை அடுத்து 1949 அக்டோபரில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி அதிகாரத்துக்கு வந்த பிறகு அமைக்கப்பட்ட மக்கள் சீனக் குடியரசை அதன் ஆரம்பத்தில் அங்கீகரித்த நாடுகளில் இலங்கையும் ஒன்று. செஞ்சீனாவை 1950 ஜனவரி 6 ஆம் திகதி இலங்கை அரசாங்கம் அங்கீகரித்தது. ஐக்கிய தேசிய கட்சி அரசாங்க காலத்தில் 1952 ஏப்ரிலில் சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் ரப்பர் - அரிசி ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது. கம்யூனிஸ்ட் சீனாவை அங்கீகரித்த முதல் தெற்காசிய நாடு இலங்கை என்பது குறிப்பிடத்தக்கது.

அதற்கு பிறகு ஏழு வருடங்கள் கழித்து பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கவின் அரசாங்க காலத்தில் 1957 ஜனவரியில் ஐந்து நாள் விஜயத்தை மேற்கொண்டு அன்றைய சீனப்பிரதமர் சூ என்லாய் இலங்கைக்கு வந்தார். அவரது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அந்த விஜயம் அந்த வருடம் பெப்ரவரி 7 ஆம் திகதி இரு நாடுகளும் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு வழிவகுத்தது.

இலங்கையில் எந்த அரசியல் கட்சி ஆட்சியில் இருந்தாலும், சகல அரசாங்கங்களுமே சீனாவுடன் சுமுகமானதும் நெருக்கமானதுமான உறவுகளைப் பேணி வந்திருக்கின்றன. இருதரப்பு ஒத்துழைப்பிலும் ஐக்கிய நாடுகள் அமைப்புக்கள் உட்பட சர்வதேச அரங்குகளிலும் நீண்டகால நேச நாடாக சீனாவை இலங்கையர்கள் நோக்குகி றார்கள்.



"ஒரு சீனக் கொள்கை" தொடர்பிலான இலங்கையின் பற்றுறுதியை சீனா ஒருபோதும் சந்தேகித்ததாகவோ அல்லது இலங்கையின் முன்னைய அரசாங்கத் தலைவர் எவரும் சீனாவுக்கு விஜயம் செய்வதற்கு முன்னதாக "ஒரு சீனக் கொள்கை" மீதான இலங்கையின் பற்றுறுதியை மீளவும் உறுதிப்படுத்தும் அறிவிப்பைச் செய்ததாகவோ நாம் அறியவில்லை. ஆட்சிக்கு வருவதற்கு முன்னதாகவே தேசிய மக்கள் சக்தியின் தலைமைத்துவ கட்சியான ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) சீனக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் வலுவான உறவைக் கொண்டிருந்தது. அதனால், ஜனாதிபதி திசாநாயக்கவின் விஜயத்துக்கு முன்னதாக "ஒரு சீனக் கொள்கை" பற்றிய மீள் உறுதிப்பாட்டை எதற்காக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது என்ற கேள்வி எழுந்தது.

ஜனாதிபதியின் சீன விஜயத்துக்கும் "ஒரு சீனக் கொள்கையை" அரசாங்கம் மீள உறுதிப்படுத்திக் கொண்டதற்கும் எந்த தொடர்பும் கிடையாது என்று அமைச்சரவை பேச்சாளர் கூறினார். செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்த அவர் புதிய அரசாங்கம் ஒன்று தெரிவு செய்யப்பட்ட பிறகு முன்னைய அரசாங்கத்தின் அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களை புதிய அமைச்சரவை அங்கீகரிக்க வேண்டியிருக்கிறது என்றும் அதன் பிரகாரமே வெளியுறவு அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனையை புதிய அமைச்சரவை அங்கீகரித்தது என்றும் குறிப்பிட்டார். ஜனாதிபதி திசாநாயக்க சீனாவுக்கு விஜயம் செய்யாவிட்டாலும் கூட, "ஒரு சீனக் கொள்கை" மீதான உறுதிப்பாட்டை அரசாங்கம் வெளிப்படுத்தியிருக்கும் என்றும் அவர் கூறினார். உண்மையில் அவரது பதில் நம்பிக்கை தரக்கூடியதாக இருக்கவில்லை.

கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் பிரதமர் ஹரிணி அமரசூரிய சீனத் தூதுவரின் முன்னிலையில் சீனாவின் உதவிகளுக்கு நன்றி தெரிவிக்கும் போது "மக்கள் சீனக் குடியரசு" என்பதற்கு பதிலாக "சீனக்குடியரசு" என்று தவறுதலாகக் குறிப்பிட்டார். சீனக் குடியரசு என்பது தாய்வானையே குறிக்கும். அதனால் சீனாவின் உதவிக்காக தாய்வானுக்கு பிரதமர் நன்றி கூறியதாக சீனத்தூதுவர் அசௌகரியமடைந்தாக கூறப்பட்டது.

ஆனால், பிரதமரும் கூட, தனது தவறைத் திருத்திக் கொள்ள வேண்டிய அவசியத்தை உணராமல் ஊடகங்களையே குற்றஞ்சாட்டினார். நாட்டின் பிரதமரே மக்கள் சீனக்குடியரசுக்கும் சீனக்குடியரசுக்கும் இடையிலான வேறுபாட்டை விளங்கிக் கொள்ளாதவர் போன்று பேசியதனால் ஜனாதிபதியின் விஜயத்துக்கு முன்னதாக "ஒரு சீனக் கொள்கை" தொடர்பிலான நிலைப்பாட்டை அரசாங்கம் வெளியிட வேண்டும் என்று சீனத்தரப்பினர் வலியுறுத்தியிருக்கக்கூடும் என்று தோன்றுகிறது.

அதேவேளை, கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா கடந்த செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களுடன் நடத்திய சந்திப்பும் முக்கிய கவனத்தைப் பெற்றது. ஜனாதிபதியின் சீன விஜயத்துக்கு முன்னதாக இந்தியாவுடனான இலங்கையின் உறவுகள் உன்னதமான நிலையில் இருக்கின்றன என்று கூறியதன் மூலமாக அவர் கொழும்புக்கு ஒரு செய்தியைச் சொல்வதற்கு விரும்பியிருக்கக்கூடும் என்று அந்த செய்தியாளர்கள் மகாநாட்டுக்கு சில அவதானிகள் அர்த்தம் கற்பிக்கிறார்கள்.

இலங்கையுடனான கூட்டுப்பங்காண்மையில் இந்தியா புதிய வருடத்தை நேர்மறையான உணர்வுடனும் மிகுந்த மகிழ்ச்சியுடனும் தொடங்கியிருக்கிறது என்றும் ஜனாதிபதி திசாநாயக்கவின் அண்மைய புதுடில்லி விஜயம் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் புதிய விறுவிறுப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்றும் உயர்ஸ்தானிகர் கூறினார்.

திசாநாயக்கவின் இந்திய விஜயத்தின் முக்கிய அம்சங்கள் குறித்து விளக்கமளித்த அவரிடம் வெளிநாட்டு ஆய்வுக் ப்பல்கள் இலங்கை கடற்பர ப்புக்கு வருகை தருவதற்கு முன்னைய அரசாங்கம் விதித்திருந்த ஒரு வருடகால இடைக்காலத்தடை டிசம்பர் 31 ஆம் திகதியுடன் காலாவதியாகியதை தொடர்ந்து சீன ஆய்வுக்கப்பல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்துடன் இந்தியா ஏதாவது பேச்சுவார்த்தையை நடத்தியதா என்று கேட்கப்பட்டது.

அதற்கு பதிலளித்த உயர்ஸ்தானிகர் இந்தியாவில் திசாநாயக்க செய்த திட்டவட்டமான அறிவிப்பையும் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டிருந்ததையும் சுட்டிக்காட்டி, "இலங்கையின் உறுதிமொழியை நாம் கருத்தில் எடுத்துக் கொள்கிறோம். இது விடயத்தில் சரியான நடவடிக்கைகளை இலங்கை எடுக்கும் என்று முற்றுமுழுதாக நம்புகிறோம்" என்று சொன்னார்.

இந்தியாவின் பாதுகாப்புக்கும் பிராந்திய உறுதிப்பாட்டுக்கும் தீங்கு விளைவிக்கக்கூடிய எந்தவொரு நடவடிக்கைக்கும் இலங்கையின் பிராந்தியம் பயன்படுத்தப்படுவதை ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்ற தேசிய மக்கள் சக்தியின் நிலைப்பாட்டையே ஜனாதிபதி திசாநாயக்க இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடனான பேச்சுவார்த்தைக ளின்போது மீண்டும் வலியுறுத்திக் கூறினார். அவரின் உறுதிமொழி மீது இந்தியாவுக்கு நம்பிக்கை இருக்கிறது என்பதை செய்தியாளர்கள் சந்திப்பில் உயர்ஸ்தானிகர் வெளியிட்ட கருத்துக்க ளில் இருந்து விளக்கிக்கொள்ளக்கூடிய தாக இருக்கிறது. இது ஒன்றும் திசா நாயக்க புதிதாக வழங்கிய உறுதிமொழி அல்ல. முன்னைய ஜனாதிபதிகளும் இதையே கூறினார்கள். ஆனால், அவர் களது அணுகுமுறைகளின் விளைவாக இந்தியா விசனமடைந்த பல சந்தர்ப்பங்களை கடந்த காலத்தில் கண்டிருக்கிறோம்.

வெளிநாட்டு ஆய்வுக் கப்பல்களின் வருகைக்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் ஒரு வருட கால இடைக்காலத்தடை விதித்ததற்கு மூன்றாம் தரப்பு ஒன்றின் நெருக்குதலே காரணம் என்றும் இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளைப் பாதிக்கக்கூடியதாக வெளியாரின் தலையீடு எதுவும் இருக்கமுடியாது என்றும் சீன அதிகாரிகள் பல தடவைகள் கூறினார்கள். தங்களது ஆய்வுக்கப்பல்களை இலங்கை கடற்பரப்பில் அனுமதிக்கக்கூடாது என்று கொழும்பை இந்தியா நிர்ப்பந்திக்கிறது என்பதே சீனர்களின் மறைமுகமான குற்றச்சாட்டு.

ஜனாதிபதி திசாநாயக்க புதுடில்லியில் இருந்து நாடுதிரும்பிய மறுநாள் அவரைச் சந்தித்துப் பேசிய சீன மக்கள் கலந்தாலோசனை மகாநாட்டின் தேசியக் குழுவின் பிரதி தலைவர் கின் போயொங் சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான அபிவிருத்தி ஒத்துழைப்பு மற்றும் முதலீடுகள் குறித்து ஆராய்ந்ததுடன் மீண்டும் கடல்சார் ஆய்வு நடவடிக்கைகளை தொடங்கும் திட்டம் தனது நாட்டுக்கு இருப்பதாகவும் கூறினார்.

சீனாவின் ஆய்வுக் கப்பல்களை உளவுக் கப்பல்கள் என்று நம்பும் இந்தியா அவற்றின் இலங்கை வருகை தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை தோற்றுவிக்கும் என்று கூறுகிறது. அது விடயத்தில்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவனிக்காமல்விடப்பட்ட முன்னுரிமைக்குரிய ஒரு விவகாரம்: அரசாங்கத்தினால் சீர்செய்யமுடியும்!



கலாநிதி ஜெகான் பெரேரா

ஊழல் மற்றும் விரயப் பிரச்சினைக்கு முடிவுகட்டுவது என்பது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் முக்கியமானது. 2022 ஆம் ஆண்டில் அரசாங்கத்தை வீழ்த்திய அறகலய போராட்டத்தின் மையப் பொருளாகவும் அதுவே இருந்தது. எதிரணியில் இருந்த போது வேறுபல வாக்குறுதிகளையும் அரசாங்கம் வழங்கியது.

ஆனால், வாழ்க்கைச் செலவைக் குறைப்பது போன்ற ஏனைய வாக்குறுதிகளைப் போலன்றி, ஊழலையும் விரயத்தையும் குறைக்கும் வாக்குறுதியை நிறைவேற்றுவது பெருமளவுக்கு அரசாங்கத்தின் அதிகாரத்துக்கு உட்பட்டதாக இருக்கிறது. வாழ்க்கைச் செலவைக் குறைப்பது என்பது உள்நாட்டுக் காரணிகளையும் விடவும் பெருமளவுக்கு வெளிக்காரணிகளினால் நிர்ணயிக்கப்படுகிறது.

அரசாங்கம் அதன் செலவினங்களை கணிசமான அளவுக்கு குறைத்திருக்கிறது. தேர்தல் வெற்றிக் கொண்டாட்டங்களும் புதிய ஜனாதிபதியினதும் பாராளுமன்றத்தினதும் பதவியேற்பு வைபவங்களும் மிகவும் எளிமையாக அமைந்தன. தனது முதலாவது உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயமாக கடந்தமாதம் இந்தியாவுக்கு சென்ற ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்க தன்னுடன் ஒரு சிறிய தூதுக்குழுவையே கூட்டிச் சென்றார்.

அரசாங்கம் பதவியில் இருந்த முதல் நூறு நாட்களும் கூட குறிப்பிடத் தக்கவையாகவே அமைந்தன. அரசாங்க உறுப்பினர்கள் எந்தவிதமான நிதி ஊழலிலும் ஈடுபடவில்லை. முன்னர் அதிகாரத்தில் இருந்தவர்கள் பெரும்பாலும் ஏதாவது ஒரு தரப்புடன் பேரத்தில் ஈடுபட்ட பின்புலத்தில் நோக்கும்போது இது குறிப்பிடத்தக்க ஒரு சாதனையாகும்.

சமுதாயத்தின் ஒவ்வொரு மட்டத்திலும் ஊடுருவியிருக்கும் ஊழல் பிரச்சினையை கையாளுவது - அதுவும் குறிப்பாக, நிலையான வருமானங்களைக் கொண்டிருப்பவர்கள் தங்களது தற்போதைய சம்பளங்களை வைத்துக் கொண்டு வாழ்க்கைச் செலவைச் சமாளிக்கமுடியாமல் கஷ்டப்படுகின்ற சூழ்நிலையில் - கடுமையான சவால்மிக்கதாகும்.

வாழ்க்கைச் செலவைக் குறைப்பது மற்றும் சம்பளங்களை அதிகரிப்பது தொடர்பில் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுவதில் அரசாங்கத்துக்கு இருக்கும் இயலாமை அது உருவாக்கிய பிரச்சினைகளின் விளைவானது அல்ல. முன்னைய அரசாங்கங்கள் செய்து கொண்ட உடன்படிக்கைகள் காரணமாக கட்டுப்பட வேண்டியிருக்கும் நிபந்தனைகளும் அந்த பிரச்சினைகளில் அடங்கும்.

இலங்கையை தூய்மையாக்குவதில் அரசாங்கத்துக்கு இருக்கும் பற்றுறுதி "கிளீன் சிறிலங்கா" திட்டத்துக்கான ஜனாதிபதி செயலணி நியமனத்தில் வெளிப்பட்டது. இந்த செயலணியின நோக்கம் ஒரு விரிவான சமூக, சுற்றுச்சூழல் மற்றும் ஒழுக்க நெறிமுறை மாற்றத்தின் ஊடாக நாட்டை மேன்மைப்படுத்துவதேயாகும்.

மாற்றம் என்பது உயர்மட்டத்தில் இருந்து அதாவது ஜனாதிபதியின் செயலாளர், ஆயுதப்படைகளின் தளபதிகள், பொலிஸ் உயரதிகாரிகள் மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சிரேஷ்ட அதிகாரிகள் உட்பட அரசாங்கத்தில் உயர்பதவி நிலைகளில் இருக்கும் உறுப்பினர்கள் போன்ற உயர்மட்டத்தில் இருந்து தொடங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை அரசாங்கம் எடுத்திருக்கிறது போன்று தெரிகிறது.

ஆனால், ஜனாதிபதியின் உறுப்பினர்களின் வகைதொகை, சகல சமூகத்தவர்களையும் அரவணைத்தல், தற்போது நடைமுறையில் உள்ள சட்டங்களின் நடைமுறைப்படுத்தலில் கவனத்தைச் செலுத்துதல், தெளிவான செயற்திட்ட விபரங்களை வழங்குதல் ஆகியவை தொடர்பில் வெளிப்படுத்தப்படும் அக்கறைகள் உரியமுறையில் கையாளப்பட வேண்டியது அவசியமாகும்.

### எதிர்மறையான மூன்று பண்புக் கூறுகள்

ஊழலையும் விரயத்தையும் ஒழிப்பதற்கு புறம்பாக சமூகத்தில் இனவெறியையும் தீவிரவாதத்தையும் ஒழிப்பதையும் தனது முக்கியமான ஒரு பணியாக




அரசாங்கம் பொறுப்பேற்றிருக்கிறது. இதை கருத்தூன்றி கவனிக்கவேண்டிய ஒரு விவகாரமாக அரசாங்கம் கருதுகின்றது போன்று தெரிகிறது. சிறுபான்மைச் சமூகங்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பகுதிகளில் குறிப்பாக வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் தேசிய மக்கள் சக்தி பெற்ற ஆணையில் அரசாங்கம் இனவாதப் போக்குடையது அல்ல என்ற மக்கள் நம்பிக்கையை காணக்கூடியதாக இருக்கிறது.

ஆனால், கிளீன் சிறிலங்கா செயற்திட்டத்தை முன்னெடுப்பதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி செயலணி இன, மத சமூகங்களின் முக்கியத்துவத்தை கவனிக்காமல் விட்டுவிட்டது. அந்த செயலணியின் உறுப்பினர்களை நியமிப்பதில் சகல சமூகங்களையும் அரவணைக்கும் போக்கை கடைப்பிடிக்க அரசாங்கம் தவறியமை பல்வகைமை கொண்ட சனத்தொகையின் மத்தியில் அந்த செயற்திட்டத்தின் ஏற்புடைமை மற்றும் பயனுடைத்தன்மைக்கு குந்தகமாக அமையக்கூடும்.

ஊழல், விரயம் மற்றும் இனவெறி ஆகியவற்றை நாட்டை அவலத்திற்குள் தள்ளிவிட்ட மூன்று எதிர்மறையான பண்புக்கூறுகள் என்று கூறமுடியும். தேசிய வளங்கள் தனிப்பட்ட நோக்கங்களுக்காக எடுக்கப்பட்டதனாலும் போரில் நிர்மூலம் செய்யப்பட்டதனாலும் நாடு அதன் வருமானத்தினதும் செல்வத்தினதும் ஒரு கணிசமான பகுதியை இழந்தது.

தாங்கள் மதிக்கப்படவில்ல என்றும் அரவணைக்கப்படாமல் பாரபட்சத்திற்குள்ளாக்கப்படுவதாகவும் இன, மத சிறுபான்மைச் சமூகங்கள் மத்தியில் காணப்படும் உணர்வே நீண்டகாலப் போராக இறுதியில் மாறிய இனநெருக்கடி தீவிரமடைந்ததற்கு முக்கியமான ஒரு காரணமாகும். அமைச்சரவை, பிரதியமைச்சர்கள் மற்றும் மிகவும் அண்மையில் கிளீன் சிறிலங்கா செயலணி போன்று கொள்கைகளை வகுத்து தீர்மானங்களை எடுக்கும் முக்கியமான அமைப்புகளுக்கு அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டிருப்பவர்கள் பெரும்பாலும் சிங்கள சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பது சிறுபான்மைச் சமூகங்களுக்கு கடந்த கால நினைவுகளை தூண்டிவிடக்கூடும்.

சிங்களவர்களை மாத்திரம் தெரிவு செய்யும் (1936 டொனமூர் அரசியலமைப்பு காலப்பகுதியில் கூட இடம் பெற்றதைப் போன்று) தனது செயலை நியாயப்படுத்துவதற்கு தகுதி மற்றும் நிரூபணமான அர்ப்பணிப்பின் அடிப்படையிலேயே தெரிவுகள் செய்யப்படுவதாக அரசாங்கம் நியாயம் கற்பிக்கக் கூடும். சொந்த இனத்தவர்கள் மீதான நம்பிக்கைக்கு முன்னுரிமை கொடுக்கும் போக்கு நீண்ட வரலாற்றைக் கொண்டது.

பிரிட்டனிடமிருந்து சுதந்திரத்தைக் கோருவதற்கு சிங்களவர்களில் நம்பிக்கை வைப்பதே சிறந்ததாக இருக்க முடியும் என்று சிங்கள தலைவர்கள் உணர்ந்ததால் பிரிட்டனுடன் பேச்சுவார்த்தை நடத்து வதற்கு முழுவதும் சிங்களவர்களைக் கொண்ட அமைச்சரவையை அவர்கள் தெரிவு செய்தனர். அதே வேளை, இலங்கை ஒரு பன்முக சமுதாயம் என்பதையும் இன, மத சிறுபான்மைச் சமூகங் கள் நாட்டின் சனத்தொகையில் சுமார் 30 சதவீதத்தினராக வாழ்கிறார்கள் என்பதையும் கவனத்தில் எடுக்கவேண் டியது அவசியமாகும்.

> சிறுபான்மைச் சமூகங்களை தீர்மானங்களை எடுக்கும் அமைப்புக்களில் உள்ளடக்கத் தவறியதன் மூலம் அரசாங்கம் இந்த தடவை வடக்கு, கிழக்கு மற்றும் மலையக வாக்காளர்கள் நிராகரித்த இன, மத அடிப்படையிலான எதிர்ப்பு அரசியல் மீண்டும் மேலெழுவதற்கு கதவை திறந்து விடுகின்றது

பெரும்பான்மைச் சமூகத்தவர்கள் விவகாரங்களை நோக்குகின்ற முறையில் இருந்து வேறுபட்டதாக சிறுபான்மைச் சமூகத்தவர்கள் அவற்றை நோக்கக் கூடும். கொள்கைகளை வகுத்து தீர்மானங்களை எடுக்கும் அமைப்புக்களில் பல்வேறு இன, மத சமூகத்தவர்களையும் வேறுபட்ட பால்நிலை பின்னணிகளை கொண்டவர்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டியதற்கு அது ஒரு முக்கிய காரணமாகும். தீர்மானங்களை எடுக்கும் அமைப்புக்களில் பெருமளவுக்கு பல்வகைமை கொண்ட பிரதிநிதித்துவம் இருப்பது தீர்மானங்களை எடுக்கும் வேகத்தில் தணிவை ஏற்படுத்தவும் கூடும்.

ஆனால், அவ்வாறு கலப்பான சிந்தனைகளையும் நலன்களையும் கொண்ட அமைப்புக்களில் இடம்பெறக்கூடிய கலந்தாலோசனைகளும் விவாதங்களும் பெரும் எண்ணிக்கையானவர்களுக்கு ஏற்புடையதும் நிலைபேறானதுமான தீர்வுகளை பெரும்பாலும் கொண்டு வரும் வாய்ப்பு இருக்கிறது. தீர்மானங்களை எடுக்கும் அமைப்புக்களில் இருந்து புறந்தள்ளி வைக்கப்படுகிறவர்கள் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களில் தங்களுக்கு எந்த உரித்தும் இல்லை என்று பெரும்பாலும் உணருவார்கள்.

தீர்மானங்களை மேற்கொள்ளும் செயன்முறைகளில் ஒரு அங்கமாக இல்லாதவர்கள் தீர்மானங்களில் அதிருப்திகொண்டு உண்மையில் நடந்ததைப் பற்றி திரிபுபடுத்தப்பட்டதும் தவறானதுமான ஒரு விளக்கத்தைக் கொடுப்பதில் அக்கறை காட்டுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. நடைபாதை வியாபாரிகள் தங்களது பொருட்களை வீதிகளில் பரவிவைத்து விற்பனை செய்வதை நிறுத்துவதற்கு எடுக்கப்பட்டதாகக் கூறப்படும் தீர்மானம் தொடர்பில் ஏற்கெனவே கிளன் சிறிலங்கா செயலணி மீது தவறான விமர்சனம் வந்துவிட்டது.

கோட்டாபய ராஜபக்ச ஆட்சிக் காலத்திலும் இவ்வாறு நடந்தது. வீதியோர வியாபாரத்தை உடனடியாக நிறுத்துமாறு பிறப்பிக்கப்பட்ட உத்தரவு காரணமாக ஆயிரக்கணக்கான சிறிய வியாபாரிகள் பெரும் இடர்பாடுகளுக்கு உள்ளானார்கள். அரசாங்கத்தை அரசியல் ரீதியில் எதிர்ப்பவர்கள் சுற்றுச் சூழலை தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்ற கிளீன் சிறிலங்காவின் ஆணையை திரிபுபடுத்தி பிரசாரங்களைச் செய்கிறார்கள்.

அரசாங்கத்தின் தீர்மானங்களை எடுக்கும் அமைப்புக்களில் இன, மத சிறுபான்மைச் சமூகங்களின் பிரதிநிதித்துவம் இருந்தால் அரசியல் அனுகூல நோக்கங்களுக்காக செய்யப்படுகின்ற தவறான பிரசாங்களை முறியடிக்கக் கூடியதாக இருக்கும். இது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியதாகும். சிறுபான்மைச் சமூகங்களை தீர்மானங்களை எடுக்கும் அமைப்புக்களில் உள்ளடக்கத் தவறியதன் மூலம் அரசாங்கம் இந்த தடவை வடக்கு, கிழக்கு மற்றும் மலையக வாக்காளர்கள் நிராகரித்த இன, மத அடிப்படையிலான எதிர்ப்பு அரசியல் மீண்டும் மேலெழுவதற்கு கதவை திறந்து விடுகின்றது.

இந்த குறைபாட்டைச் சீர்செய்வது நேர்மையைப் பற்றியது மாத்திரமல்ல, நீண்டகால அடிப்படையில் தேசிய ஐக்கியத்துக்கும் உறுதிப்பாட்டுக்கும் அத்தியாவசியமானதாகும். இனவெறி அரசியல் மீண்டும் தலையெடுக்காமல் இருப்பதை உறுதிசெய்வதற்கு அரசாங்கம் அதன் ஆட்சிமுறையின் கட்டமைப்புக்களின் சகல மட்டங்களிலும் இன, மத சிறுபானமைச் சமூகங்களை உள்வாங்குவதில் கருத்தூன்றிய அக்கறை செலுத்த வேண்டியது அவசியமானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் காலத்தில் உறுதியளித்த அநுரவின் புதிய அரசியலமைப்பு ஜே.வி.பி.யின் நிகழ்நிரலில் இல்லை!

பனங்காட்டான்

இன்னும் மூன்று வாரங்கள் கழிந்தால் இலங்கையின் சுதந்திர தின கொண்டாட்டத்தில் அநுர அரசு மூழ்கி விடும். நாட்டின் படைபலத்தை காட்சிப் படுத்துவதே இந்நாளின் முக்கிய இலக்கு.

சிங்கள இனம் ஆளும் வர்க்கமாகவும், தமிழினம் ஆளப்படும் வர்க்கமாகவும் இருப்பதால் விரும்பியோ விரும்பாமலோ தமிழ்ப் பகுதிகளிலுள்ள அரசாங்க அலுவலகங்களும் பாடசாலைகளும் சுதந்திர தினத்தை அரசாங்க நிகழ்வாக மேற்கொள்வதே வழக்கம்.

ஆனால், காலாதிகாலமாக தமிழ் மக்களைப் பொறுத்தளவில் இது கரி நாளாகவே இருந்து வருகிறது. கடந்த ஏழு தசாப்தமாக தமிழ் மக்களின் தேசிய கொடியாக கறுப்புக் கொடியே இருந்து வருவதையும், நமோ நமோ தாயே என்ற பாடலுக்குப் பதிலாக தமிழ்த் தாய் வாழ்த்து இசைக்கப்படுவதும் வழக்கமாகிவிட்டது.

2022ம் ஆண்டு கோதபாய கையளித்த ஜனாதிபதி பதவியை ஏற்றுக்கொண்ட ரணில் விக்கிரமசிங்க ஓர் அறிவித்தலை விடுத்தார். 2023 சுதந்திர தின விழாவின் போது இனப்பிரச்சனைத் தீர்வுக்கான அரசியல் திட்டத்தை தாம் அறிவிக்கப் போவதாக தெரிவித்த இவர், இதற்கான ஆலோசனைகளை சமர்ப்பிக்குமாறு சகல அரசியல் கட்சிகளிடமும் வேண்டினார். 2024 செப்டம்பரில் ஜனாதிபதி பதவியை விட்டு வெளியேற்றப்படும் வரை எதுவுமே நடைபெறவில்லை.

மைத்திரிபால சிறீசேனவுடன் இணைந்து நல்லாட்சி நடத்திய காலத்தில் புதிய அரசியலமைப்பு தொடர்பாக பல காரியங்கள் இடம்பெற்றன. நூறுக்கும் அதிகமான அமர்வுகள் இடம் பெற்று புதிய அரசியலமைப்புக்கான வரைவு தயாரிக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. பின்னர் என்ன நடந்தது என்பது தனிவரலாறு. எதிர்காலத்தில் இது மாணவர்களுக்கு சரித்திரப் பாடமாலாம்.

நல்லாட்சிக்கால அரசியல் யாப்பு தயாரிப்பில் சம்பந்தன் தலைமையிலான தமிழரசுக்கட்சி மும்முரமாக ஈடுபட்டிருந்தது. அவர் சார்பில் எம்.ஏ.சுமந்திரன் பெரும் எடுப்புகளை இவ்வேளையில் மேற்கொண்டதை அனைவரும் அறிவர். ஆனால் அந்த வரைவுக்கு என்ன நடந்தது என்பது எவருக்கும் தெரியாது. எனினும், சுமந்திரனின் பங்களிப்புக்கு நன்றி கூறும் வகையில் அவரை தங்களின் சட்ட மாஅதிபர் என்று ரணில் 'மகுடம்' சூட்டியதை வஞ்சகப் புகழ்ச்சி என்று எல்லாரும் கூறுவர்.

இது தொடர்பான மறக்க முடியாத ஒரு விடயத்தை இங்கு குறிப்பிட வேண்டும். அந்த வேளையில் சுமந்திரன் கனடாவுக்கு விஜயம் செய்தபோது அங்குள்ள ஊடகம் ஒன்றுக்கு செவ்வி அளித்திருந்தார். புதிய அரசியலமைப்பு தொடர்பாக கேட்கப்பட்ட கேள்விக்கு அவரது பதில் பின்வரும் வகையில் அமைந்திருந்தது: "நான் அரசியல்வாதியல்ல. சட்டத்தொழில் புரிபவன். இனப்பிரச்னைத் தீர்வுக்கான புதிய அரசியல் யாப்பை நிறைவு செய்வது எனது பணி. இதனை நிறைவு செய்ததும் அரசியலிலிருந்து விலகி விடுவேன்" என்று பதிலளித்திருந்தார்.

தற்செயலாக அரசியலமைப்பு நிறைவேறத் தவறின் என்ன செய்வீர்கள் என்று கேட்கப்பட்டபோது, அரசியலிலிருந்து விலகி விடுவேன் என்று கூறியிருந்தார். இதன்படி, அரசியலமைப்பு வந்தாலும்சரி வராவிட்டாலும்சரி இரண்டையும் ஒன்றாக ஏற்றுக் கொண்டு அரசியலிலிருந்து ஓய்வு பெறுவேன் என்று கூறிய சுமந்திரன், கடந்த வருட பொதுத்தேர்தலில் தோல்வி கண்ட பின்னரும் அரசியலைவிட்டு விலகாது கட்சியில் பதவிகளுக்குப் போட்டியிட்டு தோல்விகளைச் சுமந்து கொண்டிருப்பது தமிழர் அரசியலில் புதுமையான வரலாறு. இவரிடமிருந்து தமிழரசுக் கட்சியை காப்பாற்ற கடவுளாலும் முடியாதென்று இப்போது கட்சியின் ஸ்தாபகர் தந்தை செல்வா இருந்தால் கூறியிருக்கக்கூடும்.

ரணிலைத் தோற்கடித்து புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள அநுர குமார தேர்தல்கால பரப்புரைகளின் போது, நல்லாட்சிக் கால அரசியல் யாப்பை கையிலெடுத்து சகலரும் ஏற்றுக் கொள்ளும் தீர்வை மையப்படுத்திய புதிய அரசியமைப்பை உருவாக்கப் போவதாக கூறிவந்தார். இவரது பதவியின் நூறு நாட்கள் முடிவடைந்துவிட்டது. புதிய அரசியல் யாப்பு பற்றி எதுவுமே சொல்லக் காணோம். அடுத்த மாதம் வரவுள்ள சுதந்திர தின வேளையில், இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இனப்பிரச்சனைத் தீர்வு பற்றி அறிவிக்கப் படுமென ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தது நினைவுக்கு வருவதை தவிர்க்க முடியவில்லை. அதேபோன்றுதான் தேர்தல் காலத்தில் தாம் சொன்னதை அநுர குமாரவும் மறந்துவிட்டார்போல் தெரிகிறது. வசதி கருதிய மறதி என்பது அரசியல்வாதிகளுக்கு தீராத நோய்.

ஆனால், இதனை அவருக்கு நினைவூட்ட வேண்டிய தமிழர் தரப்பு - குறிப்பாக தமிழ்த் தேசிய தரப்பினரும் அதனை செய்வதற்கு மறந்துள்ளனர். புதிய அரசியல் திட்டம் பற்றிய முக்கோணச் சந்திப்புகளும், எதிரும் புதிருமானவர்களுடைய கருத்துப் பரிமாற்றங்களும் ஜோராக நடந்து வருகின்றனவாயினும், நல்லாட்சிக் காலத்தில் தயாரான யாப்புப் பற்றி பேசுவதை ஒரு துடக்காகவே கருதுவதுபோல் தெரிகிறது. ஆனால், தெற்கில் இரண்டு மூத்த அரசியல்வாதிகள் இதுபற்றி கருத்துக் கூறி வருகின்றனர். ஒருவர் தினேஸ் குணவர்த்தன மற்றவர் திஸ்ஸ விதாரண.

இவர்கள் இருவரும் ஆயுட்கால இடதுசாரிகள். தினேஸின் தந்தை பிலிப் குணவர்த்தன லங்கா சமசமாஜ கட்சியின் ஸ்தாபகர். இக்கட்சியின் தற்போதைய தலைவர் திஸ்ஸ விதாரண. தினேஸ் குணவர்த்தன இப்போது எம்.ஈ.பி. என அழைக்கப்படும் மகாஜன எக்சத் பெரமுனவின் தலைவர். இவர்கள் இருவரும் மகிந்த ஆட்சியில் அமைச்சர்களாக இருந்தவர்கள். கோதபாய மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் ஜனாதிபதிகளாக இருந்தபோது பிரதமர் பதவி வகித்தவர் தினேஸ் குணவர்த்தன.

தாங்கள் முக்கிய பதவிகள் வகித்த அரசாங்கங்களிடம் தமிழ் மக்கள் பிரச்னைகளைத் தீர்க்க துணிவான நடவடிக்கை எடுக்கத் தவறியவர்கள், மாக்சிச ஜனாதிபதி அநுர குமாரவிடம் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்திருப்பதை எவ்வாறு பார்க்கலாம். புதிய அரசாங்கத்துக்கு நெருக்கடி கொடுப்பது அல்லது தங்களுடைய எதிர்கால அரசியலுக்கு விதை போடுவது என்றே இதனை நோக்க வேண்டியுள்ளது.

13ம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும், இதுவரை காலமும் நடைமுறைச் சட்டங்களினூடாகவும் தமிழர்களுக்கு அநீதி விளைவிக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பினூடாக தமிழர்களின் உரிமைகள் காக்கப்பட வேண்டுமென்று இந்த இடதுசாரிகள் இருவரும் பொது வேண்டுகோள் விடுத்துள்ளனர். பல தடவைகள் புதிய அரசியல் யாப்புப் பற்றி பேசப்பட்டதாயினும் எந்த அரசாங்கமும் இதனை நிறைவேற்றவில்லை என்றும், முதலாளித்துவ தரப்பினரான இவர்கள் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணவில்லையென்றும் சுட்டிக்காட்டியுள்ள இவர்கள், அதே முதலாளித்துவ அரசாங்கங்களில் அங்கம் வகித்து அமைச்சர்களாகவும் இருந்தவர்கள் என்பதை மறந்துவிட்டனர்.

1972ம் ஆண்டு சிறீமாவோ பண்டாரநாயக்க ஆட்சியில் தமிழ் மக்களுக்கு ஏற்கனவே இருந்த அரசியல் அதிகாரங்களும் நீக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. இதற்குப் பொறுப்பான அமைச்சராகவிருந்தவர் லங்கா சமாசமாஜ கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா. ஷஇரு மொழிகள் என்றால் ஒரு நாடு - ஒரு மொழி என்றால் இரு நாடுகள்; என்று அறைகூவி இலங்கை பிளவுபடாதிருக்க வேண்டுமென்றால் தமிழர்களின் உரிமைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென குரல் கொடுத்து வந்த கொல்வின் ஆர்.டி. சில்வாவே தமிழினத்தின் ஆகக்குறைந்த உரிமைகளைக் கூட புதிய அரசியலமைப்பில் இல்லாமற் செய்த பிதாமகர் என்பதை தினேஸ் குணவர்த்தனவும் திஸ்ஸ விதாரணவும் மறந்திருப்பது விநோதமானது.

இடதுசாரிகளான இவர்கள் புதிய அரசியலமைப்புக்குக் குரல் கொடுக்கும் அதேவேளையில் அநுர குமாரவின் தேசிய மக்கள் சக்தியின் தாய்க்கட்சியான ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா வெளியிட்டு வரும் கருத்து முற்றிலும் மாறுபட்டது. வடக்கு மக்களுக்கு அதிகாரப் பகிர்வு அவசியமாக இல்லை. பொருளாதார பிரச்சனையே உள்ளது என்று கூறியுள்ளதன் ஊடாக இரண்டு காய்களை ஒரே கல்லில் அவர் வீழ்த்த எத்தனிக்கிறார்.

முதலாவது - இனப்பிரச்சனையென்பது வடக்கில வாழும் மக்களுக்கு மட்டுமே உள்ளது என்று பிரித்துக் காட்ட எத்தனிப்பது. இரண்டாவது - ஏற்கனவே நீதிமன்ற வழக்கினூடாக வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் அரசியலமைப்புத் திருத்தத்தை ரத்துச் செய்தது போன்று அரசியல் தீர்விலும் இரு மாகாணங்களையும் பிரித்து வைப்பது. ஆக, வடக்கும் கிழக்கும் ஒரு போதுமே தீர்வு விடயத்தில் ஒன்றுபடக்கூடாது என்பதில் ஜே.வி.பி. மிகவும் கூர்மையாகச் செயற்படுவதை இங்கு அவதானிக்க முடிகிறது.

பதின்மூன்றாம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் இந்தியா அக்கறை காட்டவில்லையென்ற குரல் அநுர குமாரவின் அந்நாட்டு விஜயத்தின் பின்னர் மேலெழுந்துள்ளது. பிரதமர் மோடி இவ்விடயம் தொடர்பாக அநுர குமாரவுடன் உரையாற்றத் தவறிவிட்டாரென்ற குற்றச்சாட்டும் பல மட்டங்களில் உள்ளது.

கடந்த வருடம் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தமிழர் தரப்பு பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையின்போது, இப்போது இருப்பவைகளை சரியாகப் பயன்படுத்துங்கள். இல்லாதவைகளை தொடர்ந்து கேட்பதில் பிரயோசனம் இல்லையென்றவாறு இவர் தெரிவித்த இக்கருத்தே இந்தியாவின் நிலைப்பாடு.

புதிய அரசியலமைப்பில் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் தீர்வு காணப்படுமென்று அநுர குமார கூறுவதை செயற்படுத்த மூன்று வருடங்களாகுமென்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுவிட்டது. அப்படியென்றால் அடுத்த பொதுத்தேர்தல் காலம்வரை இதற்காக காத்திருக்க வேண்டும். ஆனால், ஜே.வி.பி.யின் நிகழ்நிரலில் புதிய அரசியலமைப்புத் திட்டம் இல்லையென்பது அநுர குமாரவுக்கும் அவரது தோழர்களுக்கும் நன்கு தெரியும். இதனை எப்போது இவர்கள் பகிரங்கப்படுத்துவார்கள்? ●



**2022ல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நல்லாட்சிக் கால புதிய அரசியலமைப்பு வரைவைக் கைவிட்டு புதிய ஆலோசனைகளை சகல கட்சிகளிடமும் கேட்டுப் பெற்றார். என்ன நடந்தது? கடந்த வருட தேர்தல் கால உரைகளில் நல்லாட்சிக்கால வரைவை மையப்படுத்தி அனைவரும் ஏற்கும் புதிய அரசியல் வரைவு தயாரிக்கப்படுமென அநுர குமார கூறினார். இதற்கு மூன்று வருடங்கள் தேவையென இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இவரது தாய்க்கட்சியான ஜே.வி.பி.யின் நிகழ்நிரலில் இது காணப்படவில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களிற்கு தேர்தல்வாதிகள் எதை பெற்று கொடுத்தார்கள்?

- ச. வி. கிருபாகரன்
(பிரான்ஸ்)

தந்தை செல்வாவின் தீர்கதரிசனமானது "தமிழ் மக்களை கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்" என்பதை இங்கு எழுதும் பொழுது, ஒரு சந்தேகம் உருவாகியுள்ளது. அதாவது, இன்றைய சமுதாயம், யார் இந்த தந்தை செல்வா என்பதை புரிந்து கொள்வார்களா? அல்லது காலம் சென்ற தமிழரசு கட்சியின் ஸ்தபாகரும் தலைவரான எஸ். ஜே. வி. செல்வநாயகம் என இங்கு குறிப்பிடவேண்டுமா என்பது எனக்குள் உருவாகியுள்ள ஓர் சந்தேகம்.

இன்று தமிழர்களின் தாயகபூமியான வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் என்ன நிலையில் உள்ளார்கள் என்பதை, இவ் தேர்தல்வாதிகளான அரசியல்வாதிகள், தெரிந்தும் தெரியாதது போல் செயற்படுவது, மிகவும் கவலைக்குரியதும் கண்டிக்கதக்க வேண்டிய விடயம்.

1972ல் சிங்கள பௌத்த அரசு, குடியரசு யாப்பை மேற்கொள்ளவிருந்த வேளையில், அன்று தந்தை செல்வா உட்பட பல தமிழ் அரசியல்வாதிகள், அன்றைய அரசுடன் தமிழ் மக்களிற்கான அரசியல் தீர்வை, அவ் புதிய யாப்பில் முன் வைக்குமாறு பல பேச்சுவார்த்தைகள் நடத்தினர். ஒன்றும் பலனழிக்கவில்லை.

அன்றைய காலகட்டத்தில், இன்றைய ஜனதிபதியான அநுராகுமார திசநாயக்காவிற்கு, நான்கு வயது. ஆனால் தமிழ் மக்களின் அரசியல் தீர்விற்கான போராட்டம் என்பது 1948ம் முதல் தொடர்கிறது என்பது, தமிழ் அரசியல்வாதிகளிற்கு வெட்கேடன விடயமாக காணப்பட்டாலும், சிங்கள பௌத்த அரசியல்வாதிகளிற்கு, அவர்களது மக்களின் பாராட்டுதல் கௌரவத்திற்குரிய விடயம்.



## "தமிழ் மக்களை கடவுள்தான் காப்பாற்றவேண்டும்"
### - தந்தை செல்வாவின் தீர்க்க தரிசனம்

எமது தமிழ் அரசியல் என்பது, புத்திஜீவிகள், கல்விமான்கள், அறிவாளிகள், அனுபவசாலிகளில் ஆரம்பமாகி, இன்று எந்த தமிழனும் அரசியல்வாதியாகலாம் என்பதற்கு மாறாக தேர்தல்வாதிகளாகலாம் என்பதை, நாம் நடந்து முடிந்த பாரளுமன்ற தேர்தலில் பார்த்துள்ளோம்.

வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்களின் அரசியல் போராட்டம் என்பது, 1948ம் ஆண்டில் முன்னின்று நடத்தியவர்களின், பேரப்பிள்ளைகள் இன்று குட்டி அரசியல் தலைவர்களாக காட்சியளிக்கின்றனர். அன்றைய தமிழ் அரசியல்வாதிகளிற்கு, அவர்களது கல்வி ஆற்றல் அனுபவம் ஆளுமை அடிப்படையில், தென்பகுதி மக்களிடமும் அரசியல்வாதிகளிடம் நல்ல மதிப்பு கௌரவம் இருந்தது என்பது உண்மை.

எது என்னவானலும், முன்னைய அரசியல்வாதிகளிற்கும் இன்றைய தேர்தல்வாதிகளிற்கும் இடையில் ஏதோ ஒரு வெட்க கேடான ஒற்றுமை காணப்படுகிறது. அதாவது, முன்னைய அரசியல்வாதிகளும் ஒற்றுமையின்றி - ஐம்பதிற்கு ஐம்பது, சமஸ்டி, சுயாட்சி, மாநில சுயாட்சி, மாவட்டம் என மாறி மாறி பேரம் பேசி, தமிழ் மக்களின் ஒற்றுமையின்மையை சிங்கள பௌத்தர்களிற்கு நிருபித்தார்கள். இதனால், பல தமிழ் மக்கள் மீதான இனவெறி தாக்குதல்கள், கொலை கொள்ளை இரத்த கறைகள் தோய்ந்த போராட்டங்களின் பின்னர், இறுதியில் ஒற்றுமைபட்ட சில தமிழ் அரசியல்வாதிகள், வடக்கு கிழக்கை தாயகமாக கொண்ட தமிழ் மக்களிற்கு, நிரந்தர தீர்வாக, "தனித் தமிழீழம்" என்ற கொள்கைக்கு உடன்பட்டார்கள். அத்துடன் இதை ஜனநாய முறையில், 1977ம் ஆண்டு பாரளுமன்ற தேர்தலில் முன் வைத்து, பாரிய வெற்றியும் கண்டார்கள் என்பதை உலகம் அறியும்.

ஆனால் இன்றைய தமிழ் தேர்தல்வாதிகளிடையே, கொழும்பை தளமாக கொண்டுள்ள குழப்பவாதிகள் போன்று - அன்றும் "தமிழீழத்திற்கான ஆணையை" மக்களிடையே பெற்ற பின்னர், தனிநாட்டை அமைப்பதற்கான சர்வதேச ஆதரவை தேடாது, அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுடன் மாவட்ட சபையை ஏற்றுகொள்ளும் பேச்சுவார்த்தையை நடத்திய காரணத்தினால், வடக்கு கிழக்கு வாழ் மக்களின், விசேடமாக இளைஞர்களின் வேறுப்பை எதிர்ப்பை சம்பாதித்து கொண்டார்கள்.

இறுதியாக வடக்கு கிழக்கு வாழ் இளைஞர்கள், தமிழ் மக்களிற்கான அரசியல் உரிமை பெற்று கொள்வதற்கு ஆயுத போராட்டத்தை ஆரம் பித்த வேளையில், அங்கும் பல பிரிவுகள் - சோசலிசம், கம்யுனிசம், மாக்சிச பிரிவு களாக பிரிந்து போராடினார்கள்.

தமிழீழ புலிகளினால் ஆயுத போராட்டம் வெற்றியாக நடைபெற்று, ஏறக்குறைய இரு தசாப்தங்களிற்கு மேலாக, அவர்களினால் ஓர் நடைமுறை அரசை, சிங்கள பௌத்த அரசிற்கு சமனாக நடாத்தியதை யாரும் மறுக்க முடியாது. இவ் காலப்பகுதிகளில் புலிகளின் அரசியல் நிலைபாட்டை நன்றாக ஆதரித்தவனில் நானும் ஒருவன் என்பதை எந்த ஒழிப்பு மறைப்புமின்றி இங்கு ஒத்து கொள்கிறேன்.

முடிவுரை என்னவெனில், இவ் நடைமுறை அரசை மட்டுமல்ல, ஈழத்தமிழகத்தின் கௌரவம், மானம், பெருமையை அழித்தது, பல சர்வதேச நாடுகளாக இருந்தாலும், இவ் நாசகார செயலுக்கு உடத்தையாக இருந்தவர்கள் அத்தனை பேரும், ஈழம் தமிழர் என்பது மட்டுமல்லாது, புலிகளின் முக்கிய அங்கத்தவர்கள் சிலரும் என்பதே யாதர்த்தம்.

இன்று நாம் எங்கு உள்ளோம்? அதாவது 'பாம்புகளும் ஏணிகளும்' என்ற விளையாட்டில், 1948ம் ஆண்டு ஆரம்பித்த இடத்திற்கு மீண்டும் வந்து பதினைந்து வருடங்களாகி உள்ளது என்பதை, எந்த தேர்தல்வாதி உணர்ந்துள்ளார்?

தனது கட்சியில் ஒரு பாரளுமன்ற உறுப்பினரை கொண்ட ஜி.ஜி.பொன்னம்பலத்தின் பேரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இன்றும் "ஒற்றையாட்சிக்கு வெளியில்" அரசியல் தீர்வு பெற்று கொடுக்க போகிறராம். அடுத்து முன்னாள் தமிழரசு கட்சியின் தலைவர் இராசமணிக்கத்தின் பேரனும், ஏதோ அரசியல் தீர்வு பற்றி முணு முணுக்கிறார், ஒன்றும் விளங்கவில்லை. இதற்குள் எங்கள் கிளிநோச்சி அதிபர், கனடாவிலிருந்து ஏதோ அரசியல் தீர்வு இறக்குமதி செய்ய போகிறராம். அடுத்ததாக தந்தை செல்வாவின் பெயரை தமிழ் மக்களிடையே மறக்க செய்ய முயற்சிக்கும் பேரன், சந்திரகாசன் இளங்கோவன், அநுரா குமார திஸநாயக்காவிடம் "எக்கிய ராஜ்ஜியம்" அடிப்படையில் சுமந்திரனுடன் இணைந்து தீர்வு பெற்று கொடுக்க போகிறாராம்!

இவர்கள் யாவரும் இலங்கைதீவின் அரசியல் சர்வதேச நிலைமைகள் பற்றி படிப்பதற்கு நிறைய உண்டு. இவர்கள் "வெள்ளம் வந்த பின்னர் அணை கட்ட முனைவார்களாக" இருப்பின், பாதிக்கப்பட போவது வடக்கு கிழக்கு வாழ் மக்கள், அதாவது தமிழ் மக்கள்.

தற்சமயத்தில், இந்தியாவிற்கு உள்ள சர்வதேச நோக்கு, இலங்கைதீவில் உள்ள வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு பற்றி மட்டும் சிறிலங்காவிற்கு அளுத்தம் கொடுத்து, இலங்கைதீவில் சீனாவின் ஆதிக்கத்தை அனுமதிப்பதா, அல்லது தமது நீண்டகால நண்பணான சிறிலங்காவுடன் சமாளித்து கொண்டு, சீனாவின் ஆதிக்கத்தை சிறிலங்காவில தடுப்பதா. இவ் நிலையில் நாம் தான் எமது ராஜதந்திரத்தை மிகவும் கவனமாக முன் நோக்க வேண்டும். ஒன்று மிக நீண்ட காலமாக சிறிலங்காவின் அரசியல் யாப்பில் உள்ள 13வது திருத்த சட்டத்தை தன்னும் உடன் நடைமுறைபடுத்துங்கள் என, 2009ம் ஆண்டு மே மாதத்தின் பின்னர், பெரும்பான்மையான வடக்கு கிழக்கு வாழ் மக்கள், இந்தியாவிடம் வேண்டுகோள் வைத்தது கிடையாது.

இத் தவறிற்கு, அரசியல்வாதிகளெனப்படும் தேர்தல்வாதிகள், தாம் வாக்குகளை பெற்று கொள்வதற்காக, மக்களிற்கு கூறகின்ற கற்பனை அரசியல் தீர்வுகளும், பொய்யும் புரட்டுமே காரணம். இவர்கள் இவற்றை தமது சுயநலத்திற்காக தொடர்வார்ளேயானால், கால போக்கில் எமக்கு மிச்ச போவது ஒன்றுமில்லை என்பதை இவ் அரசியல்வாதிகளெனும் தேர்தல்வாதிகள் மனதில் கொள்ள வேண்டும்.

இதற்குள் சில மேற்கு நாடுகளின் அழுத்தத்தில், ஏவுதலில், நிதியில் 'ஏக்கிய ராஜ்ஜியத்தின்' உள்நாட்டு வெளிநாட்டு கோமாளிகள் சிலர் "இமாலய பிரகடனமாம்". இவர்களின் தொல்லைகள் தாங்க முடியாது - இலங்கை இந்தியா ஒப்பந்தம் மூலம் உருவான, பதின்மூன்றவது (13) திருத்தத்தை முழுதாக நடைமுறைபடுத்துங்கள் என கூறி வந்த இந்தியாவும் மௌனமாகியுள்ளது. இறுதியில் புத்த பெருமான் அடிவருடிகள் கூறும், கற்பனை கதையான "மகாவம்சம்", தமிழர்கள் பற்றி கூறும் கற்பனை கதைகளிற்கு, எமது தேர்தல்வாதிகளே நாளுக்கு நாள் உரம் போடுகிறார்கள்.

இறுதியில் ஈழத்தமிழனிற்கு கிடைத்தது யாவும் - கொலை, கொள்ளை, காணமல் போதல், கைது, சித்திரவதை, பாலியல் வன்முறை போன்றதுடன், இடப்பெயர்வு, காணி சொத்து போன்றவற்றை பறிகொடுத்தவையே. இவை தான் எமது ஏழு தசாப்தங்களில் நடைபெற்று வரும் அரசியல் போராட்டத்தின் பெறுபேறுகளா?

அடுத்து, ஜனதிபதியான அநுரா குமார திசநாயக்காவின் கட்டளைக்கு அமைய, வடக்கு கிழக்கு மாகணங்களில் இராணுவ முகங்கள் அகற்றப்படுவதும், மக்களின் காணிகள் விடுவிக்கபடுவதன் காரணிகளை, மக்கள் அறியாதுள்ளது வியப்பிற்குரியது. முதலாவதாக ரணில் விக்கிரமசிங்கா ஜனதிபதியாக இருந்த காலத்தில், ஐ.நா. உட்பட மற்றைய சர்வதேச நிறுவனங்களிற்கு, தாம் கட்டம் கட்டமாக இராணுவத்தை குறைப்பதுடன், இராணுவ முகங்களை அகற்றுவதாக கூறியிருந்தார். அத்துடன், தற்போதைய அரசாங்கம், தேவையற்ற செலவுகளை குறைப்பதன் அடிப்படையிலேயே, மக்களின் கணிகள் விடுவிப்பதும், இராணுவ முகாங்கள் அகற்றப்படுவதும் என்பதை, தமிழ்மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

அடுத்த முக்கிய விடயம் என்னவெனில், தற்போதைய அரசினால் கொண்டுவரவுள்ள புதிய அரசியல் யாப்பில், இரு முக்கிய விடயங்கள் நடைபெறவுள்ளன. ஒன்று பதின்மூன்றாவது (13) திருத்த சட்டம் நீக்கப்பட்டு, தமிழர்களிற்கு பூஞ்சாண்டி காட்டும் ஏதோ ஒன்று புகுத்தபடவுள்ளது. இரண்டாவதாக, இவ் புதிய யாப்பு என்பது, 1972ம் குடியரசு யாப்பு போன்றோ அல்லது 1978ம் ஆண்டு யாப்பு போன்று, தமக்கு கிடைத்த பெரும்பான்மையை கொண்டு நடை முறை படுத்தாது, இவர்கள் புதிய யாப்பை மக்களின் பொது வாக்கெடுப் பிற்கு விடப்படவுள்ளதாக அறிவித்துள் ளனர்.

இங்கு அநுரா அரசின் நகர்வு தெளிவாகிறது. மக்களிடம் பொது வாக்கெடுப்பிற்கு விடுவது என்பது, இவர்களின் கபட தன்மையை வெளிப்படையாக காட்டுகிறது. தெற்கில் உள்ள மக்கள், தமிழர்களிற்கு ஏதோ ஒரு அரசியல் தீர்வை யாப்பில் கொடுக்க முன் வருவார்களானால், இன்று ஏழு தசாப்தங்களாக, தமிழ் மக்கள் இலங் கைதீவில் அரசியல் உரிமை இல்லாது தொடர்ந்து போராட வேண்டிய நிலைமை, ஒரு பொழுதும் ஏற்பட்டிருக்க முடியாது, என்பதை யாவரும் விளங்கிகொள்ள வேண்டும்.

சுருக்மாக கூறுவதனால், ஏழு தசாப்தங்களாக எமது அரசியல் விடுதலை போராட்டம், எமக்கு புகட்டிய பாடம் என்னவெனில், இந்தியா உட்பட ஒன்றோ இரண்டு வல்லரசு நாடுகள், எமது அரசியல் விடுதலை போராட்டத்தை அங்கீகரித்து, முன்னகர்த்தாத கட்டத்தில், எமக்கு சிங்கள பௌத்த அரசிடம் இருந்து கிடைக்க போகும் ஆகக்கூடிய அரசியல் உரிமை என்பது, அதிகாரம் கூடிய பிரதேச சபையாகும். இவை யாவற்றிற்கு காரணம், அரசியல் ராஜதந்திரம் தெரியாத எமது அரசியல் வாதிகளெனப்படும், தேர்தல்வாதிகளே. •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஜேந்திரகுமாரின் முன்னெடுப்பும் காத்திருக்கும் சவால்களும்



கந்தையா அருந்தவபாலன்

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் பாரம்பரிய சிங்கள, தமிழ்க் கட்சிகளுக்கு ஏற்பட்ட பாரிய பின்னடைவு அக்கட்சி களை அவற்றின் அரசியல் எதிர்காலம் தொடர்பாக ஆழமாகச் சிந்திக்க வைத்துள்ளதை அக்கட்சித்தலைவர்களின் அண்மைக்கால வெளிப்பாடுகள் காட்டிநிற்கின்றன. அவ்வெளிப்பாடுகளில் ஒன்றாக ஒன்றாகவிருந்து பிரிந்து சென்றவர்களை மீள ஒருங்கிணைக்கும் முயற்சி காணப்படுகின்றது. தென்னிலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சியையும் ஐக்கிய மக்கள் சக்தியையும் ஒன்றிணைக்கும் முன்னெடுப்பும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பிரிந்து சென்றவர்களை மீளக் அக்கட்சிக்கு வரவழைக்கும் முயற்சியும் காணப்படும் அதேவேளை தமிழ்த் தேசியக் கட்சிகளை குறித்த ஒரு புள்ளியில் ஒன்றுபடுத்துவதற்கான முன்னெடுப்புக்களும் காணப்படுகின்றன. தமிழ்க்கட்சிகள் ஒன்றுபடவேண்டும் என வழமையாகப் பாடப்படும் பல்லவி பாராளுமன்றத் தேர்தலின்பின் சற்றுச் சுருதி கூட்டிப் பலரால் பாடப்பட்டாலும் அது தொடர்பாக முதலில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமே சில வரையறைகளை முன்வைத்துக் களத்தில் இறங்கியுள்ளதைக் காணமுடிகிறது. தேர்தலில் ஏற்பட்ட பின்னடைவு மட்டுமன்றி 'இவர்கள் ஒன்றுக்கும் சரிவரமாட்டார்கள்' என்ற பரவலான மக்கள் அபிப்பிராயமும் அவரின் இந்த முன்னெடுப்பைத் தூண்டியிருக்கக் கூடும். அவர் இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனுடனும் ஜனநாயக தமிழ்த் தேசிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினரும் ரெலோ கட்சியின் தலைவருமான செல்வம் அடைக்கல நாதனுடனும் இரண்டு சுற்றுக் கலந்துரையாடல்களை நடத்தி முடித்ததுடன், பரந்த அடிப்படையில் குறித்த கட்சிப் பிரதிநிதிகளுக்கிடையிலான கலந்துரையாடலுக்கு இம்மாதம் 25 ஆம் தகதியும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. காலம்பிந்தியேனும் அவரால் எடுக்கப்படும் இம்முயற்சி பலதரப்புகளாலும் வரவேற்கப்பட்டாலும் அது பல சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது என்பதே இன்றைய அரசியல் களநிலைமை.

ஒருபுள்ளியில் இணைப்பதற்கான கஜேந்திரகுமாரின் முன்னெடுப்பு எதிர்கொள்ளவுள்ள அடிப்படையான சவாலாக அமையக்கூடியது அதற்கான தொடக்க வரையறையாக அல்லது நிபந்தனையாக அவர் குறிப்பிட்ட விடயமாகும். இந்த முயற்சியில் இறங்கும் போது அவரால் கூறப்பட்ட முக்கிய விடயம் 'தமிழ்மக்கள் பேரவையின் தீர்வுத்திட்டத்தின் அடிப்படையில் ஒன்றுபடுதல்' என்பது. இவ்விடயம்



தொடர்பாகப் பல ஐயங்கள் எழுவது இயல்பானதாகும். ஒன்று இவர் தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ளவர்களை ஒன்றுபடுத்த விரும்புகிறாரா அல்லது ஒரு சில தரப்புகளை மட்டும் ஒன்றுபடுத்த விரும்புகிறாரா அல்லது தனது முடிவுக்குப் பின்னால் வரக்கூடியவர்களை வாவென்று அழைக்கிறாரா? அல்லது இதன்பின்னால் வேறுநோக்கங்களும் உள்ளதா? என்பது. இவரது முன்னெடுப்புத் தொடர்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சித்தலைவர்கள் சிலரால் முன்வைக்கப்பட்ட விமர்சனம் ஒன்றுக்குப் பதிலளிக்கையில் இந்த முயற்சிக்குத் தான் தலைமை தாங்கவில்லை என்றும் ஒரு ஏற்பாட்டாளன் மட்டுமே என்றும் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறாயின் ஏற்பாட்டாளன் ஒருவன் எவ்வாறு முடிவை அல்லது தீர்மானத்தை முன்கூட்டியே குறிப்பிட முடியும். இவர் ஏற்பாட்டாளன் மட்டுமன்றி கட்சி என்ற அடிப்படையில் ஒருபங்காளனாகவும் இருக்கின்றார் என்பது உண்மையாயினும் பங்காளன் என்ற வகையில் கூட்டுக் கலந்துரையாடலின்போது தனது முன்மொழிவாக அதனை வைக்கலாமேயன்றி முடிவாக அது இருக்க முடியாது அல்லவா?

இதனை இன்னொரு கோணத்திலிருந்து பார்ப்போம். தமிழ் மக்கள் பேரவையின் அரசியல் தீர்வு முன்மொழிவில் புதுமையாக ஒன்றுமில்லை. வழமையாகத் தமிழ்த் தேசியக் கட்சிகளால் உச்சரிக்கபடுபவைதான். தாயகம், தேசம், இறைமை, சுயநிர்ணய உரிமை, தன்னாட்சி போன்றவற்றை உள்ளடக்கிய உயர்ந்தபட்ச சமஷ்டிக்கட்டமைப்பு ஒன்று. இது தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வின் இறுதி இலக்கு அல்லது தூரநோக்கு என்பதைத் தமிழ்த் தேசியத் தலைவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்கிறார்கள். கட்சிகள் தங்கள் தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் இதையே தொடர்ந்து முன்வைத்து வருகின்றன. இதனை ஒருபோதும் அவர்கள் மறுதலித்ததுமில்லை. ஆனால் அவர்களுக்கிடையிலான வேறுபாடுகள் எதில் எழுகின்றது என்றால் தூரநோக்குக்குக்கும் அதனை அடைவதற்கான படிமுறையான செயற்படுநோக்குக்குமிடையில்தான். அதாவது சில தரப்புகள் தற்போதைய மாகாண சபை முறைமையை ஏற்று அரசியலமைப்பின் 13ஆம் திருத்தத்துக்கமைய காணி, காவல்துறை அதிகாரங்களை முதலில் பெறுவது பின்னர் அதிலிருந்து படிப்படியாகச் சமஷ்டிக் கட்டமைப்பை நோக்கி நகர்வது என்பது. செல்வம் அடைக்கல நாதன் உட்பட பொதுவாக ஜனநாயகத் தமிழ்த் தேசிய முன்னணித் தலைவர்கள் இந்த நிலைப்பாட்டில்தான் உள்ளனர். ஆனால் கஜேந்திரகுமாரின் இதுவரை யான நிலைப்பாடு மட்டுமன்றி இப் போது ஒற்றுமைக்கான தேவைப்பாடாக இருப்பதுவும் இறுதி இலக்கான உயர்ந்த மட்ட சமஷ்டியாகும். அதாவது ஒருதரப்பு இருப்பதை முதலில் பாதுகாத்துக் கொண்டு விரும்பியதை நோக்கி நகரலாம் என்பது. மற்றது நேரடியாக விரும்பியதை அடைவதென்பது. அவ்வாறாயின் இங்கு தோன்றக்கூடிய ஐயம் அல்லது சவால் இறுதி இலக்கை மட்டும் ஏற்றுக் கொள்பவர்களை ஒற்றுமைப் படுத்த எண்ணுகிறாரா அல்லது எல்லோரையும் ஒற்றுமைப்படுத்த எண்ணுகிறாரா? என்பது. எல்லோரையும் ஒற்றுமைப்படுத்த விரும்பியிருந்தால் அவ்வாறான வரம்பை முதலில் கட்டியதேன்? அவ்வாறான சிந்தனை உள்ளவர்களைப் புறந்தள்ளி உண்மையான ஒற்றுமையைத் தோற்றுவிக்க முடியுமா? புறந்தள்ளும் நோக்கமில்லை எனில் அவ்வாறு குறிப்பிட்டதன் நோக்கம் கட்சியின் வழமையான நிலைப்பாடான கூழும் குடிக்க வேணும் மீசையிலும் படக்கூடாது என்பதன் வெளிப்பாடா?

> **மாகாணசபைகள் தேவையில்லாதவை என்பதாக இருப்பது மட்டுமன்றி அரசாங்கம் படிப்படியாக அதை நோக்கியே காய்களை நகர்த்தி வருகின்றது என்பதை ஆழமாக நோக்கினால் புரியும்**

இந்த முன்னெடுப்புக்கான இன்னொரு பிரதான சவால் தமிழரசுக்கட்சியாகும். அக்கட்சி இன்று இருக்கும் நிலையில் ஓர் உறுதியான தீர்மானத்துக்கு வருமா? அதுவும் சிறிதரனுடன் கதைத்து இப்போதைய நிலையில் அதனை ஒப்பேற்ற முடியுமா? ஏலவே அக்கட்சித் தலைவர்கள் சிலரால் இரு வகையான விமர்சனங்கள் முன்வைக்கப் பட்டுள்ளன. ஒன்று பெரிய கட்சியாகத் தாங்கள் இருக்கும்போது ஒரு உறுப்பினரை மட்டும் கொண்ட கட்சி அல்லது கஜேந்திரகுமார் எப்படி இதனை முன்னெடுக்கலாம் என்பது. இது வைக்கோற் பட்டடை நாயின் மனநிலையன்றி வேறில்லை. மற்றது தமிழ்த் தேசிய பேரவைத் தீர்மானத்தில் தமது கட்சிக்கு பங்கில்லை; எனவே அதனைப் பரிசீலிக்க முடியாது எனச் சுமந்திரன் சொல்லியிருப்பது. இது விடயம் சரியாக இருந்தால்கூட நான் அதில் பங்கெடுக்காதலால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்ற மனநிலை. அதாவது மருமகள் பிச்சையில்லை என்று எவ்வாறு சொல்ல முடியும்? நான் சொல்லுறன் பிச்சையில்லை என்ற மாமியாரின் மனநிலைதான். அது மட்டுமன்றி நல்லாட்சிக் காலத்தில் வரையப்பட்ட ஒற்றையாட்சிக்குள் சமஷ்டி என்ற நவீன? அரசியல் தீர்வு தொடர்பாகச் சுமந்திரன் சிந்தித்துக் கொண்டிருப்பது மட்டுமன்றி இன்றைய நிலையில் கட்சித்தீர்மானங்களில் அதிக செல்வாக்குச் செலுத்தும் நிலையிலிருப்பது கஜேந்திரகுமாரின் முன்னெடுப்பு எதிர்நோக்கும் இன்னொரு முக்கிய சவாலாகும்.

இவ்வாறு சமஷ்டியா அல்லது பதின்மூன்றா அல்லது எந்த முடி வென்றாலும் நாங்கள்தான் எடுக்க வேணும் என்று நமக்கிடையில் அடி பட்டு ஒரு முடிவுக்கு வந்தாலும் அந்த முடிவை அடைவதற்கான தேசிய மற்றும் சர்வதேச அரசியல் களநிலைமைகள் உள்ளனவா என்பது இதற்கு முன்னுள்ள இன்னொரு சவாலாகும். கொள்கை ரீதியாக மட்டுமன்றி அரசியல் பலத்திலும் இன்று உறுதிபெற்றுள்ள தேசிய மக்கள் சக்தியின் அடிப்படைச் சித்தாந்தமே இங்கு இனப்பிரச்சினை ஒன்றில்லை. அது வெறும் சமூகப் பொருளாதாரப் பிரச்சினை மட்டுமே. எனவே மாகாணசபைகள் தேவையில்லாதவை என்பதாக இருப்பது மட்டுமன்றி அரசாங்கம் படிப்படியாக அதை நோக்கியே காய்களை நகர்த்தி வருகின்றது என்பதை ஆழமாக நோக்கினால் புரியும். இந்நிலையில் புதிய அரசியலமைப்பின் போது தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்டத்தை முன்வைப்பதாலோ அல்லது 13 ஐக் கேட்பதாலோ ஒன்றும் நடந்துவிடப் போவதில்லை.

இல்லையில்லை அரசியலமைப்பின் 13ஆம் திருத்தமும் மாகாணசபையும் இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் வழி உருவானது. அதனால் அதனை இந்தியா எமக்குப் பெற்றுத்தரும் என இன்னொரு பக்கம் நம்புவதிலும் இலங்கையை குற்றவியல் கூண்டில் நிறுத்த முடியும் என்று நம்புவதில் பயனிருக்கப் போவதில்லை. இந்திராகாந்தி- ஜே.ஆர். ஜெயவர்த்தனா கால இந்திய அரசியலும் இல்லை. இலங்கை அரசியலும் இல்லை. அன்றைய உலக அரசியல் ஒழுங்கும் இன்றில்லை. அதேபோல் பின்னர் தமிழ்த்தரப்பைப் பலமாக வைத்திருந்த விடுதலைப் புலிகளும் இன்றில்லை. இந்த நிலையில் 13 ஐ இந்தியா மறந்து கனகாலமாச்சு என்பதே யதார்த்தம். அதேபோல் மாறிவரும் உலக ஒழுங்கும் எமக்குச் சாதகமாக இல்லை. யுத்தக் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்ட புடினும் நெத்தனியாகும் எப்படி தொடர்ந்து நடக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டால் இன்றைய உலக ஒழுங்கு யார் சார்பானது என்பது விளங் கும். மன்னிப்புச் சபை போன்றன வேண்டுமானால் தொடர்ந்து தீர்மானங் களை மேற்கொள்ளும். காலங்கடந்து விடும். அதனுள் எல்லாமே கரைந்துவிடும் என்பதுதான் வரலாறு. ஏனைய சிங்களக் கட்சிகளைவிட தமிழ் மக்களுக்கு எதிராக மிகமோசமாக நடந்துகொண்ட தேசிய மக்கள் சக்திக்கு யாழில் அதிக வாக்களிக்கும் நிலைக்கு மாறிய மக்கள் இதற்கு நல்ல எடுத்துக் காட்டு. எனவே குண்டுச் சட்டிக்குள் தொடர்ந்து நாம் குட்டிக்கரணம் போடுவதை விடுத்து மாறிவரும் தேசிய, சர்வதேச ஒழுங்குகளைப் புரிந்து கொண்டு ஒற்றுமை யாவதும் சாத்தியமான தீர்மானங்களை எடுப்பதுவுமே தமிழ் மக்களின் இன்றைய தேவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூடுபிடிக்கும் டில்லி பேரவைத் தேர்தல்!

ம.ஆ.பரணிதரன்

டில்லி சட்டப்பேரவை தேர்தலுக்கு ஆளும் ஆம் ஆத்மி கட்சி, அதனுடனான அரசியல் கூட்டணியை சமீபத்தில் முறித்துக் கொண்டுள்ள காங்கிரஸ், எதிர்க்கட்சியான பாஜக ஆகியவை ஆயத்தமாகியுள்ளன. இவற்றில் ஆம் ஆத்மி நீங்கலாக மற்றவை முதல்வர் வேட்பாளரின்றி பேரவைத் தேர்தலை சந்திக்க முடிவு செய்துள்ளன.

கடந்த 10 ஆண்டுகளாக டில்லியில் நடந்த பேரவைத் தேர்தல்களில் கோலோச்சிய கட்சியாக ஆம் ஆத்மியும், அதன் அமைப்பாளர் அரவிந்த் கேஜரிவாலும் விளங்கினர். 2015 மற்றும் 2020ஆம் ஆண்டுகளில் நடந்த டில்லி பேரவைத் தேர்தல்களில் ஆம் ஆத்மி கட்சி மொத்தம் உள்ள 70 இடங்களில் முறையே 67 மற்றும் 62 இடங்களைப் பெற்றது. ஆனால், எதிர்வரும் தேர்தல் முந்தைய சூழல் போல இல்லை.

இம்முறை அமலாக்கத் துறை வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்ட கேஜரிவால், பதவிக் காலத்துக்கு முன்பே முதல்வர் பதவியில் இருந்து விலகி தற்போது ஜாமீனில் இருக்கிறார். தனது தீவிர ஆதரவாளர் அதிஷை முதல்வராக்கி மீதமுள்ள பதவிக்கால ஆட்சிக்கு வழிகாட்டியபடி தேர்தலை எதிர்கொள்கிறார்.

முந்தைய இரு சட்டப்பேரவைத் தேர்தல்களின் போதும் தனித்துத் தேர்தல் களம் கண்ட ஆம் ஆத்மி கட்சி, கடந்த மக்களவைத் தேர்தலை, காங்கிரஸ் அங்கம் வகிக்கும் 'இண்டியா' கூட்டணியில் சேர்ந்து சந்தித்தது. ஆனால், டில்லியில் படுதோல்வி அடைந்த நிலையில், சில மாதங்களுக்கு முன்பு 'இண்டியா' கூட்டணியில் இருந்து காங்கிரஸை வெளியேற்ற வேண்டும் என கேஜரிவால் வலியுறுத்தி வருகிறார்.

ஒருபுறம் பாஜகவின் அரசியல் நெருக்கடிகளை எதிர்கொண்டு வரும் ஆம் ஆத்மி கட்சி, மறுபுறம் தனது அமைச்சரவை சகாக்கள் சிலரையும் கட்சியின் சில மூத்த தலைவர்களையும் பாஜகவிடம் இழந்தது. ஆம் ஆத்மி கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் முதல்வராக அரவிந்த் கேஜ்ரிவாலே முதல்வர் அரியணையில் ஏறுவார் என்று முதல்வர் அதிஷி ஏற்கெனவே அறிவித்துள்ளார்.

ஆனால், காங்கிரஸ் கட்சி அத்தகைய அறிவிப்பை வெளியிடவில்லை. சமீபத்தில் அக்கட்சி வெளியிட்ட வேட்பாளர்கள் பட்டியலில் குறிப்பாக, அரவிந்த் கேஜ்ரிவாலை புது டில்லி தொகுதியில் எதிர்கொள்ளும் வேட்பாளராக மூத்த தலைவர் சந்தீப் தீட்சித் அறிவித்தது. இவர், முன்னாள் முதல்வர் ஷீலா தீட்சித்தின் மகன் மற்றும் கிழக்கு டில்லி தொகுதி முன்னாள் எம்.பி. ஆவார்.



முதல்வர் வேட்பாளரை அறிவித்து தேர்தலை சந்திக்கும் வழக்கும் தங்களுடைய கட்சிக்கு என்றுமே இருந்ததில்லை என்கிறார் சந்தீப் தீட்சித். 'ஷீலா தீட்சித் முதல் முறையாக முதல்வர் ஆனபோது கூட ஜனநாயக முறையில் கட்சித் தலைமையுடன் ஆலோசித்து சட்டப்பேரவை கட்சிக் குழுவில்தான் அவர் முதல்வராக தேர்வானார். கட்சிக்கு வெற்றியைத் தேடித் தருவது மட்டுமே எங்களின் பணி' என்கிறார் அவர்.

இது காங்கிரஸின் நிலைப்பாடு என்றால் எதிர்க்கட்சியான பாஜக வேறொரு கோணத்தில் பேரவைத் தேர்தலை அணுகி வருகிறது. புதுடில்லியில் கேஜரிவலால் (ஆம் ஆத்மி), சந்தீப் தீட்சித் (காங்கிரஸ்) ஆகியோருக்கு எதிராக டில்லி முன்னாள் முதல்வர் சாஹிப் சிங் வர்மாவின் மகன் பர்வேஷ் சாஹிப் சிங் வர்மாவை பாஜக அறிவித்துள்ளது.

இந்த தேர்தலில் பாஜக மற்றும் காங்கிரஸை தூண்டிவிடும் வகையில் இரு கட்சிகளுக்கும் முதல்வர் வேட்பாளர் முகமே இல்லை என்று முதல்வர் அதிஷி தனது சமீபத்திய பரப்புரையில் விமர்சித்தார்.

இது குறித்து பாஜக மேலிட வட்டாரங்களில் விசாரித்தபோது, 'டில்லி மட்டுமல்ல, ராஜஸ்தான், மத்திய பிரதேசம், சத்தீஸ்கர் என சமீபத்தில் நடந்து முடிந்த மாநில சட்டப்பேரவைகளின் தேர்தலில் கூட முதல்வர் வேட்பாளரை தங்களுடைய கட்சி அறிவிக்கவில்லை' என்றன. ஆனால், 2015 -ஆம் ஆண்டில் நடந்த டில்லி சட்டப்பேரவைத் தேர்தலில் முன்னாள் ஐபிஎஸ் அதிகாரி கிரண் பேடியை முதல்வர் வேட்பாளராக பாஜக மேலிடம் முன்னிறுத்தி பரப்புரை செய்தது. அத்தேர்தலில் மொத்தமுள்ள 70 இடங்களில் 3 இடங்ளில் மட்டுமே பாஜக வென்றது.

2020 பேரவைத் தேர்தலின்போது, பாஜக வெற்றி பெற்றால் அப்போதைய மாநிலத் தலைவர் மனோஜ் திவாரி முதல்வராவார் என்று அலுவல்பூர்வமற்ற வகையில் பேசப்பட்டது. ஆனால், பிரதமர் மோடி அரசின் சாதனைகளை மட்டுமே மையப்படுத்தி பாஜக செய்த பிரசாரம் டில்லி வாக்காளர்களிடையே எடுபடவில்லை. தேர்தல் முடிவில் பாஜக 8 இடங்களை மட்டுமே வென்றது.

இது ஒருபுறமிருக்க, தலைநகரில் ஷீலா தீட்சித்துக்குப் பிறகு ஆம் ஆத்மி அரசில் பெண் முதல்வராக அதிஷி அறிவிக்கப்பட்டதைப் போல, வரும் தேர்தலில் பாஜக ஒருவேளை வெற்றி பெற்றால் ஒரு பெண் தலைவரை முதல்வராக அறிவிக்கும் வாய்ப்பை அக்கட்சி மேலிடம் ஒதுக்கிவிடவில்லை.

அரவிந்த் கேஜரிவாலை முதல்வர் வேட்பாளராக அறிவித்து ஆம் ஆத்மி கட்சி பரப்புரை செய்தாலும், அவருக்கு எதிராக நிலுவையில் உள்ள அமலாக்கத் துறை வழக்கில் இறுதித் தீர்ப்பு வெளிவரும் வரை ஆட்சி அதிகாரம், முதல்வர்பதவி என்பது என்றுமே அவருக்குத் தலைவலிதான். முதல்வர் வேட்பாளர் அறிவிக்கப்படாவிட்டாலும் கூட சந்தீப் தீட்சித்தை கேஜரிவாலுக்கு எதிராக காங்கிரஸ் களமிறக்கி முன்னிலைப்படுத்துவது அதன் தேர்தல் வியூகத்தை வெளிப்படுத்தும் விதமாக உள்ளது.

ஆனால், 2015, 2020 தேர்தல்களில் பிரதமர் மோடி அரசின் சாதனைகளை மட்டுமே மையப்படுத்தி தேர்தல் பரப்புரையை தீவிரப்படுத்திய பாஜக, இம்முறை கேஜரிவால் எதிர்ப்பை மட்டுமே பரப்புரை உத்தியாக்கியுள்ளது. இது அக்கட்சியின் பதுங்கிப் பாயும் ராஜதந்திரத்தின் அடையாளமா அல்லது முந்தைய பேரவைத் தேர்தல்களில் இருந்து கற்றக் கொண்ட அனுப வங்களின் படிப்பினையா என்பதை இனி அக்கட்சி கடைப்பிடிக்கப் போகும் அணுகுமுறையைப் பொறுத்தே தெரிய வரும்.

---

# வியுக்தியார் பதில்கள்




**எம். அகிலேஸ்வரன்**
**சித்தன்கேணி.**

**கேள்வி:** தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவி வழங்குவதாகக்கூறி கோடீஸ்வர வர்த்தகர் ஒருவரிடம் இருந்து 50 கோடி ரூபா பணம் பெற்றதாக வெளியான செய்தியை மறுப்பதாக, இரண்டு பிரதான அரசியல் கட்சிகள் தெரிவித்துள்ளனவே. அந்தச் செய்தியில் ஐக்கிய மக்கள் சக்தியும் பொதுஜன பெரமுனவும் தான் இது வரை மறுத்துள்ளன. எந்தக் கட்சி என்பது இருந்து விட்டுப் போகட்டும். ஒருவர் எம்.பி.யாவதற்காக 50 கோடியை முதலிடுகின்றார் என்றால் அதன் மூலம் அவர் அதைவிட அதிகம் சம்பாதிக்க முடியும் என்பதாலா?

**வியுக்தியார்:** கோடீஸ்வர வர்த்தகர் என்பதால் அவர் ஒரு மரியாதைக்காகவும் இந்தத் தொகையை 'முதலிட்டிருக்கலாம்". அதுவல்ல எனக்கு உறுத்துவது. இப்போதெல்லாம் எந்தச் செய்தியையும் எந்த ஆதாரமும் இல்லாமல் வெளியிட்டுவிடுகிறார்களே. ஒரு நாள் இப்படித்தான், நான் ஒரு நண்பருக்கு ஒரு செய்தியைச் சொன்னேன். நாம் ஏப்ரல் முதலாம் திகதி முட்டாள்கள் தினத்திற்கு சிலரை முட்டாள்களாக்குவதற்காக சொல்வதுபோலத்தான் ஒரு செய்தியை நண்பர் ஒருவருக்குச் சொன்னேன். அவரும் ஆச்சரியத்தடன் அதனைக் கேட்டுக்கொண்டு போய்விட்டார். சில மணி நேரங்களுக்கு பின்னர் நான் வீட்டுக்குப் போனபோது, மனைவி அந்தச் செய்தியை எனக்கு ஆச்சியத்துடன் சொன்னார். "அப்படியா.. எப்படி உனக்கு தெரியும்?" என்று கேட்டதற்கு அவர் சொன்னார், "இங்க பேஸ்புக் எல்லாம் அதைப்பற்றித்தான் ஒரே கதையாக இருக்கின்றது" என்று. இப்போதெல்லாம் இப்படித்தான் செய்திகள் வருகின்றன. எந்தக் கட்சி அலுவலகத்தில் எந்தக் கோடீஸ்வரர் என்ற எந்த விபரமும் இல்லாமல் ஒரு செய்தி வந்திருக்கின்றது. அதனால்தான் ஒவ்வொரு கட்சியாக அதனை மறுக்கவேண்டியிருக்கின்றது. அப்படி மறுக்கவில்லை என்றால் ஒவ்வொருவரும் தத்தமக்கு வேண்டியவாறு வியாக்கியானம் அல்லவா செய்யத் தொடங்கிவிடுவார்கள்.

---

**எம். கௌதம்,**
**அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** தமிழரசுக் கட்சியில் இருந்து தன்னை நீக்கும் அதிகாரம் பொதுச் சபைக்கு மாத்திரமே உள்ளது. அதனை மீறினால் செயலாளருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வேன் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார். திருமலையில் கட்சி மீது தொடரப்பட்ட வழக்கின் மூலம் பொதுச்சபை முடக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு தில் இருந்தால் அந்த வழக்கை மீளப்பெற்று பொதுச்சபை இயங்குவதற்கு இடம் தரவேண்டும் என்றும் அவர் சவால்விடுத்திருக்கிறாரே?

**வியுக்தியார்:** இந்தச் செய்திகளை அவர் சொல்லிய அந்த ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேலும் பல விடயங்களையும் சொல்லியிருக்கிறார். கட்சியின் யாப்புக்கு முரணாக செயலாளர் நடந்தால் வழக்குப் போடுவேன் என்று சவால்விடுகின்ற அவர், யாப்பை நிச்சயம் படித்திருப்பார்தானே? அவர் சொல்கின்ற அந்தப் பொதுச்சபையே யாப்பை மீறி அமைக்கப்பட்டது என்பதுதானே வழக்கே. வழக்கு முடிகின்ற போது (அப்படி முடிந்தால்) பொதுச்சபையே இருக்காது அல்லவா. புதிய பொதுச்சபைதான் அமைக்கப் படவேண்டிவரும். முதலில் டாக்டர் சிவமோகன் அடுத்த பொதுச்சபையில் உறுப்பினராக வருவதற்காவது இப்போதிருந்தே கடுமையாக உழைக்கவேண்டியிருக்கும். அவர் முதலில் அதனைக் கவனிப்பதுதான் அவருக்கு- அவரது அரசியல் எதிர்காலத்திற்கு நல்லது.

---

**சபா. சிவநாதன்,**
**குரும்பசிட்டி, தெல்லிப்பளை.**

கேள்வி: இலங்கையில் உள்ள இஸ்ரேல் நாட்டவரின் மதஸ்தலங்கள் மற்றும் கலாசார ஸ்தலங்களுக்கு பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படை பாதுகாப்பு வழங்கப்படுவது தேசிய பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தலாகும் என்றும், மொசாட் இலங்கைக்கு வருவது அவ்வளவு நல்லதல்ல என்றும் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹமான் அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளாரே?

வியுக்தியார்: அவரது தாய்க் கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியில் இருந்த எண்பதுகளிலேயே மொசாட் இங்கு வந்துவிட்டதே. அவர்கள் தமிழ் இயக்கங்களுக்கு எதிராக அரசின் படை நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காக இங்கு வந்தபோது கண்டும்காணாமல் இருந்தவர்கள் இப்போது மட்டும் கண்ணீர்வடிப்பதுதான் ஏன் என்று புரியவில்லை. இங்குள்ள இஸ்ரேல் மதஸ்தலங்களுக்கு பாதுகாப்பு வழங்குவதுவேறு தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்கிறார். அதுதான் ஏன் என்று புரியவில்லை. அதனை பொதுவெளியில் கதைப்பது வேண்டும் என்றால் சிலவேளை அச்சுறுத்தலானதாக மாறலாம் என்பதைக் கூட அவர் புரிந்துகொள்ள வேண்டும்.

---

**கந்தையா முகுந்தன்**
**சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.**

கேள்வி: புதிய அரசியலமைப்பு விடயம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து இணக்கப்பாட்டை மேற்கொள்வதற்கான சந்திப்பை எதிர்வரும் 25 ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளாரே.

**வியுக்தியார்:** எப்போதும் தாங்கள் மட்டுமே உண்மையான தமிழ் தேசிய வாதிகள் என்று கூறிக்கொண்டிருந்த அவர், இப்போதாவது மற்றைய தமிழ் தேசியக் கட்சிகளுடன் சேர்ந்து இணக்கப்பாட்டை அடைய முயற்சிப்பது பாராட்டப்படவேண்டியதுதான். ஆனால், நல்லாட்சி அரசின் காலத்தில் முதல் நூறுநாள் வேலைத்திட்டத்தில் தமிழ் மக்களுக்கு எதையாவது செய்ய நினைத்திருந்தால், அரசியலமைப்பில் இருக்கின்ற மாகாணசபைகளை மேலும் பலப்படுத்துகின்ற யோசனையை முன்வைத்து அதனை செய்ய நினைத்திருந்தால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மிக இலகுவாகவே அதனைச் செய்திருக்கலாம். ஆனால் அவர்களோ, அடையமுடியாத புதிய அரசியலமைப்பை தயாரிக்க தமது காலத்தை வீணடித்தார்கள். அதேபோல புதிய அரசியலமைப்பு என்பது மூன்று ஆண்டுகளில் வராது என்று அரசாங்கம் திட்டவட்டமாக தெரிவித்த பின்னர், முதலில் உடனடியாக தமிழ் மக்கள் மூச்சுவிடுவதற்கு எதையாவது செய்யமுடியுமா என்றுதான் இவர்கள் யோசிக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜஸ்டின் ரூடோ எழுச்சியும் வீழ்ச்சியும்: கனடா பிரதமர் பதவி விலகுவது ஏன்?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

கனடாவின் இளம் கதாநாயக பிரதமரான ட்ரூடோ மிகவும் தீர்க்கமற்ற எதிர்காலத்துடன் தனது கட்சியையும் தனது பதவியையும் விட்டு வெளியேறுகிறார். இவை அனைத்தும் கனடாவிற்கு ஸ்திரமற்ற - நிச்சயமற்ற பொருளாதார தருணத்தில் நிகழ்ந்துள்ளன என்பதே உண்மையாகும்.

அமெரிக்கவின் வரிச்சுமை எச்சரிக்கை, ட்ரம்பின் அமெரிக்காவின் 51வது மாநிலமாக இணைத்தல் போன்ற நெருக்கடியான காலத்தில் ட்ரூடோவின் பதவி விலகலும் நிகழ்ந்துள்ளது.

பொருளாதார குழப்பம், குடியேற்ற எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் வாழ்க்கைச் செலவுகள் அதிகரிப்பு, கியூபெக் பிரிவினைவாதம் மீண்டும் வளரும் நிலையில் பிரதமரின் பதவி விலகலும் நிகழ்ந்து உள்ளது.

இந்த மாதம் ஜனவரி 21 முதல் ஒட்டாவா அரசு, அயல் நாடான அமெரிக்காவில் ஒரு புதிய டிரம்ப் நிர்வாகத்தை எதிர்கொள்கிறது. வர்த்தகப் பேச்சுக்கள், எல்லைப் பாதுகாப்பு, மற்றும் பரந்த வெளியுறவு பாதுகாப்புக் கொள்கைகளில் அமெரிக்கவின் புதிய அரசுடன் முரண்களை எதிர்கொண்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது கருத்துக் கணிப்புகளின் படி முன்னணியில் உள்ள கன்சர்வேடிவ் கட்சி எதிர்பார்த்தபடி அடுத்த தேர்தலில் வெற்றி பெற்றால், அவர்கள் அமெரிக்க-கனடா உறவுகளில் சீரமைப்பது தொடங்கி, வரிகளைக் குறைப்பது, வளர்ச்சியை அதிகரிப்பது மற்றும் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்துவது போன்ற வாக்குறுதிகளை வழங்குவதன் மூலம் பல கொள்கை முனைகளில் வெற்றியை பெறுவார்கள் என்றும் கூறப்படுகிறது.




கனடாவில் ஜஸ்டின் ட்ரூடோ, ஜனவரி 6, 2025 அன்று கனடாவின் லிபரல் கட்சித் தலைவர், பிரதமர் பதவியில் இருந்து விலக இருப்பதாக அறிவித்தார். கனடாவின் 15வது பிரதம மந்திரி பியர் எலியட் ட்ரூடோ மற்றும் மார்கரெட் சின்க்ளேர் ஆகியோருக்கு கிறிஸ்துமஸ் தினமான 1971 இல் ஜஸ்டின் பியர் ஜேம்ஸ் ட்ரூடோ பிறந்தார்.

ஓர் இளைஞனாக, 2000 ஆம் ஆண்டில், அவரது தந்தையின் இறுதிச் சடங்கில் அவர் உணர்ச்சிவசப்பட்ட பேச்சு, அவரை ஒரு எதிர்காலத் தலைவராக ஆக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

இளமையில் ட்ரூடோ வக்கீல் தொழிலில் ஈடுபட்ட போது 2005 இல் ஊடக ஆளுமை சோஃபி கிரிகோயரை சந்தித்து திருமணம் செய்தார். இந்த ஜோடி "கனடாவின் கென்னடிகள்" என்று அழைக்கப்பட்டனர்.

2007 இல், ட்ரூடோ பாபினோவில் வேட்புமனுவைத் தேடிப் பெற்று, 2008 தேர்தலில் அவர் வெறும் 1,000 வாக்குகள் வித்தியாசத்தில் மட்டுமே தோல்வியடைந்தார். அதன் பின்னர் 2012 இல் கன்சர்வேடிவ் கட்சி சென். பேட்ரிக் பிரேஸோவுக்கு எதிராக போட்டியில் வென்றபோது இளம் எம்.பி.யாக மீண்டும் தலைப்புச் செய்திகளில் இடம்பிடித்தார்.

இந்த நிகழ்வுகள் ட்ரூடோவை லிபரல் தலைமைக்கான முன்னணி போட்டியாளராக நிலைநிறுத்தியது. அனுபவமுள்ள அரசியல் போட்டியாளர்களை எளிதில் தோற்கடித்து அவர் 2013 இல் பாரிய வெற்றி பெற்றார்.

காலநிலை நடவடிக்கை, பழங்குடி மக்களுடன் நல்லிணக்கம், தேர்தல் சீர்திருத்தம் மற்றும் கனடாவின் உலகளாவிய நிலையை மீட்டெடுத்தல் ஆகியவற்றின் அடிப்படையில் முற்போக்கான சாதனைகளை அடைய ட்ரூடோவின் பதவிக்காலம் பெரும் வாக்குறுதிகளுடன் தொடங்கியது. 2015இல் ட்ரூடோ தனது கூட்டாட்சி மூலம் கனடாவின் 23 வது பிரதமரானார்.

மேலும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா போன்ற தாராளவாதிகளின் வெளிப்படையான வாரிசிற்கு தகுதியானவராக ட்ரூடோ கருதப்பட்டார். அத்துடன் ட்ரூடோ 2019 மற்றும் 2021 இல் இரண்டு அடுத்தடுத்த தேர்தல்களில் வெற்றி பெற்றார்.

அவரது சிறுபான்மை அரசாங்கத்திற்கு புதிய ஜனநாயகக் கட்சியின் ஆதரவைத் தக்கவைக்க, அவர் தேசிய பகல்நேர பராமரிப்பு மற்றும் குழந்தைகள், முதியவர்கள் மற்றும் ஊனமுற்றோருக்கான இலவச பல் பராமரிப்பு ஆகியவற்றையும் இயற்றி, மேலும் தேசிய மருந்தகத் திட்டத்திற்கு வழி வகுத்தார்.

இருப்பினும் ட்ரூடோவின் பதவிக் காலத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள், நெறிமுறை மீறல்கள் குறைபாடுகளால் பாரியளவில் பாதிக்கப்பட்டது. மேலும் தேர்தல் சீர்திருத்தத்தை செயல்படுத்துவதிலும் அவர் தோல்வியடைந்து உள்ளார் என்று ஊடகங்களால் விமர்சிக்கப்பட்டது.

2019 ஆம் ஆண்டில் அரசியல் குறுக்கீடு காரணமாக ஊழல், ட்ரூடோவின் ஆடம்பர விடுமுறைகள் மற்றும் அவ

அமெரிக்கவின் வரிச்சுமை எச்சரிக்கை, ட்ரம்பின் 51ஆவது மாநிலமாக இணைத்தல் போன்ற நெருக்கடியான காலத்தில் ரூடோவின் பதவி விலகலும் நிகழ்ந்துள்ளது






ரது, சர்வதேச இனப் பிரச்சினை களில் அவரது நம்பகத்தன்மையை மேலும் சேதப்படுத்தியது.

அத்தோடு நல்லிணக்கத்தில் அர்த்தமுள்ள முன்னேற்றம் அடையவில்லை என்று பழங்குடியின தலைவர்கள் குற்றம் சாட்டினர். அதே சமயம் பணவீக்கம், வீட்டுச் செலவுகள் மற்றும் மிகையான சுகாதாரப் பாதுகாப்பு அமைப்பு ஆகியவற்றின் மீதான விரக்தி பொதுமக்களின் கோபத்தைத் தூண்டியது.




2022 மற்றும் 2024இற்கு இடையில் ஆயிரக் கணக்கான புதியவர்கள் நாட்டிற் குள் நுழைய குடியேற்றக் கொள்கைக ளுக்கு ட்ரூடோ பச்சை விளக்கு காட்டியதற்காகவும் பலத்த எதிர்ப்பை சம்பாதித்தார்.

சர்வதேச நிறுவனமான ஹூவாய் நிர்வாகி கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து சீனாவுடனான கனடாவின் உறவும் மோசமடைந்தது.

கனேடிய மண்ணில் காலிஸ்தான் ஆதரவு தீவிரவாதியை படுகொலை செய்ய நரேந்திர மோடியின் அரசாங்கம் சூழ்ச்சி செய்ததாக ட்ரூடோவின் குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து இந்தியாவுடனான கனடாவின் உறவும் பாதிக்கப்பட்டது.

சமீபத்திய பொது விசாரணையில் கனேடிய தேர்தல் முறையில் வெளிநாட்டு தலையீடுகளை வெளிப்படுத்தியதுடன், ட்ரூடோ தனது சொந்த எம்.பி.க்கள் பற்றிய முக்கியமான தகவல்களில் செயல்படவில்லை என்ற குற்றச்சாட்டுகளுக்கும் ஆளாகியுள்ளார்.

டிரம்பின் முஸ்லீம் எதிர்ப்பு தடையை மீறி, கனடாவிற்கு அகதிகளை வரவேற்புக்கும் ட்ரூடோ ஊக்கப்படுத்தியதால், அதைத் தொடர்ந்து குடியேற்றம் மற்றும் அகதிகள் கோரிக்கைகள் அதிகரித்தன.

இப்போது குடியேற்ற எதிர்ப்பு உணர்வு அதிகரித்து வருகிறது. ஆனாலும் கோவிட்-19 தொற்றுநோய் காலத்தில் ட்ரூடோ விரைவான நிதி நிவாரணத் திட்டங்களுக்காக ஆரம்பப் பாராட்டுகளைப் பெற்றார். ஆனால் தடுப்பூசி கொள்முதல் தாமதங்கள் மற்றும் தடுப்பூசி உத்தரவுகளுக்கான விமர்சனங்களையும் கடுமையாக பெற்றார்.

2025இல் ஜஸ்டின் ட்ரூடோவின் அரசியல் வாழ்க்கை ஒரு முற்றுப் புள்ளிக்கு வந்ததுள்ளது.

டிசம்பர் 10 ஆம் தேதி நிதியமைச்சர் கிறிஸ்டியா ஃப்ரீலாண்ட் அதிர்ச்சியூட்டும் ராஜினாமாவுக்குப் பிறகு, லிபரல் கட்சி ஆட்சி விழத் தொடங்கியது.

ஜனவரியில் பாராளுமன்றம் மீண்டும் தொடங்கும் போது நம்பிக்கையில்லா வாக்கெடுப்பு அச்சுறுத்தல் இருப்பதால், நான்கு லிபரல் பிராந்திய காக்கஸ்களில் மூன்று ட்ரூடோவை வெளியேறுமாறு கோரியது.

மேலும் பொதுக் குழுக் கூட்டத்துடன், ட்ரூடோ இறுதியாக முரண்பாடுகள் சமாளிக்க முடியாதது என்று முடிவு செய்தார். ஜன. 6, 2025 அன்று, லிபரல் கட்சித் தலைவர் பதவியில் இருந்து விலகுவதற்கான தனது திட்டத்தை அறிவித்தார்.

கனடாவில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான பல தீர்மானங்கள் நிறைவேறி வெற்றி கண்டதும், அதில் முக்கியமாக இனப்படுகொலை தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும் தற்போது பதவி விலகிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் பதவிக் காலத்தில் தான் என்பது குறிப்பிடத் தக்கது.

கனடாவில் தமிழ் சமூகம் கடந்த பத்து வருடங்களில் அரசியல் ரீதியான குறிப்பிட கூடிய வளர்ச்சியை அடைந்ததும், தமிழ் மரபு திங்கள் கனடாவில் அறிமுகப் படுத்தப்பட்டதும் ஜஸ்டின் ட்ரூடோவின் பதவிக்காலத்தில் தான் எனக் கூறினால் மிகையாகாது.

அத்துடன் தமிழ் சமூக மையத்துக்கான பெரு நிதியை பெற்று கொடுத்ததும், ஆளும் கட்சியில் முதலாவது தமிழ் பாராளுமன்ற உறுப்பினரை பெற்றுக் கொண்டு, முதலாவது கனேடிய தமிழ் மந்திரியை பெற்றுக் கொண்டதும் ஜஸ்டின் ட்ரூடோவின் பதவிக்காலத்தில் தான்.

அத்துடன் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை தொடர்ச்சியாக முன்னெடுக்கிறதுக்கு முக்கியமான நாடாக கனடா உள்ளமையும், அதன் தொடர்ச்சியை உறுதி செய்தமையும் முக்கியமானது அதில், தற்போது பதவி விலகிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் பங்கு முக்கியமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கி, ஐஸ் போதையுடன் சிந்தா பொலிஸாரால் கைது

கொழும்பு, ஜன.12

வெல்லம்பிட்டிய - வடுகொடவத்த பகுதியில் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக கூறப்படும் சிந்தா என்ற நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுச் சனிக்கிழமை காலை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

சிந்தா என்பவர் பிறிதொரு நபர் ஒருவரைக் கொலை செய்வதற்காக கைத்துப்பாக்கி ஒன்றை வைத்திருந்ததாக வெல்லம்பிட்டிய பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸார் சோதனை நடத்திய போது, சந்தேகநபரிடமிருந்து பதினொரு கிராம் ஐஸ் போதைப்பொருளும் அவர் வைத்திருந்த துப்பாக்கியும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன.

இது குறித்து வெல்லம்பிட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# திடீர் சுகவீனம் காரணமாக ஐம்பது மாணவர்கள் பாதிப்பு

## பாடசாலையில் தீவிர பரிசோதனை

நுவரெலியா, ஜன.12

டிக்கோயா சிறீவாணி ஆரம்ப பாடசாலையில் கல்வி கற்கும் சுமார் 50 மாணவர்களுக்கு ஏற்பட்ட திடீர் சுகவீனம் தொடர்பில் அம்பகமுவ சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தின் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் நேற்றுக்காலை குறித்த பாடசாலைக்கு சென்று பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். குறித்த பாடசாலையில் 1, 2, 3, 4 மற்றும் 5ஆம் வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்களில் 50 பேரே இவ்வாறு திடீரென சுக வீனமடைந்துள்ளனர்.

குறித்த மாணவ, மாணவிகளுக்கு நேற்று முன்தினம் மாலை முதல் தலைச்சுற்றல், வாந்தி மற்றும் வயிற்றுப் போக்கு போன்ற அறிகுறிகள் தென்பட்டதை அடுத்து, பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை டிக்கோயா ஆதார மருத்துவமனையில் அனுமதித்தனர்.

50 மாணவர்களில் 25 மாணவர்கள் டிக்கோயா ஆதார மருத்துவமனையிலும், ஏனைய 25 மாணவர்கள் அட்டன் நகரத்தில் உள்ள தனியார் மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர். (எ)

# புவிசார் அரசியல்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

தனது நிலைப்பாட்டுக்கு விரோதமாக இலங்கை செயற்படுவதை இந்தியா ஏற்றுக் கொள்ளத் தயாராயில்லை.

ஆனால், ஆசியாவின் இரு பெரிய நாடுகளுடனான உறவுகளில் ஒரு சமநிலையைப் பேணுவதில் அக்கறை காட்டும் ஜனாதிபதி திசாநாயக்கவுக்கு ஆய்வுக்கப்பல் விவகாரம் ஒரு தலையிடியாகவே இருக்கும். அண்மையில் சீனக் கடற்படையின் மருத்துவக் கப்பல் கொழும்புக்கு வருகை தந்தது குறித்து இந்தியாவினால் ஆட்சேபம் தெரிவிக்க முடியவில்லை. ஆனால், மீண்டும் கடல்சார் ஆய்வுகளை ஆரம்பிக்கும் திட்டம் இருப்பதாக சீனா அறிவித்திருப்பதால் அத்தகைய கப்பல்கள் சம்பந்தப்பட்ட விவகாரத்தில் கடைப்பிடிக்க வேண்டிய தெளிவான நடைமுறையொன்றை அரசாங்கம் வகுக்க வேண்டியிருக்கிறது.

இலங்கையில் தங்களது பொருளா தார மற்றும் மூலோபாய நலன்களை பேணிப்பாதுகாப்பதற்கு



நன்றி : டெய்லிமிரர்

போட்டி போடும் சீனாவையும் இந்தியாவையும் பகைத்துக்கொள்ளாத வகையிலான அணுகுமுறைகளை கடைப்பிடிப்பது என்பது இலங்கை அரசாங்கத்துக்கு நெடுகவும் ஒரு பிரச்சினையாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இலங்கையில் தங்களது நலன்களைப் பேணுவதை நியாயப்படுத்துவதற்கு இந்தியாவும் சீனாவும் ஏட்டிக்குப் போட்டியாக வாதங்களை முன் வைக்கின்றன. இந்தியாவைப் பொறுத்த வரை, இலங்கையை தனது செல்வாக்குப் பிராந்தியத்துக்கும் பாதுகாப்பு வளையத்துக்கும் உட்பட்ட அயல்நாடாக அது பார்க்கிறது. ஆழமான வரலாற்று மற் றும் சமகால கலாசார - மதப் பிணைப் புக்களைக் கொண்ட இயல்பான ஒரு நேச நாடாக இலங்கையை நோக்கும் புதுடில்லி பிரத்தியேகமான உறவுமுறை ஒன்றை கொழும்பிடம் இருந்து எதிர் பார்க்கிறது. இந்தியாவுக்கு போட்டி யான நாடுகளுடனும் அதற்கு தீங்கு விளைவிக்கக்கூடிய நாடுகளுடனும் இலங்கை நெருக்கமான உறவுகளைப் பேணுவதை இந்தியா விரும்பாது.

இலங்கையில் இயற்கை அனர்த்தங்கள் நிகழ்ந்தாலென்ன, ஆயுதக்கிளர்ச்சிகள் மற்றும் பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டாலென்ன முதலில் உதவிக்கு ஓடோடி வரும் நாடாக இந்தியாவே விளங்குகிறது. முன்னென்றும் இல்லாத வகையில் மூன்று வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட படுமோசமான பொருளாதார நெருக்கடியின்போது சீனா உட்பட வேறு எந்த நாடும் உடன டியாக கைகொடுக்க முன்வராத நிலையில் 400 கோடி டொலர்கள் அவசர கடனுதவியை இந்தியாவே வழங்கியது.

இலங்கையில் தனது நலன்களைப் பேணும் நோக்குடனேயே அந்த உதவியைச் செய்ததாக ஒரு தரப்பினரிடம் இருந்து விமர்சனங்கள் வந்தாலும் கூட, இலங்கை மக்களும் அரசாங்கங்களும் இந்தியாவுக்கு தொடர்ச்சியாக நன்றி கூறிய வண்ணமே இருக்கின்றனர். ஆனால், பொதுவில் சீனாவின் திட்டங் களைப் போன்று இந்திய முதலீட்டுட னான திட்டங்களுக்கு இலங்கையில் வரவேற்பு இருப்பதில்லை. இது இந்தியாவுக்கு தொடர்ச்சியாக ஒரு பிரச்சினையாக இருந்து வருகிறது.

இந்தியாவின் திட்டங்களுக்கு புதுடில்லியில் வைத்து இணக்கத்தை தெரிவிக்கும் இலங்கைத் தலைவர்கள் கொழும்பு திரும்பியதும் உள்நாட்டில் எதிர்ப்பைச் சமாளிப்பதற்காக தங்களது நிலைப்பாடுகளை மாற்றிவிடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். இலங்கையில் இந்திய உதவியுடன் முன்னெடுக்க உத்தேசித்திருக்கும் திட்டங்கள் தொடர்பில் புதுடில்லியில் காணப்பட்ட இணக்கப்பாடுகளுக்கு கொழும்பில் வேறுபட்ட விளக்கங்களை கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் இலங்கை தலைவர்களுக்கு ஏற்படுகிறது.

ஜனதா விமுக்தி பெரமுன ( ஜே.வி.பி.) மார்க்சிய கோட்பாட்டை பின்பற் றிய ஓர் அரசியல் கட்சி என்பதால் தற்போதைய அரசாங்கம் "கம்யூனிஸ்ட்" சீனாவுடன் நெருக்கமான உறவைக் கொண்டிருக்கிறது என்றும் இலங்கையில் சீனாவின் நலன்களுக்கு அது கூடுதல் முக்கியத்துவம் கொடுக்கும் என்றும் ஒரு கருத்து பரவலாக இருக்கி றது. ஆனால், இன்று சீனா கம்யூனிஸ்ட் நாடு இல்லை. கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சியில் இருந்தாலும் சீனா அமெரிக் காவுக்கு அடுத்ததாக பெரிய முதலாளித் துவப் பொருளாதாரத்தைக் கொண்ட நாடாக விளங்குகிறது. அதேவேளை தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் இன்று இடதுசாரி அடையாளம் எதையும் காட்டிக் கொள்வதில் ஆர்வம் கொண்டதாக இல்லை என்பதையும் நாம் கவனிக்கத் தவறக்கூடாது.

இந்தியாவுக்கு மேலாக கூடுதல் அனுகூலத்தைப் பெறுவதற்காக ஜனாதிபதி திசாநாயக்கவின் விஜயத்தின்போது மேலும் கடன் நிவாரணங்களையும் முதலீட்டு வாய்ப்புகளையும் இலங்கைக்கு வழங்குவதற்கு சீன அரசாங்கம் முன்வரக் கூடும் என்று இராஜந்திர வட்டாரங்கள் ஊகிக்கின்றன. இலங்கையில் முன்னெடுக்கப்படக்கூடிய புதிய அபிவிருத்தி திட்டங்களையும் சீனத் தலைவர்களுடன் சேர்ந்து திசாநாயக்கவும் அவரது குழுவினரும் அடையாளம் காண்பார்கள் என்றும் எதிர்பார்க் கப்படுகிறது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெறுவதற்கு முயற்சிக்கும் இலங்கை தற்போதைய தருணத்தில் எந்தவொரு வல்லாதிக்க நாட்டுடனும் முரண்படக்கூடிய அணுகுமுறையைக் கடைப்பிடிப்பது கட்டுப்படியாகாது. சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான புவிசார் அரசியல் போட்டிக்குள் இலங்கை சிக்கிக்கொள்ளாமல் இருப்பதை உறுதி செய்யக்கூடிய அணுகுமுறையைக் கடைப்பிடிப்பது என்பது ஜனாதிபதி திசாநாயக்கவைப் பொறுத்த வரை கயிற்றில் நடப்பதைப் போன்றதா கும்.

இந்தியாவும் சீனாவும் மாத்திரமல்ல, அமெரிக்காவும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் செயற்பாடுகளை உற்று நோக்கிக் கொண்டிருக்கின்றது. கொழும்புடனான அதன் மூலோபாய நலன்களை பேணுவதில் அமெரிக்கா அக்கறை கொண்டிருக்கிறது. அண்மைக் காலத்தில் ஜனாதிபதி திசாநாயக்கவையும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் தலைவர்களையும் அடிக்கடி சந்தித்த வெளிநாட்டு இராஜதந்திரி என்றால் அது அமெரிக்க தூதுவர் ஜூலி ஷங் தான். தேர்தல்களின்போது நாட்டு மக்களுக்கு வழங்கிய பெருவாரியான வாக்கு றுதிகளை நிறைவேற்றுவதில் பாரிய நெருக்கடியை எதிர்நோக்கும் ஜனாதிபதி திசாநாயக்க சிக்கலான புவிசார் அரசியலையும் மிகுந்த எச்சரிக்கையுடன் கையாளவேண்டிய பாரிய பொறுப்பைக் கொண்டிருக்கிறார்.

# குரங்குகள் தொல்லை அதிகரிப்பு



மட்டக்களப்பு, ஜன.12

மட்டக்களப்பில் குரங்குகளின் தொல்லை அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

களுதாவளை, களுவாஞ்சிக்குடி, தேற்றாத்தீவு, மாங்காடு, செட்டிபாளையம், குருக்கள்மடம் மற்றும் வெல்லாவெளிப் பகுதியிலும் குரங்குகள் கிராமங்களுக்குள் உட்பகுந்து பயன்தரும் மா, தென்னை, வாழை உள்ளிட்ட பயிரினங்களை சேதப்படுத்தி வருவதாக மக்கள் கூறினர்.

இந்த நிலையில், அப்பகுதியில் செய்கை பண்ணப்பட்டுள்ள கத்தரி, வெண்டி, புடோல், மிளகாய் உள்ளிட்ட பல மேட்டுநிலப் பயிர்ச் செய்கைகளையும் குரங்குகள் அழித்து வருவமாக அப்பகுதி விவசாயிகளும் கவலை வெளியிட்டுள்ளனர்.

எனவே, குரங்குகளை அப்பகுதியிலிருந்து அப்புறப்படுத்தி தாம் வாழ்வதற்கு வழிவகைகளை ஏற்படுத்தித் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# மரண அறிவித்தல்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 21 - 01 - 1932 |  | 05 - 01 - 2025 |

## குமாரசாமி குணநாயகம்

Retired Civil Engineer
(Irrigation Department, Road Development Authority and Road Development Department)

யாழ். நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், மாத்தளை, மட்டக்களப்பு, கல்முனை, கிளிநொச்சி, கொழும்பு ஆகிய இடங்களை வதிவிடமாகவும்கொண்டிருந்த குமாரசாமி குணநாயகம் கடந்த 05.01.2025 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - நாகமுத்து தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான வைத்தியநாதன் - சிகாமணி தம்பதியரின் அன்பு மருமகனும், தனலட்சுமியின் அன்புக் கணவரும் சத்தியதேவி, சத்தியபவானி, சத்தியவாணி, திலகன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் தம்மிக்க, இராமிலன், லம்போதரன், ரஜிதா ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிஷேக், சோனாக்ஷி, பிரணவன், அபிராமி, வைஷ்ணவி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான பரராஜசிங்கம், புண்ணியமூர்த்தி மற்றும் சொர்ணம்மா, கமலாம்பிகை, லிங்கநாயகம், கோபாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான வள்ளியம்மைப்பிள்ளை, சுப்பிரமணியம், கனகம்மா, மருதையினார் மற்றும் தயாவதி, மங்கையர்க்கரசி, சகுந்தலாதேவி, காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், ஸ்ரீபத்மநாதன், சுவாமிநாதன், ஜெயநாதன் மற்றும் குணநாதன், விஜயலட்சுமி, பாக்கியலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2025) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் ஆனந்தபுரம், கிளிநொச்சி இல்லத்தில் காலை 10:30 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கிளிநொச்சி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
சத்தியதேவி - 0094 71 415 2042

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூராட்சி...

ஒன்றிணைத்து கதிரை சின்னத்தில் களமிறங்குவதற்குரிய கலந்துரையாடல்களில் சுதந்திரக் கட்சி ஈடுபட்டு வருகின்றது.

சிங்கள தேசியவாத சக்திகளைக் கொண்டுள்ள சர்வஜன அதிகாரமும், புதிய கூட்டணியை உருவாக்குவதற்குரிய அரசியல் நகர்வுகளில் ஈடுபட்டுவருகின்றது.

சிலிண்டர் கூட்டணியில் சங்கமித்த மொட்டு கட்சி உறுப்பினர்கள் சிலர், மீண்டும் மொட்டு கட்சிக்குள் செல்வது பற்றி அவதானம் செலுத்தி, அதற்குரிய கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருகின்றனர். (அ)

## நாட்டின்...

பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க தெரிவித்தார்.

ஐக்கிய குடியரசு முன்னணியின் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

சர்வதேச நாணய நிதியமே இன்று நாட்டை நிர்வகிக்கிறது. 4500 பில்லியனுக்கும் அதிகமான வருமானத்தை இந்த ஆண்டு திரட்டிக் கொள்ளுமாறு சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்துக்கு அறிவுறுத்தியுள்ளது.

இந்த வருவாயை வரிகள் ஊடாக திரட்டிக் கொள்ள அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகள் மீது வரிகளை விதித்தே 4500 பில்லியன் ரூபா வருவாயை திரட்டிக் கொள்ள முடியும்.

இதுவே உண்மை. நாட்டின் நிதி நிலைமை குறித்து மக்களுக்கு உண்மையை குறிப்பிடாமல் இருந்தால் கோட்டபய ராஜபக்ஷவின் அரசாங்கத்துக்கு ஏற்பட்ட கதியே இந்த அரசாங்கத்துக்கும் ஏற்படும்.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு அரசாங்கத்திடம் நடைமுறைக்கு சாத்தியமான கொள்கைத் திட்டங்கள் ஏதும் கிடையாது.

சர்வதேச நாணய நிதியம் முன்வைத்துள்ள 196 செயற்திட்ட யோசனைகள் சிறந்தது. நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைக்க வேண்டும். நட்டமடையும் அரச நிறுவனங்களை நிர்வகிக்கும் பொறுப்பில் இருந்து அரசாங்கம் விடுபட வேண்டும்.

நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பது தனியார் மயப்படுத்தலாக அமையாது. அரச நிறுவனத்தின் உரிமத்தை அரசு தனதாக்கிக் கொண்டு ஏனைய பங்குகளை தனியார் தரப்பினருக்கு வழங்க வேண்டும்.

தேசிய வளங்களை பாதுகாக்க வேண்டும் என்று போர் கொடி உயரத்துபவர்கள் கடந்த காலங்களில் தேசிய வளங்களை தனியார் மயப்படுத்துவதற்கு மறைமுகமாக ஆதரவு வழங்கியவர்கள்.

மின்கட்டணம் திருத்தம் தொடர்பில் இலங்கை மின்சார சபை முன்வைத்த முன்மொழிவுகளை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு புறக்கணித்துள்ளது.

மின்கட்டண திருத்தம் தொடர்பில் எதிர்வரும் 17 ஆம் திகதி தமது நிலைப்பாட்டை அறிவிக்கவுள்ளதாக இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இலங்கை மின்சார சபை நிதி நெருக்கடிகளை எதிர்க்கொண்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளது. கடந்த காலங்களில் மின்சார சபை இலாபமடைந்துள்ளது. ஆகவே இவ்விடயத்தில் அரசாங்கம் வெளிப்படைத்தன்மையுடன் செயற்பட வேண்டும்.

நீர்மின்னுற்பத்தியின் ஊடாக 56 சதவீதமளவில் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. மின்கட்டணத்தை எதிர்வரும் 6 மாதங்களுக்கு குறைக்கும் வரை காத்துக்கு கொண்டிருக்க முடியாது. மின்கட்டணத்தை உடனடியாக குறைக்க வேண்டும் - என்றார். (அ)

## இனி...

அரிசி இறக்குமதி செய்வதற்காக வழங்கப்பட்ட காலம் நேற்று முன்தினம நள்ளிரவுடன் முடிவடைந்தது.

அதன்படி, நேற்று முன் தினம் நள்ளிரவு நிலவரப்படி, இறக்குமதி செய்யப்பட்டு சுங்கம் மூலம் விடுவிக்கப்பட்ட மொத்த அரிசியின் அளவு 167,000 மெற்றிக் தொன்களை கடந்துள்ளதாக இலங்கை சுங்கம் தெரிவித்துள்ளது.

இவற்றில் 66,000 தொன் பச்சை அரிசி மற்றும் 101,000 தொன் புழுங்கல் அரிசி ஆகியவை அடங்கும்.

நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட 8,000 மெற்றிக் தொன் அரிசி இன்னும் விடுவிக்கப்படாமல் இருப்பதாகவும் சுங்கத் துறை தெரிவித்துள்ளது. (அ)

## கிளிநொச்சி...

போராளிகள் குடும்ப நலன் காப்பகத் தரப்புகள் முனைந்தபோது குறித்த அமைதியின்மை ஏற்பட்டது.

கனகபுரம் மாவீரர் துயிலுமில்லம் நினைவேந்தலுக்காக 2016ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்டது. அதன் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தரப்பினர் துயிலுமில்லத்தின் கட்டுப்பாட்டை வைத்துள்ளனர்.

இந்த நிலையில், கடந்த வருடம் பிரதான சுடர் ஏற்றுவதில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக குறித்த துயிலுமில்ல நிர்வகிப்பு தொடர்பில் சர்ச்சை ஏற்பட்டது.

மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பகம் எனும் அமைப்பு, மாவீரர் துயிலும் இல்லங்கள் பொது மயப்படுத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர்.

நேற்று கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தின் நிர்வாகத் தெரிவை நடத்த அழைப்பு விடுத்திருந்தனர்.

இந்த நிலையில், ஒரு குழுவினர் அங்கு சென்று குழப்பத்தில் ஈடுபட்டனர். தற்போது உள்ள நிர்வகிக்கும் தரப்பே தொடர்ந்தும் செயற்பட வேண்டும் என வலியுறுத்தினர்.

இந்த நிலையில் குறித்த பகுதியில் அமைதியின்மை ஏற்பட்டது. மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பகம் எனும் அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் அவ்வமைப்பின் அழைப்பில் சென்ற மக்களுடன் அவர்கள் முரண்பட்டனர்.

அப்பகுதியில் அமைதியின்மை தொடர்ந்த நிலையில் கிளிநொச்சி பொலிஸார் அங்கு சென்றனர். அப்பகுதியில் கூட்டமாக நிற்கவேண்டாம் எனவும், பிரச்னைகள் இருப்பின் பொலிஸில் முறைப்பாடு செய்யுமாறும் தெரிவித்து மக்களை வெளியேற்றினர்.

படிப்படியாக அங்கிருந்த மக்களை வெளியேற்றிய பொலிஸார் அமைதியின்மையை கட்டுப்படுத்தினர்.

இதேவேளை, குறித்த துயிலுமில்ல வளாகத்திற்குள் அத்துமீறி செல்ல வேண்டாம் என்ற அறிவித்தலை கரைச்சி பிரதேச சபையினர் ஒட்டியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பகம் எனும் அமைப்பின் தலைவர் பார்த்தீபன் தெரிவிக்கையில் - மக்கள் மயப்படுத்தப்பட்ட நிர்வாகத்தை அமைக்க வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

இன்று சிறிதரனுடன் தொடர்புடைய சிலர் அங்கு குழப்பங்களை ஏற்படுத்தினர். நாகரீகமற்ற வார்த்தைகளை பேசினர். தொடர்ந்தும் சிறிதரனின் அரசியலுக்குள் துயிலுமில்லங்களை அனுமதிக்க முடியாது.

சிறிதரன் தனது வாக்குக்காக கனகபுரம், முழங்காவில், தேராவில், சாட்டி ஆகிய துயிலுமில்லங்களை பயன்படுத்துகிறார். அரசியலுக்குள் சிக்கியுள்ள துயிலுமில்லங்களை மக்கள் மயப்படுத்த வேண்டும்.

அதற்கான சட்ட ரீதியான நடவடிக்கைகளை நாங்கள் முன்னெடுக்க உள்ளோம் - என்றார். (அ)

# வெளிநாட்டு பணவனுப்பல்கள் 10.1 சதவீதத்தால் அதிகரித்தது

கொழும்பு, ஜன.12

இலங்கைக்கு வெளிநாட்டு பணவனுப்பல்கள் 10.1 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

2024 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் புலம்பெயர் தொழிலாளர்களிடமிருந்து இலங்கைக்கு மொத்தம் 613. 8 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வெளிநாட்டுப் பணம் அனுப்பப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி, 2024 ஆம் ஆண்டிற்கான வெளிநாட்டுப் பணவனுப்பல்களின் மொத்த மதிப்பு 6,575.4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 10.1 சதவீத அதிகரிப்பாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ)

## அநுரகுமாரவின்..

உறவுகளுக்கு, மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின் றது.

இந்த விஜயத்தின்போது, சீன ஜனாதிபதிக் கும் இலங்கை ஜனாதிபதிக்கு இடையில் சந்திப்பு இடம்பெறவுள்ளதாகவும் சீனாவின் குளோபல் ரைம்ஸ் குறிப்பிட்டுள்ளது. (அ)

## வாகனங்களின்...

வரி வீதம் விசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவினால் வெளியிடப்பட்டுள்ள இந்த வர்த்தமானி அறிவித்தல் நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ளது.

அதன்படி, உற்பத்தி செய்யப்பட்ட நாளிலிருந்து 10 ஆண்டுகளுக்கு மேற்படாத வாகனங்களுக்கு 200 வீதம் மற்றும் 300 வீதம் வரிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

சில வகையான வாகனங்களுக்கு அவற்றின் இயந்திர திறன் அடிப்படையாகக் கொண்டு வரிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

இந்த வரி வீதங்களின்படி, இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் விலைகளும் வெற் வரி நீங்கலாக, 15 முதல் 20 வீதம் வரை அதிகரிக்கக்கூடும் என இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

## கட்டுநாயக்க...

அதேவேளை, புதிய கடவுச்சீட்டின் மூலம் இப்போதுவரை 4 வெளிநாட்டு பயணங்களை சிறீதரன் மேற்கொண்டிருந்தார் என்பதால் இந்த திடீர் தடை எப்படி ஏற்பட்டது என்பது கேள்விகளை எழுப்பியுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கு பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும், பயங்கரவாத குற்றத்தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினரிடம் அவரை ஒப்படைக்குமாறு தமக்கு பணிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் நீண்ட நேர விசாரணைகளின் பின்னர் அவரை இந்தியப் பயணத்துக்கு நேற்று அனுமதித்திருந்தனர்.

சென்னை - நந்தம்பாக்கத்தில், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறவுள்ள அயலகத் தமிழர் தின விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொள்ளும் பொருட்டு நேற்று தினம் இந்தியப் பயணத்துக்காக கட்டுநாயக்க விமானநிலையத்துக்கு சென்றபோதே பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் நீண்டநேர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

குறித்த பயணத்துக்கு அனுமதிக்க முடியாதென்ற அடிப்படையில் நடைபெற்ற நீண்டநேர விசாரணைகளின்போது, இந்தியப் பயணத்திற்காக வருகைதந்த முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீமும் பல்வேறு பிரயத்தனங்களை முன்னெடுத்ததன் அடிப்படையில், பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் இந்தியா செல்ல அனுமதிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## தமிழ்...

கொண்டு தமிழ் மக்களுடைய தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்குரிய நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுக்க வேண்டும்.

அதற்கு நாங்கள் எல்லோரும் முதலில் ஒற்றுமைப்பட வேண்டும். இன்றிருக்கின்ற நிலைமையில் அத்தகைய ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கின்றது.

ஏனெனில் தமிழ்த் தேசியத்திடன் பயணிக்கின்ற எமது வடக்கு, கிழக்கு மக்கள் கடந்த தேர்தலில் அதற்கு மாறான பயணத்தில் ஈடுபட்டிருப்பது தெரிகின்றது.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தைத் தவிர்த்துவிட்டு வடக்கை எடுத்துப் பார்த்தால் அதிலும் யாழ்ப்பாணம் மிக மோசமான முடிவுகளை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான நிலைமைகள் தொடர்வது தமிழினத்துக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தலாம். ஆகையினால் எங்களுக்கிடையே உள்ள வேற்றுமைகளைக் களைந்து ஒற்றுமையை ஏற்படுத்துவதன் ஊடாகத் தமிழ்த் தேசியத்தை வலுப்படுத்தலாம்.

அவ்வாறான ஒற்றுமையைத்தான் எமது மக்கள் எதிர்பார்க்கின்றனர். ஆகையினால் அத்தகைய ஒற்றுமையை ஏற்படுத்தி தமிழ் மக்களையும் இணைத்துக் கொண்டு தமிழ்த் தேசியத்தைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்-என்றார். (அ)

## தற்போது...

ஜயதிஸ்ஸ ஊடகங்கள் தொடர் பில் பொருத்தமற்ற கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார். சில சந்தர்ப்பங்களில் கருத்து வெளியிடுகையில், பத்திரிகைகளின் பெயர்களைக் குறிப்பிடுகின்றார்.

**அரசு பதற்றம்**

நாடாளுமன்றத்தில் தொலைக்காட்சி அலைவரிசைகளின் பெயர்களைக்கூறி உரையாற்றுகின்றார். நான் கடந்த காலங்களில் ஊடகத்துறை அமைச்சில் பணியாற்றியவன் என்ற ரீதியில், தற்போதைய அரசு ஊடகத்துறையைக் கையாளும் விதம் மிகவும் ஆபத்தானது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அரசு தற்போது பதற்றமடைந்து துலங்கலை வெளிக்காட்டும் நிலையை அடைந்திருக்கின்றது. வெவ்வேறு சம்பவங்கள் தொடர்பில் ஊடகங்கள் மாறுபட்ட கருத்துக்களை வெளியிடக்கூடும்.

இருப்பினும் நாம் அதனைப் பொறுமையுடன் கையாண்டு, அதற்கு அறிவார்ந்த ரீதியில் பதிலளிக்க வேண்டும். மாறாக ஊடகங்கள் தமக்கு ஏற்றவாறு அல்லது தமக்குச் சார்பாக செயற்படவில்லை என அரசு பதற்றம் அடையக்கூடாது.

**பொருளாதாரக் கொள்கை**

எனவே, பிரதமர், ஊடகத்துறை அமைச்சர் உள்ளிட்ட அரசின் பிரதிநிதிகள் ஊடகங்களைப் பெயர் குறிப்பிட்டுத் தாக்குவதை உடனடியாக நிறுத்த வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதியின் பொருளாதாரத் திட்டங்களைத் தவறு என்று தேசிய மக்கள் சக்தியினர் விமர்சித்தனர்.

தாம் புதிய பொருளாதாரக் கொள்கையைக் கொண்டு வருவதாகக் கூறியே அவர்கள் ஆட்சிப்பீடம் ஏறினார்கள். ஆனால், ரணிலின் பொருளாதாரக் கொள்கைகளையே தற்போதைய அரசினரும் மாற்றமின்றிப் பின்பற்றுகின்றனர - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

## போதைபொருள்களுடன் 56 பேர் கைது!

கொழும்பு, ஜன. 12

கிளீன் சிறிலங்கா வேலைத்திட்டத்திற்கமைய, முன்னெடுக்கப்படும் போதைப்பொருள் சோதனைகளில் 56 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுத்துறை வடக்கு மற்றும் பாணந்துறை - மோதரவில ஆகிய பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புகளின்போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினரும் இணைந்து இந்த சுற்றிவளைப்புகளை முன்னெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, களுத்துறை பகுதியிலுள்ள தொடர்மாடி குடியிருப்புத் தொகுதியொன்றில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் பல்வேறு போதைப்பொருட்களுடன் 21 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், பாணத்துறை - மோதரவில பகுதியிலுள்ள குடியிருப்பு தொகுதியொன்றில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில், போதைப் பொருட்களுடன் 35 பேர் கைதாகியுள்ளனர். (அ)

## போலியான விஸாவை பயன்படுத்தி ஜேர்மனி செல்ல முயன்றவர் கைது!

கொழும்பு, ஜன. 12

போலி ஜேர்மனி விஸாவை பயன்படுத்தி ஜேர்மனிக்கு செல்ல முற்பட்ட ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விமான நிலைய குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் எல்லை நிர்ணய கண்காணிப்பு பிரிவின் அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் யாழ்ப்பாணம் - இளவாலை பகுதியைச் சேர்ந்த 35 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர், புதுடில்லி சென்று பின்னர் அங்கிருந்து, மற்றுமொரு விமானத்தில் ஜேர்மனி நோக்கி பயணிக்க முற்பட்ட சந்தர்ப்பத்திலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் வழங்கிய ஆவணங்களின் அடிப்படையில் முன்வைக்கப்பட்ட தொழில்நுட்ப சோதனையில் ஜேர்மனி நாட்டுக்கான விஸா போலியானது என தெரிய வந்துள்ளது.

## கடலில் மிதந்த ரூ.36 மில்லியன் பெறுமதியான கேரளக் கஞ்சா!



கொழும்பு, ஜன. 12

புத்தளம், கற்பிட்டி - கப்பலடி கடற்பகுதியில் இருந்து ஒரு தொகை கேரள கஞ்சா நேற்று முன் தினம் மாலை கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளன.

வடமேற்கு கடற்படையின் கரையோர ரோந்துக் கப்பல் நேற்று முன் தினம் குறித்த கடற்பகுதியில் விசேட ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

இதன்போது, குறித்த கடற் பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் கடலில் மூன்று பெரிய பொதிகள் மிதந்துகொண்டிருந்ததை அவதானித்த கடற்படையினர் அதனை சோதனை செய்தனர்.

சிறிய பொதிகளாக அடைக்கப்பட்ட நிலையில் 30 சிறிய பொதிகளில் கேரளக் கஞ்சா இருந்தமை தெரிய வந்தது.

இவ்வாறு கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட கேரளக் கஞ்சா 90 கிலோ 45 கிராம் எனவும் அதன் சந்தை பெறுமதி 36 மில்லியனுக்கும் அதிக பெறுமதியுடையது என்றும் மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் கடற்படையினர் குறிப்பிட்டனர்.

இலங்கையின் பல்வேறு பகுதிகளுக்கு விற்பனை செய்யும் நோக்கில் கடல் மார்க்கமாக கடத்தி வரப்பட்டுள்ள குறித்த கேரளக் கஞ்சா பொதிகளை, கடற்படையினரின் கெடுபிடிகள் காரணமாக கடத்தல்காரர்கள் இவ்வாறு கடலில் கைவிட்டுச் சென்றிருக்கலாம் என தாம் சந்தேகிப்பதாகவும் கடற்படையினர் கூறினர். (அ)

## கோட்டாபய அரசால் இரத்துச் செய்யப்பட்ட ஓய்வூதிய சம்பள அதிகரிப்பு மீள நடைமுறை

கொழும்பு, ஜன. 12

**2020ஆம் ஆண்டில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்தால் இரத்துச் செய்யப்பட்ட ஓய்வூதிய சம்பள அதிகரிப்பு நடைமுறையை மீண்டும் அமுல்படுத்த தற்போதைய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

2016 ஜனவரி முதலாம் திகதி முதல் 2019 டிசம்பர் 31ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்காகவும் குறித்த ஓய்வூதிய சம்பள அதிகரிப்பு பெற்றுக்கொடுக்கப்படும் என தொழில் பிரதியமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என பிரதியமைச்சர் குறிப்பிட்டார். (அ)

## அதிக வேகத்துடன் வாகனங்களை செலுத்தும் சாரதிகளை அடையாளம் காண நடவடிக்கை

கொழும்பு, ஜன. 12

அதிக வேகத்துடன் வாகனங்களை செலுத்தும் சாரதிகளை அடையாளம் காண 91 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான 30 வேகமானிகள் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த 30 வேகமானிகளும் பொலிஸ் போக்குவரத்து உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதற்கான நிகழ்வு பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த விஜேசூரியவின் தலைமையில் நேற்று முற்பகல் காவல்துறை தலைமையகத்தில் இடம்பெற்றது.

அதன்படி, அதன் முதற்கட்டமாக நீர்கொழும்பு, களனி, கம்பஹா ஆகிய பொலிஸ் பிரிவுகளுக்கு பொறுப்பான அதிகாரிகளுக்கும், மேல் மாகாண தெற்கு போக்குவரத்து பிரிவு பணிப்பாளருக்கும் அமெரிக்க தயாரிப்பிலான குறித்த வேகமானிகள் வழங்கப்பட்டுள்ளன. (அ)

### கொலையாளிகளை விடுவிக்கப்படும்போது

## இனவிடுதலைக்கு போராடியவர்களை அரசு ஏன் விடுதலை செய்யக்கூடாது?




மட்டக்களப்பு, ஜன.12

கடந்த ஆட்சிக்காலத்தில் படுகொலையாளிகள் கூட பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டிருந்த நிலையில், தமிழ் மக்களின் விடுதலைக்காக போராடியவர்களை ஏன் விடுதலை செய்யக்கூடாது என மட்டக்களப்பு மாவட்ட இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறீநேசன் கேள்வியெழுப்பியுள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரி வடக்கு - கிழக்கில் முன்னெடுக்கப்பட்டுவரும் கையெழுத்துப் போராட்டம் நேற்றைய தினம் கிழக்கு மாகாணத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

போராளிகள் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் வடகிழக்கில் முன்னெடுக்கப்பட்டுவரும் இந்த போராட்டமானது மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த சிறீநேசன் மேலும் கூறுகையில்,

பல ஆண்டுகளாக சிறையில் வாடிக்கொண்டிருக்கின்ற, எமது விடுதலைக்காக போராடிய தமிழ் கைதிகளை விடுதலை செய்யவேண்டும் என்கிற அறவழிப் போராட்டத்தை தற்போது முன்னெடுத்திருக்கின்றனர்.

பயங்கரவாத தடைச் சட்டம் எனும் பெயரில் மிக மோசமான, மனித குலத்துக்கு எதிரான சட்டம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. இதன் மூலம் அப்பாவிகளை கூட பயங்கரவாதிகள் என்ற பார்வைக்கு உட்படுத்தப்படும் மிக மோசமான செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

தற்போது ஆட்சிக்கு வந்த அரசாங்கம் இந்த சட்டத்தை நீக்குவோம் என்னும் உத்தரவாதத்தை வழங்கியும் கூட இன்னும் அந்த பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படவில்லை.

இந்த நிலையில், இந்த கொடிய பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் எமது பத்து தமிழ் அரசியல் கைதிகள் தொடர்ந்து தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் விரைவாக விடுதலை செய்யப்படவேண்டும். இவர்கள் நீண்டகாலமாக சிறைச்சாலையில் நாட்களை கழித்து விட்டார்கள். இருக்கும் காலத்திலாவது தமது உறவுகளுடன் இணைந்து வாழ்வதற்கு மாற்றத்தை உருவாக்கப் போவதாகக் கூறும் புதிய அரசாங்கம் அதனை செய்ய வேண்டும் - என்றார். (எ)

## அடுக்குமாடி குடியிருப்பில் இருந்து வீழ்ந்து 16 வயது சிறுமி உயிரிழப்பு

கொழும்பு, ஜன. 12

பொரளையில் உள்ள 24 மாடி அடுக்குமாடி குடியிருப்பின் 12 ஆவது மாடியில் இருந்து விழுந்து 16 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த சிறுமி, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

பொரளை, சர்பன்டைன் வீதியைச் சேர்ந்த 16 வயதுடைய மாணவி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த சிறுமியின் தாயார், மன அழுத்தம் காரணமாக சிறிது காலமாக சிகிச்சை பெற்று வந்ததாகக் கூறப்படுகிறது.

இருப்பினும், சிறுமி குறித்த மாடியில் இருந்து குதித்தாரா அல்லது விழுந்தாரா என்பதை அறிய பொரளை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

## 3000 கிராம அலுவலர் பதவி வெற்றிடங்கள்!

கொழும்பு, ஜன. 12

நாடளாவிய ரீதியில் கிராம உத்தியோகத்தர்களுக்கான சுமார் 3000 வெற்றிடங்கள் காணப்படுவதாக பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக கிராம உத்தியோகத்தர்கள் பல களங்களின் பணிகளை பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன குறிப்பிட்டார்.

தற்போதுள்ள சூழ்நிலையை கருத்தில் கொண்டு காலி பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்படும்.

இதேவேளை, கிராம உத்தியோகத்தர்களின் சேவை அமைப்பு உள்ளிட்ட பல பிரச்னைகளுக்கு விரைவான தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இது தொடர்பில் தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் ஏற்கனவே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.01.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.